# விடுதலைப்புலிகள்

குரல் – 111 | புரட்டாதி – ஐப்பசி, 2003 | அன்பளிப்பு – 10/-



கோதிநிலையில் சிங்களா அரசியல் - 06
தமிழ் - முஸ்லிம் உறவு... - 05
பொங்குதமிழ் எழுச்சியும்... - 08
சிங்கள படைகளும் தென்தமிழீழ... - 07
யுத்தத்திற்குள்ளும் கட்டி வளர்... - 04


## இடைக்கால அதிகாரசபையை ஏற்றுக்கொள்வதே

# சவால்கள் நிறைந்த சமாதானத்தில் புதிய அனுகூலத்தை உருவாக்கும்

**போரால் சிதைவடைந்துள்ள வடக்கு-கிழக்கைப் புனரமைத்து மக்களை மீளக்குடியமர்த்தி - அவர்களது தொழில்களுக்கு வழிவகைகளைச் செய்துகொடுத்து ஒரு இயல்புநிலையை உருவாக்கும் நோக்கத்துடன் ஒரு இடைக்கால அரசின் தேவைபற்றி புலிகள் இயக்கம் அறிவித்திருந்தது. அந்த இடைக்கால அரசு எவ்விதம் செயற்படவேண்டும் - எத்தகைய அதிகாரங்களை - கடமைகளை கொண்டிருக்கவேண்டும் என்று ஒரு திட்டவரைபை புலிகள் இயக்கம் வெளியிட்டுள்ளது. நோர்வே ஊடாக சிறிலங்கா அரசிடம் 31 ஒக்ரோபர் 2003 அன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த "இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை"யை நிறுவுவதற்கான ஓர் உடன்படிக்கைக்கு தமிழ்மக்கள் சார்பாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைக்கும் ஆலோசனை வரைபை மக்களின் பார்வைக்காக இங்கே முழுமையாகத் தருகின்றோம்.**

இலங்கைத்தீவின் வடக்குக் கிழக்கில் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையை நிறுவுவதற்கான ஓர் உடன்படிக்கைக்கு தமிழ்மக்கள் சார்பாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைக்கும் ஆலோசனை:

சட்டத்தின் ஆட்சிக்கான கோட்பாடுகள், மனித உரிமைகள், அனைத்து நபர்களதும் சமத்துவம் மற்றும் மக்களது சுயநிர்ணய உரிமைக்கு அமைவாகவும்,

இலங்கைத் தீவின் அனைத்து நபர்களுக்கும் நிலையான அமைதியைக் கொண்டுவருவதற்கு உறுதிபூண்டும்,

இத்தீவில் அமைதியைக் கொண்டுவருவதற்கு மாண்புமிகு நோர்வே அரசும் நோர்வே மக்களும் சர்வதேச சமூகமும் ஆற்றும் சேவைகளைப் பாராட்டி ஏற்றுக்கொண்டு,

தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்குமிடையிலான சமாதான நடவடிக்கைகள் சவால்கள் நிறைந்த வரலாறாக அமைந்திருந்தாலும், அமைதி வழியிலான தீர்விற்கு உண்மையான வாய்ப்பு இருப்பதை இனம்கண்டு,

இறுதித் தீர்வை அடைவதற்கான செயல்முறை தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்க, சட்டங்களையும் கொள்கைகளையும் வகுத்து, வடக்குக் கிழக்கிலே மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி ஆகிய பணிகள் அனைத்தையும் செயற்றிறனுடன் விரைவாக நிறைவேற்றுவதன் மூலம் வடக்குக் கிழக்கு மக்களது உடனடித் தேவைகளை வழங்குவதற்காக வடக்குக் கிழக்குப் பிராந்தியத்திற்கு ஓர் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையை நிறுவுவதற்கு உறுதிபூண்டு,

தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையிலான உறவுகள் பற்றிய வரலாறு, வாக்குறுதிகளை மீறிய ஒரு செயல்முறையாக இருந்தமையையும் இலங்கை அரசாங்கத்திற்கும் தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்பட்ட தமிழ் மக்களது பிரதிநிதிகளுக்கும் இடையே காத்திரமாகச் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் அடுத்தடுத்துப் பதவிக்குவந்த இலங்கை அரசாங்கங்களால் ஒருதலைப்பட்சமாக, மதிக்கப்படாது முடிவிற்குக் கொண்டுவந்தமையையும் கவனத்திலெடுத்து,

அடுத்தடுத்துப் பதவிக்குவந்த அரசாங்கங்கள் தமிழ்மக்களுக்கு எதிராக மேற்கொண்ட இனரீதியான துன்புறுத்தல், பாரபட்சம், அரசவன்முறை மற்றும் அரசு

(தொடர்ச்சி 03ம் பக்கம்)



**தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு**

www.eelamview.com

# செயலுக்கான தருணம் சிங்கள அரசிற்கு வந்துவிட்டது

உத்தேச இடைக்கால வரையை புலிகள் இயக்கம் சமர்ப்பித்துவிட்டது. இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை (ISGA) என்று அதற்குப் புலிகள் இயக்கம் பெயர் சூட்டியுள்ளது.

தமிழர் தாயகத்தை நிர்வகிப்பதற்குத் தேவையான அனைத்து அதிகாரங்களையும் கொண்டதாக இந்த மாதிரி வரைபு உருவாக்கப்பட்டுள்ளது.

அதேசமயம், வடக்கு-கிழக்கு மாநிலங்களில் வதியும் அனைத்து மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையிலும் அந்த அதிகாரசபை ஆக்கப்பட்டுள்ளது.

ஜனநாயகம் - மனிதஉரிமை - இன ஒற்றுமை என்பவை பேணப்படும் வகையிலும் மதச்சார்பின்மைக்கு முக்கிய இடமளித்தும் வரைபு தயாரிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத்தீவின் ஆட்சியியல் வரலாற்றில் சிறந்ததொரு முன்மாதிரியான ஆட்சியமைப்பைக் கொண்ட ஒரு நிருவாக இயந்திரமாக இந்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைக்கான ஆலோசனை விளங்குகின்றது.

இலங்கைத்தீவின் கடந்த அரைநூற்றாண்டு காலத்திற்கும் மேலாக தமிழ்மக்கள் இனரீதியாக ஒடுக்கப்பட்ட வரலாற்றை சுருக்கமாக கூறியுள்ள இந்த ஆவணம் அரசியல் ரீதியாக தமிழ்மக்கள் ஒற்றப்பட்ட - புறக்கணிக்கப்பட்ட நிலையையும் எடுத்தியம்பியுள்ளது.

இந்த துயரமான வரலாற்று அனுபவத்தை அடிப்படையாகக்கொண்டு இனிமேலும் அத்தகைய அநீதிகளிலிருந்து தமிழ்மக்களை பாதுகாத்து - அவர்களை இயல்பு வாழ்க்கைக்கு இட்டுச்செல்லும் இலக்குடன் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைக்கான அதிகாரங்கள் கோரப்பட்டுள்ளன.

வடக்கு-கிழக்கு மக்களின் பொருளாதாரவாழ்வை மேம்படுத்தும் திட்டங்களும் - அதற்கான நிதிகளைப் பயன்படுத்துவது உட்பட போரால் பாதிக்கப்பட்ட தமிழ்மக்களின் புனர்வாழ்வு - மீள்குடியமர்வு - அபிவிருத்தி போன்றவற்றை முழுமையாகச் செயற்படுத்தவல்ல நிருவாக இயந்திரமாக இந்த இடைக்கால அதிகாரசபை அமையும்.

போர்நிறுத்த ஒப்பந்தம் போன்றே இந்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை பிணக்குகள் இன்றியும் பிணக்குகளை தீர்த்தும் இயக்கும் நோக்குடன் சர்வதேச சமூகமும் இந்த அதிகாரசபையின் செயற்பாடுகளில் இணைக்கப்பட்டுள்ளது. எனவே, முன்னைய காலங்களைப்போல அல்லாது செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைகளை சிங்கள அரசு அமுல்படுத்தவேண்டிய நிலை ஏற்படும்.

எல்லாவற்றிற்கும் மேலாக வடக்கு-கிழக்கின் காணி, மற்றும் கடல் சம்பந்தப்பட்ட அதிகாரம் முழுமையாக இடைக்கால அதிகாரசபையிடம் இருப்பதால் எமது மக்களின் அன்றாட வாழ்வும் - தொழிலும் பாதுகாப்பானதாகவும் - கௌரவமானதாகவும் மாறும்.

வடக்கு-கிழக்கில் வாழும் முஸ்லீம் மற்றும் சிங்கள மக்களின் அச்சங்களைப் போக்கும் வகையில் அவர்களுக்கு அதிகாரசபையில் அங்கத்துவமும் - பங்கும் வழங்கப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்தத்தில் வடக்கு-கிழக்கு மாநிலங்களில் வாழும் அனைத்து மக்களும் சுதந்திரமாகவும் - கௌரவமாகவும் வாழ வழிவகை செய்யப்பட்டுள்ளதுடன் தமிழ்மக்களுக்கு கிடைக்கும் அதே நீதியும் - பயன்பாடுகளும் முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களுக்கும் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. அனைத்து மக்களையும் அரவணைக்கும் விதத்தில் சட்ட வரைபுகளையும் வழங்கியுள்ளது. சர்வதேச சமூகத்தின் ஆதரவையும் கோரியுள்ளது.

இன்றைய நிலையில் தமிழ்மக்கள் முன்னாலுள்ள கேள்வி என்னவென்றால் இந்த திட்டவரைபை சிங்கள அரசு ஏற்றுக்கொள்ளுமா! என்பதேயாகும்.

புலிகளிடம், வட-கிழக்கின் இடைக்கால ஆட்சியை வழங்க, ஐ.தே.முன்னணி அரசாங்கம் முன்னரே, வாக்குறுதி அளித்திருந்தது. புலிகள் சமர்ப்பிக்கவுள்ள இடைக்கால நிருவாக யோசனைகளை சாதகமாகப் பரிசீலிக்கப்போவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அவர்களும் ஏற்கனவே கூறியுள்ளார்.

தமிழரின் இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வைப் பொறுத்தவகையில் ரணில் அரசாங்கத்தின் வாக்குறுதிகளும் - கூற்றுக்களும் உண்மையானவையா! அல்லது அவை வெறும் வார்த்தைதானா! என்பதை தமிழ்மக்களும் - உலக சமூகமும் தெரிந்துகொள்ளும் காலம் நெருங்கிவிட்டது.

புலிகள் சமர்ப்பித்துள்ள திட்டவரைபை சிங்கள அரசு ஏற்றுக்கொண்டு, தமிழ்-சிங்கள இனப்பிரச்சனைக்கு அமைதி வழியில் அரசியல் தீர்வு காணும் வகையில் சிங்கள அரசு நேர்மையுடன் செயற்படவேண்டும் என்பதே புலிகள் இயக்கத்தின் விருப்பமாகும். ●

# சமாதானம் இடைநிரப்பல்ல

ஒக்ரோபர்-31 ஈழத்தமிழன் தன் ஆதிபத்தியத்தை, இறுதி மன்னன் பண்டாரவன்னியனின் வீழ்ச்சியுடன் இழந்துபோன நாள். நவம்பர்-01 ஈழத்தமிழன் தனது துயரம் மிகுந்த இருநூறு ஆண்டுகால வரலாற்றிலிருந்து மீண்டெழுந்து தனது ஆதிபத்தியத்தை மீண்டும் நிலைநாட்டப் போராடிமடிந்த வீரர்களை நினைவு கொள்ளும் மாவீரர் மாதத்தின் தொடக்கநாள். அந்நாளே இன்றைய சமாதானத்தை சிருஸ்டிக்க மூலகாரணமாயிருந்த ஓயாத அலைகள் - 03 இன் தொடக்க நாள். அத்தகைய ஒக்டோபர்-31இல், யுத்தம் செய்த தமிழன் சமாதானம் மூலமான தீர்வு முயற்சிக்காக ஒரு அரசியல் - இடைக்கால - திட்ட வரைபை முன்வைத்து நவம்பர்-01இல் அதனை வெளியுலகத்திற்கு அம்பலப்படுத்துகிறான்.

எல்லா யுத்தங்களினதும் இறுதியான குறிக்கோள் யுத்தத்தைப் புறந்தள்ளி அமைதியான வாழ்வை எட்டுவதே. அமைதியான வாழ்வின் இயல்பான ஓட்டம் தடைப்படும்போதும் நெருக்கடிக்குள்ளாகும்போதும் இயல்புடனான அதன் பயணம் இயலாது போகும்போதும் அமைதியான வாழ்வு யுத்தப்பாதையினூடாகப் பயணிக்கிறது. எனவே யுத்தம் அமைதி வாழ்வின் இயல்புதான். யுத்தப்பாதையால் அதன் பயணம் மீண்டும் தனக்கான தடைப்பட்டுப்போன பாதையை வந்தடைவதே அன்றி யுத்தத்தின் அகோரத்தை தனதாக்கிக் கொள்வதல்ல. எனவே யுத்தம் சமாதானத்தை நாடுவது இயல்பானதுதான்.

எல்லா நீண்ட யுத்தங்களின்போதும் சமரசப் பேச்சுக்கள் வரும். ஆனால் எல்லா சமரசப் பேச்சுக்களிலிருந்தும் தீர்வு வந்துவிடுவதில்லை. ஏனெனில் இராஜதந்திர உலகில் தீர்வு ஒன்றையே இலக்காக வைத்து சமரசப் பேச்சுக்கள் நடப்பதில்லை. அத்தகைய தருணங்களிலெல்லாம் சமரசப் பேச்சும் யுத்தத்தின் நீட்டிப்பாக வடிவம் மாறிய யுத்தமாக இருக்குமே தவிர அது தன் பாதையை மாற்றிப் பயணிப்பதாக அர்த்தம் கொள்ளமுடியாது.

யுத்தம் தனக்கான இலக்கை எட்டாது யுத்தம் புரியும் மக்களால் யுத்தத்திற்கான அரசியல் குறிக்கோளை எட்டமுடிவதில்லை.

யுத்தத்திற்கான இலக்கென்பது எதிரியை போரில் மேற்கொண்டு இயலாதவனாக்குவது தான். அப்போதே மெய்யான சமாதானம் பிறப்பதற்கான வாய்ப்பு உருவாக்கப்படும். அதுவல்லாமல் மேற்கொண்டு போரிற்கு இயலாத ஒரு கட்டத்திற்கும் இயலுமையை மேற்கொண்டு பெற்றுக் கொள்வதற்கான காலத்திற்கும் தொடுப்பாக, நிரப்பிடாக சமரசப்பேச்சு வருவதுண்டு. அது யுத்தத்தின் நீட்சியே. யுத்தமே அன்றி பிறிதொன்றாக பொருள்கொள்ள இயலாதது; கூடாதது.

ஈழத்தமிழ் ஆயுதப் போராட்டத்தின் அனுபவத்தில் பல சமரசப் பேச்சுக்களை இந்த ஞானத்தின் வழிப்பட்டு கண்டிருக்கிறோம். மாற்றுத் தலையீடு, நிர்ப்பந்தங்கள் இன்றி சுயமாக இலங்கை அரசு சமரசப்பேச்சுக்கு இணைந்து முன்வந்தது முதல் தடவை 1990இல். அப்பொழுது அவர்களுக்கான அகப்புற நிலைமைகளும் தேவைகளும் இப்படியிருந்தன:

ஒன்று, இந்தியா மீதான அச்சம் காரணமாக இந்திய இராணுவத்தை வெளியேற்றவேண்டி புலிகளுடனான பேச்சுக்கு முன்வரவேண்டியிருந்தது.

இரண்டு, இந்திய இராணுவத்துடனான புலிகளின் யுத்தத்தினால் புலிகள் ஆயுத, ஆளணி அர்த்தத்திலும், யுத்த தந்திரத்தை உள்ளடக்கிய போராற்றலிலும் முன்பிருந்த இலங்கை இராணுவத்தை விடவும் விருத்தியடைந்திருந்தனர்.

மூன்று, ஜே.வி.பி என்ற ஆயுதக் கிளர்ச்சிக்குழு தெற்கில் பலமடைந்திருந்ததால் சமநேரத்தில் இருமுனைத் தாக்குதல்களுக்கு முகம் கொடுக்கவேண்டி இருக்கும் என்பதும் ஜே.வி.பி மீது முதற் கவனத்தைச் செலுத்தவேண்டியிருந்தது.

நான்கு, அப்போது ஆட்சியிலிருந்த ஆர்பிரேமதாசா கட்சிக்குள் தன்னை ஸ்திரப்படுத்த வேண்டியிருந்தது.

இத்தகைய நிலைமைகளின்கீழ் புலிகளுடனான யுத்தத்தை உடனடியாகத் தவிர்ப்பது புலிகள் மீது யுத்தம் தொடர்வதற்கான முன்நிபந்தனையாக இருந்தது. இதனால் ஒரு சமரசப் பேச்சை ஈழத்தமிழன் சந்தித்தான்.

இரண்டாவது சமரசப்பேச்சு 1994இல் சந்திரிகா ஆட்சிக்கு வந்தபோது மீண்டும் வந்தது. அவருக்கான அப்போதைய நிலைமையில், 17 வருடத்தின்பின் ஐ.தே.க விடமிருந்து கைப்பற்றிய பாராளுமன்றத்தை, ஐ.தே.க வின் கைகளிலிருந்த ஜனாதிபதி அதிகாரத்தைக் கைப்பற்றும் வரை தக்கவைக்கவேண்டியிருந்தது.

இரண்டாவது, புலிகள் யுத்தத்தின் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு - அதிதொழில்பு யுத்தம் என்ற தரத்திற்கு - தம்மை மேலுயர்த்திவிட்டார்கள் என்பதை பூநகரி இராணுவ, கடற்படைத்தளம் மீதான தவளை நடவடிக்கை மூலம் வெளிக்காட்டியிருந்தமை. யுத்தச் சமநிலையில் புலிகள் மேலோங்கி வருவதான நிலைமை உணரப்பட்டிருந்தது.

மூன்றாவது 17வருடகாலமாக ஐ.தே.கவின் வசமாக மாறிவிட்ட நாட்டின் நிர்வாக இயந்திரத்தையும் அதன் அதிகாரிகளையும் (படைகள் உட்பட) மாற்றி அமைக்காமல் நாட்டை ஆட்சி செய்வது சாத்தியமற்று இருந்தது. இத்தகைய நிலைமைகளிலும் யுத்தத்தைத் தவிர்ப்பதே யுத்தத்தை முன்னெடுப்பதற்கான முன்நிபந்தனையாக இருந்தது. அல்லாதுவிடின் புலிகளுக்கு வாய்ப்பான தருணத்தை வழங்கியதாகிவிடும்.

இப்போதைய சமரசம் 2000இல் ஆரம்பிக்கப்பட்டதுதான். அது ஓயாத அலைகள்-03 ஆல் மாற்றி எழுதப்பட்ட இராணுவ வலுச்சம நிலையால் சந்திரிகா அரசாங்கத்தை முன்வரத் தூண்டியது. பின்பு நீச்சலலையின் நிர்ணயமான தோல்வி புலிகள் அடைந்த வலுச்சமநிலை சாதகத்தை திட்டவட்டமாக வெளிக்காட்டியதுடன் நடந்த தென்னிலங்கை அரசியல் மாற்றம் பேச்சில் இலங்கை அரசை இணைந்துவர அழைத்தது.

ரணிலின் சர்வதேச பாதுகாப்பு வலைப் பின்னல், இந்திய-இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம் என் பவற்றின் சூக்குமங்கள் புலிகளுக்குப் புரியாததல்ல. ஆனால் சர்வதேச சமூகம் சமரச வழிமூலம் இப்பிரச்சனை இத்துடன் தீர்க்கப்படவேண்டும் என்று விருப்புற்றிருப்பதும் ஆர்வம் காட்டுவதும் கூட புலிகளுக்குப் புரியாததல்ல.

ஆனால், அது நிறைவேறவேண்டுமென்ற சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்பும் தமிழ்மக்களின் அவாவும் யுத்தத்தைத் தொடருவதற்கான இயலுமையை இலங்கை அரசு தான் பெற்றுவிடமுடியும் என்ற நம்பிக்கையை சர்வதேச சக்திமிக்க நாடுகள் வழங்காதிருப்பதிலும் வழி செய்யாதிருப்பதிலும் துணைபோகாதிருப்பதிலும்தான் தங்கியிருக்கிறது.

அல்லாவிடின் இச்சமரசமும் யுத்தத்தின் இயலாமைக்கும் இயலுமையை அடைவதற்குமான இடைநிரப்பீடாக அமையுமே அன்றி தீர்வை இலக்காகக் கொள்ளப்போவதில்லை.

புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாகசபை வரையின் எதிரொலிகள் இதன் மெய்யான நிலைமையை அதிகம் பிரதிபலிக்கப்போகிறது. அதன் எத்தகைய பிரதிபலிப்புக்கும் சர்வதேச சமூகமே அதிக பொறுப்பாக இருக்கும்.

—பிரபுத்திரன்—






www.eelamview.com

# இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைக்கான தமிழீழ விடுதலைப்புலிகளது பிரேரணை

(01ம் பக்கத் தொடர்ச்சி)

கள் பின்னிருந்து நடாத்திய வன்முறை ஆகியனவற்றை **மனதில் நிறுத்தியும்,**

1976ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட வட்டுக்கோட்டைத் தீர்மானத்தைத் தொடர்ந்து நடைபெற்ற தேர்தலில் தமிழ்மக்களுக்கு ஒரு சுதந்திர, இறைமையுள்ள, மதசார்பற்ற அரசை அமைக்குமாறு தமிழ்மக்கள் தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்பட்ட தமது பிரதிநிதிகளுக்கு ஆணை வழங்கியிருந்தமையைக் **கவனத்திலெடுத்தும்,**

நான்கு தசாப்தங்களுக்கு மேலாக, வன்முறையின்றி அமைதிவழியில் மேற்கொள்ளப்பட்ட அரசியலமைப்பு வரையறைக்குள் அமைந்த போராட்டம் பயனற்றதென நிரூபிக்கப்பட்டு, முரண்பாட்டை அமைதிவழியில் தீர்ப்பதற்கான மார்க்கங்கள் இல்லாது போனபின்னர்தான், ஒரு தற்காப்பு நடவடிக்கையாகவும் தமிழரது சுயநிர்ணய உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான ஒரு வழிமுறையாகவுமே தமிழரது ஆயுதப் போராட்டம் தொடங்கியது என்பதை **மனதில் நிறுத்தியும,**

முதலில் டிசம்பர் 2000இலும் பின்னர் டிசம்பர் 2001இலும் ஒருதலைப்பட்சமாகப் போர்நிறுத்தத்தைப் பிரகடனப்படுத்தி, நெடுஞ்சாலைகளைத் திறந்து, வர்த்தகத்திற்கும் மக்களது சுதந்திரமான நடமாட்டத்திற்கும் அனுசரணை வழங்கி, இயல்புநிலை திரும்புவதற்கான ஒரு உகந்த சூழலையும் முரண்பாட்டிற்கு ஒரு நீதியான தீர்வையும் காணும் நம்பிக்கையோடு சமாதானப் பேச்சுக்களுக்குள் நேர்மையாக இறங்கி, சமாதானம் நோக்கிய நடவடிக்கைகளை தமிழீழ விடுதலைப் புலிகளே முதலில் முன்னெடுத்தார்கள் என்பதை **மீள நினைவுபடுத்தியும,**

2001 போர்நிறுத்த அறிவிப்பிற்கு மதிப்பளித்து தற்போதைய இலங்கை அரசாங்கம் தானும் ஓர் போர்நிறுத்தத்தை அறிவித்ததிலுள்ள அரசியல் துணிவைக் **கவனத்திற்கொண்டு,**

இலங்கைத் தீவிலுள்ள வடக்குக் கிழக்குப் பகுதியின் சமூக, பொருளாதார, நிர்வாக மற்றும் பௌதிகக் கட்டுமாணங்களுக்கு அழிவை விளைவித்த போர், வடக்குக் கிழக்கிற்கே பிரதானமாக மட்டுப்படுத்தப்பட்டிருந்ததோடு, வடக்குக் கிழக்கே இலங்கைத் தீவில் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசமாகத் தொடர்ந்தும் இருக்கிறது என்பதையும் **உணர்ந்து,**

2000ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில், வடக்குக் கிழக்கிலுள்ள பெரும்பான்மையான தமிழ்மக்கள் தமது செயல்கள் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தங்கள் அதிகாரபூர்வமான பிரதிநிதிகள் என ஏற்றுக்கொண்டே தங்கள் வாக்கை வழங்கினார்கள் என்பதை **இனம்கண்டு,**

இலங்கைத் தீவிலுள்ள வடக்குக் கிழக்கின் பெரும்பான்மையான பகுதிமீது தமிழீழ விடுதலைப்புலிகள் கட்டுப்பாட்டையும் நியாயாதிக்கத்தையும் செயற்றிறன்வாய்ந்த முறையில் செயற்படுத்துகின்றமையைக் **கருத்திற்கொண்டு,**

பேச்சுவார்த்தை மூலமான ஒரு இறுதித் தீர்வை அடைவதும் அதனை அமுல்படுத்துவதும் ஒரு நீண்ட காலமெடுக்கும் கருமமாக அமையலாம் என்பதை **உணர்ந்து,**

அனைத்து அகதிகளும் இடம்பெயர்ந்த நபர்களும் பாதுகாப்பாகவும் சுதந்திரமாகவும் திரும்பிச் செல்வதற்கான அவசியத்தையும், அவர்கள் வடக்குக் கிழக்கிலுள்ள தங்கள் வீடுகளுக்குத் தங்குதடையின்றிச் சென்று, தரையிலும் கடலிலும் தமது வாழ்வாதாரங்களைப் பெற்றுக்கொள்வதற்கான அவர்களது உடனடித் தேவையையும் **வலியுறுத்தி,**

இலங்கை அரச நிறுவனங்களும் அவை வழங்குகின்ற சேவைகளும் வடக்குக் கிழக்கு மக்களது உடனடித் தேவைகளை நிறைவேற்றுவதற்குப் போதுமானவையல்ல என உணரப்பட்டுள்ளமையை **மனதிற்கொண்டு,**

அமைதிப் பேச்சுக்களின் போது அமைக்கப்பட்ட அவசர மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுத் தேவைகளுக்கான உபகுழுவும் (சிரான்) ஏனைய உபகுழுக்களும் தோல்வியுற்றமையையும், மீண்டும் மீண்டும் செயலற்ற நிலைக்கு இட்டுச்சென்ற இந்த உபகுழுக்களது அமைப்புமுறையே அந்தத் தோல்விக்குக் காரணம் என்பதையும் **இனங்கண்டு,**

இலங்கை அரசாங்கம் தனது 2000ஆம் ஆண்டுத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டவாறு, ஓர் இடைக்கால அதிகாரசபைக்கான தேவையை அங்கீகரித்துள்ளமைக்கு **மதிப்பளித்து,**

சட்டம், ஒழுங்கைப் பேணுவது ஒரு நீதியானதும் சுயாதீனமுமான சமூகத்திற்கு இன்றியமையாத அம்சம் என்பதை **உணர்ந்து,**

போரினால் சிதைக்கப்பட்ட வடக்குக் கிழக்குப் பிரதேசத்தில் மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான உடனடித் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் மற்றும் எந்தவொரு ஆட்சியியல் செயற்பாட்டை அங்கு மேற்கொள்வதற்கும் வருமானம் ஈட்டவேண்டியது தேவை என்பதை **இனம்கண்டு,**

மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி என்பனவற்றிற்கு, நிலத்தின் மீதான கட்டுப்பாடு முக்கியம் என்பதை **இனம்கண்டு,**

1972ஆம் 1978ஆம் ஆண்டு அரசியலமைப்புக்களது உருவாக்கத்தில் தமிழ்மக்கள் பங்குபற்றவில்லை என்பதையும் அவை பாகுபாடான ஆட்சியியலை நிறுவனமயப்படுத்தி, தீர்மானம் எடுக்கும் செயல்முறையில் காத்திரமான பங்கினைத் தமிழ்மக்களுக்கு வழங்க மறுத்ததையும் **மனதிற்கொண்டு,**

கடந்த தசாப்தத்தில் இனங்களுக்கிடையேயான முரண்பாடுகளைத் தீர்க்க புதுமையானதும் பரந்த சிந்தனையுடனுமான நடைமுறைகளுடே சமத்துவத்தின் அடிப்படையில் முரண்பட்ட தரப்புக்களுக்கிடையே உடன்படிக்கையினை ஏற்படுத்துவதன் மூலமாக சர்வதேச மட்டத்தில் கடைப்பிடிக்கப்பட்ட வழக்கத்தைக் **கவனத்திற்கொண்டு,**

போரிடும் தரப்புக்களுக்கிடையே சர்வதேச சமூகத்தின் அங்கீகாரத்தோடு எட்டப்படும் ஒப்பந்தங்களில் அல்லது உடன்படிக்கைகளில் மாத்திரமிருந்தே பெறப்படும் சட்டரீதியான பலத்தைக்கொண்டு போரினால் சிதைந்த நாடுகளில் இடைக்கால அரசாங்க ஒழுங்குகளை நிறுவுவதற்கான முன்னுதாரணங்களில் **நம்பிக்கைகொண்டும்,**

இலங்கைக் கண்காணிப்புக் குழுவின் (SLMM) பணியை உள்ளடக்கிய போர்நிறுத்த ஒப்பந்தம், SIHRN மற்றும் வடக்குக் கிழக்கு மீள்கட்டுமாண நிதியம்(NERF) அமைக்கப்பட்டமை போன்ற நடைமுறைகள் இத்தகைய ஒழுங்குகளை ஏற்படுத்துவதற்குரிய பெறுமதியான முன்னுதாரணங்களாக அமைகின்றன என்பதைக் **கவனத்திற்கொண்டு,**

மேலே கூறப்பட்டனவற்றின் அடிப்படையில், சம்பந்தப்பட்ட தரப்புக்களான தமிழீழ விடுதலைப் புலிகளும் இலங்கை அரசாங்கமும் கீழ்வரும் ஏற்பாடுகளுக்கு இத்தால் இணங்குகின்றன:

## 01.இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை

பேச்சுவார்த்தை மூலமான இறுதித்தீர்வு எட்டப்பட்டு அமுல்ப்படுத்தப்படும்வரை, வடக்குக் கிழக்கிலுள்ள அம்பாறை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை மற்றும் வவுனியா ஆகிய எட்டு மாவட்டங்களையும் உள்ளடக்கி ஒரு இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை (Interim Self-Governing Authority-ISGA) நிறுவப்படும்.

ISGAஇல் முஸ்லீம் சமூகத்தினது பங்கை உருவாக்கம் செய்வதில் கலந்துகொள்வதற்கு அவர்களது பிரதிநிதிகளுக்கு உரிமை உண்டு.

## 02.ISGAஇன் அங்கத்துவ அமைப்பு

2.1. இந்த உடன்படிக்கையில் சம்பந்தப்படுகின்ற தரப்புக்களால் தீர்மானிக்கப்படும் எண்ணிக்கையிலான உறுப்பினர்களை ISGA கொண்டிருக்கும்.

2.2. ISGAஇன் அங்கத்துவ அமைப்பு கீழ்வருமாறு அமையும்:

2.2.a. தமிழீழ விடுதலைப் புலிகளால் நியமிக்கப்படுகின்ற உறுப்பினர்கள்

2.2.b. இலங்கை அரசாங்கத்தால் நியமிக்கப்படுகின்ற உறுப்பினர்கள், மற்றும்

2.2.c. வடக்குக் கிழக்கிலுள்ள முஸ்லீம் சமூகத்தால் நியமிக்கப்படுகின்ற உறுப்பினர்கள்

2.3. கீழ்வருவனவற்றை உறுதிசெய்யக்கூடிய விதத்தில் உறுப்பினர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்:

2.3.a. ISGAஇல் தமிழீழ விடுதலைப் புலிகளின் நியமனதாரிகளே அறுதிப் பெரும்பான்மையினராக இருப்பர்.

2.3.b. மேலுள்ள உபவிதி (a)இற்கு பங்கம் ஏற்படாத வகையில் வடக்குக் கிழக்கிலுள்ள முஸ்லீம் மற்றும் சிங்கள சமூகங்கள் ISGAஇல் பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருக்கும்.

2ⴷ4. தலைவர்(Chairperson) ISGAஇலுள்ள பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டு ISGAஇன் பிரதான நிறைவேற்று அதிகாரியாகச் செயற்படுவார்.

2.5. வடக்குக் கிழக்கிற்கான பிரதான செயலாட்சியரையும் அவரது கடமைகளை ஆற்றுவதில் உதவுவதற்கு தேவைப்படக்கூடிய ஏனைய அதிகாரிகளையும் தலைவர் நியமிப்பார். இந்த நியமனம் ஏதேனையும் இடைநிறுத்துவதற்கு அல்லது முடிவுக்குக் கொண்டுவருவதற்கான அதிகாரங்களையும் தலைவர் கொண்டிருப்பார்.

## 03.தேர்தல்கள்

சரத்துக்கள் 2.2 மற்றும் 2.3இன் ஏற்பாடுகள், ISGAஇற்கான தேர்தல்கள் நடாத்தப்படும்வரை தொடரும். இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்து ஐந்தாண்டின் முடிவில் இறுதித் தீர்வு எதுவும் எட்டப்படாமலும் அமுல்படுத்தப்படாமலும் விட்டால், இந்த ஐந்தாண்டு காலப்பகுதி முடிவடைகையில் தேர்தல்கள் நடாத்தப்படும். ISGAஆல் நியமிக்கப்படும் ஒரு சுயாதீனமான தேர்தல் ஆணைக்குழு, சுதந்திரமானதும் நேரடியானதுமான தேர்தல்களை சர்வதேசக் கண்காணிப்பின் கீழ் சர்வதேச ஜனநாயகக் கோட்பாடுகள் மற்றும் நியமங்களுக்கு அமைவாக நடாத்தும்.

## 04.மனித உரிமைகள்

சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளவாறு அனைத்து உரிமைகளும் வடக்குக் கிழக்கிலுள்ள மக்களுக்கு வழங்கப்படும். ISGA இயற்றும் சட்டம், ஒழுங்குமுறை, தீர்ப்பு, கட்டளை, தீர்மானம் எல்லாம் மனித உரிமைகள் பாதுகாப்பிற்கென சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுக்கு அமைவாக இருத்தல்வேண்டும். ISGAஆல் நியமிக்கப்படும் ஓர் சுயாதீனமான ஆணைக்குழு இந்த மனித உரிமைகளுக்கான கடப்பாடுகள் எல்லாம் பேணப்படுவதை உறுதிசெய்யும். மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு ஒரு காத்திரமான ஒழுங்கமைப்பை நிறுவுவதற்கு இந்த ஆணைக்குழு சர்வதேச மனித உரிமை அமைப்புக்களின் உதவியை நாடும். இந்த ஆணைக்குழு எந்தவொரு தனிநபரிடமிருந்தும் முறைப்பாடுகளை ஏற்று விசாரணை செய்து, பாதிக்கப்பட்ட எந்தவொரு நபருக்கும் வழங்கவேண்டிய நட்டஈட்டைப் பரிந்துரைத்து, அந்த நபரின் உரிமைகள் மீள நிலைநிறுத்தப்படுவதை உறுதிசெய்யும்.

## 05.மதச்சார்பின்மை

வடக்குக் கிழக்கில் எந்தவொரு மதத்திற்கும் விசேட இடம் வழங்கப்படமாட்டாது.

## 06.பாகுபாட்டிற்கெதிரான தடை

வடக்குக் கிழக்கில் மதம், இனம், சாதி, தேசியம் அல்லது பிராந்தியம், வயது அல்லது ஆண், பெண் என்பவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டப்படாதிருப்பதை ISGA உறுதி செய்யும்.

## 07.இலஞ்ச ஊழலைத் தடுத்தல்

ISGA தனது நிர்வாகத்தில் அல்லது தனது நிர்வாகத்தின் கீழ் இலஞ்சம் அல்லது ஊழல் எதுவும் இடம்பெறாதிருப்பதை உறுதி செய்யும்.

## 08.அனைத்து சமூகங்களினதும் பாதுகாப்பு

கலாச்சாரம் அல்லது மதம் தொடர்பாக, ஒரு சமூகத்திற்கு வழங்காத தனிச்சலுகைகளை அல்லது அவர்கள்மீது திணிக்காத அசௌகரியங்களை இன்னொரு சமூகத்திற்கு வழங்கும் அல்லது திணிக்கும் சட்டம், ஒழுங்குமுறை, விதி, கட்டளை அல்லது தீர்மானம் எதுவும் மேற்கொள்ளப்படமாட்டாது.

## 09.ISGAஇன் நியாயாதிக்கம்

9.1. மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் தற்போதுள்ள சேவைகளையும் வசதிகளையும் மேம்படுத்தி உயர்த்துதல் உள்ளடங்கலான அபிவிருத்தி (இதன் பின்னால் RRRD எனக் குறிப்பிடப்படுகின்றது), வரி விதித்தல் உள்ளடங்கலான வருவாய் ஈட்டல், வருமானம், தீர்வையும் சுங்கவரியும், சட்டமும் ஒழுங்கும் மற்றும் காணி தொடர்பான அதிகாரங்கள் உள்ளடங்கலாக வடக்குக் கிழக்கை ஆழுகைசெய்வதற்கு வேண்டிய அனைத்து அதிகாரங்களையும் ISGA கொண்டிருக்கும்.

இந்த அதிகாரங்களுக்குள், வடக்குக் கிழக்கிலும் வடக்குக் கிழக்கிற்காகவும் பிராந்திய நிர்வாகம் தொடர்பாக இலங்கை அரசாங்கத்தால் செயற்படுத்தப்படும் அனைத்து அதிகாரங்களும் செயற்பாடுகளும் உள்ளடங்கும்.

9.2. இவ்வாறான அதிகாரங்களைப் பிரயோகிப்பதற்கும் செயற்பாடுகளைச் செயற்படுத்துவதற்குமான விரிவான வழிமுறைகள் இந்த ஒப்பந்தத்தில் சம்பந்தப்பட்ட தரப்புக்களால் மேலும் பேசி முடிவெடுக்கப்படும்.

## 10.அதிகாரங்களை வகை பிரித்தல்

வடக்குக் கிழக்கில் நீதியை நிர்வகிப்பதற்கான தனியான அமைப்புக்கள் உருவாக்கப்பட்டு, அந்த அமைப்புக்களுக்கு நீதி அதிகாரங்கள் உரித்தாக்கப்படும். நீதிபதிகளது சுயாதீனத்தை உறுதிசெய்வதற்கு ISGA பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கும்.

இந்த ஒப்பந்தத்தின் சரத்து 4 (மனித உரிமைகள்) மற்றும் 22இற்கு (பிணக்குத் தீர்த்தல்) பங்கம் ஏற்படாதவாறு, இந்த சரத்தின் கீழ் உருவாக்கப்படும் அமைப்புக்களே, இந்த உடன்படிக்கையை அர்த்தப்படுத்தி அமுல்படுத்துவதில் எழும் அனைத்துப் பிணக்குகளையும், இந்த உடன்படிக்கையில் அல்லது இந்த உடன்படிக்கையின் கீழ் அல்லது இந்த உடன்படிக்கையின் ஏதேனும் ஏற்பாட்டில் எழும் ஏதேனும் பிணக்குகளையும் தீர்ப்பதற்கு தனியானதும் தனித்துவமானதுமான நியாயா

(தொடர்ச்சி 15ம் பக்கம்)



www.eelamview.com

# யுத்தத்திற்குள்ளும் கட்டிவளர்க்கப்பட்ட காவல்துறை அமைப்பு

## ஒரு நேர்காணல்

**எமது போராட்டத்தில், பிரதேசங்கள் பெருமளவு எமது கட்டுப்பாட்டினுள் வந்தபோது, மக்கள் மத்தியில் ஏற்படுகின்ற சமூகப் பிரச்சினைகள் , சமூக முரண்பாடுகளைத் தீர்த்துவைத்து, குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தி, எமது சமூகம் ஆரோக்கியமான சமூகமாக தொடர்ந்து வளர்ச்சியடைவதற்கான ஏதுநிலையை உருவாக்குவதற்காக காவல்துறை கட்டமைப்பு நிறுவப்பட்டது. 1991ஆம் ஆண்டு நவம்பர் மாதம் யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் தமிழீழத் தேசியத்தலைவர் அவர்களினால் தமிழீழக் காவல்துறை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டது. ஆனால் அதற்கு முன்னரே 1991ஆம் ஆண்டு ஆனி 01ம் திகதி தமிழீழக் காவல்துறைக்கான அணிகள் தமது பயிற்சியை ஆரம்பித்திருந்தன. இந்தப் பயிற்சிகள் சிறிலங்கா காவல்துறையால் யாழ்.நூலகம் எரியூட்டப்பட்ட 10ம் ஆண்டின் நினைவு நாளன்றே ஆரம்பிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.**

**திரு.பா.நடேசன், தமிழீழ காவல்துறையின் பொறுப்பாளராக தமிழீழ காவல்துறை உருவாக்கப்பட்ட காலம்முதல் செயற்பட்டு வருபவர். அண்மையில் கிளிநொச்சி நகரில் திறந்து வைக்கப்பட்ட தமிழீழ காவல்துறையின் நடுவப் பணியகத்தில் சந்தித்து "விடுதலைப்புலிகள்" இதழுக்காக அவருடன் உரையாடினேன்.**

**கேள்வி:-** நீண்ட காலமாக அடக்குமுறையாளர்களின் காவல்துறையினால் நிர்வகிக்கப்பட்டுவந்த எம் மக்களின் மனங்களில் காவல்துறை என்ற செயற்பாடு ஒரு ஆக்கிரமிப்புப்படை, அதிகாரத்தை பிரயோகிப்பவர்கள் என்ற மனப்பதிவையே ஏற்படுத்தியிருந்தது. இந்த வேளையில் தமிழீழ காவல்துறை உருவாக்கப்பட்டபோது எந்த அளவிற்கு மக்கள் அதற்கு ஒத்துழைப்பு கொடுத்தார்கள்? மக்களின் மனங்களை தமிழீழ காவல்துறை எவ்வாறு வெற்றிகொண்டது?

**பதில்:-** எங்களுடைய மக்களின் மனங்களில் காவல்துறை என்றால் சிறிலங்கா பொலிசின் தோற்றம்தான் ஆரம்பத்தில் இருந்து வந்தது. ஏனென்றால் நீண்டகாலமாக மக்களின் மனதில் இலங்கை பேரினவாத அரசுகளின் உணர்வுகளைப் பிரதிபலித்தது சிறிலங்கா பொலிசே. அதனால் மக்களிற்கு பொலிஸ் என்றால் பெரிய பயம் இருந்தது. ஆனால், எமது அணுகுமுறையில் தான் எல்லாத் தோற்றங்களும் உருவாக்கப்படுகின்றன. ஆரம்பத்தில் தலைவர் அவர்கள் காவல்துறையினருக்கான சீருடையைத் தெரிவு செய்யும்போதுகூட இதையே என்னிடம் சொல்லியிருந்தார். உண்மையில் காக்கி உடுப்பு என்பது மக்களிடம் பயத்தையும் வெறுப்பையும் உருவாக்கும். எனவே நீங்கள் அமைதியான வெளிர்நீல நிறத்தில் மேல் சட்டையையும், கரு நீலநிற கீழ் அங்கியையும் காவல்துறை உறுப்பினர்களுக்கான சீருடையாக வடிவமையுங்கள் என என்னிடம் சொல்லியிருந்தார். பார்த்த உடனேயே மக்களின் மனதில் நன்றானதொரு பதிவை உருவாக்கும் சீருடையையே நாங்கள் தெரிவுசெய்தோம்.



...மேலும் வலுப்படுத்தியது. இதேவேளை, விமானத் தாக்குதல், இடம்பெயர்வுகள் மற்றும் மக்களின் எல்லாவித துன்பங்களிலும் பங்கெடுத்து அவர்களுடன் சமனாக களங்களில் செயற்பட்டு, பரஸ்பரம் உதவிசெய்து வாழ்ந்துவந்த போர்க்கால சூழ்நிலை பெரிதும் மக்களையும் காவல்துறையினரையும் இணைத்ததெனலாம்.

**கேள்வி:-** ஆரம்பகாலங்களில் காவல்துறை ஆரம்பிக்கப்பட்டபோதும் நீதி வழங்குவதற்கான நீதி நிர்வாக அலகுகள் எதுவும் இருக்கவில்லை. அந்த வேளையில் காவல்துறையே தீர்வுவழங்கும் செயற்பாட்டிலும் ஈடுபட்டது. அது சில விமர்சனத்திற்கும் உட்பட்டிருந்தது. இந்த நிலையில் எப்படி அதனை எதிர்கொண்டீர்கள்?

**பதில்:-** நீங்கள் சொல்வது சரியானது. ஆரம்பத்தில் காவல்துறை ஆரம்பிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகளாக நீதிமன்ற செயற்பாடுகள் எமது பிரதேசத்தில் ஆரம்பிக்கப்படவில்லை. அப்போது செய்யப்படும் முறைப்பாடுகள் அனேகமாக பிரதேச காவல்பணிமனைகளிலேயே விசாரிக்கப்பட்டு சமரசம் காணப்பட்டன. அதில் சில பிரச்சினைகளுக்கான தீர்வுகள் திருப்தியளிக்காத பட்சத்தில் மேன்முறையீட்டுக்காகவும், பிரதேச பணிமனைகளால் கையாளமுடியாத பாரிய குற்றச்செயல்களும் யாழ்ப்பாணத்தில், பழைய பூங்காவில் அமைந்திருந்த காவல்துறை நடுவப்பணியகத்தில் விசாரிக்கப்பட்டன. அங்கே சில துறைசார் சட்டவல்லுனர்களுடன், நானும் சில அனுபவம்வாய்ந்த காவல்துறை அதிகாரிகளும் பிரச்சினைகளை விசாரித்து, தேவையேற்படின் இரு தரப்பினரையும் நேரில் அழைத்து விசாரித்து, குற்றவாளிகளை இனம்கண்டு தீர்ப்பு வழங்கினோம். ஆனால் அத்தீர்ப்பிலும் திருப்தியடையாத பட்சத்தில் மேன்முறையீடு செய்யும் உரிமையும் குறித்த நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. குறுகியகாலம் இருந்த இந்த நடைமுறைக்கு சட்டவல்லுனர்களுடையதும், துறைசார் அறிஞர்களினதும் ஆலோசனைகள் இணைக்கப்பட்டன. இதேவேளை பிரதேச பணிமனைகளில் விசாரிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்படும் சிறு குற்றங்களும் – கசிப்பு காய்ச்சுதல் போன்றன – தேவையேற்பட்டால் எனக்கு மேன்முறையீடு செய்யப்படும். இச் சிறுகுற்ற மேன்முறையீட்டு வழக்குகளும்கூட எனது நேரடி நெறிப்படுத்தலில் இயங்கிய சிறப்பு விசாரணைப்பிரிவு மூலம் மீண்டும் விசாரிக்கப்பட்டு சரியான தீர்வு அளிக்கப்பட்டுவந்தது. ஒரு தற்காலிக ஏற்பாடாக இருந்த இந்த நடைமுறை நியாயமான தீர்வுகளையே அளித்தது என்ற மக்கள் அபிப்பிராயமே இந்த விமர்சனத்தை படிப்படியாகத் தணித்தது என்று நம்புகிறேன். ஆனால் தமிழீழ நீதிநிர்வாகத்துறை உருவாக்கப்பட்ட பின்னர் காவல்பணிமனையில் சமரசம் காணமுடியாத முறைப்பாடுகளும் ஏனைய பாரிய குற்றங்கள் மீதான அனைத்து வழக்குகளும் நீதிமன்றில் முன்னிறுத்தப்பட்டே விசாரிக்கப்பட்டு தீர்ப்பளிப்படுகின்றன.

**கேள்வி:-** இன்று தமிழீழ காவல்துறைக்கு வரும் அனைத்துப் பிரச்சினைகளும் நீதிமன்றில் முற்படுத்தப்படுகின்றனவா?

**பதில்:-** இல்லை. அனேகமான சிறு சச்சரவுகள் இருதரப்பினரதும் பூரண சம்மதத்துடன் காவல்பணிமனைகளிலேயே சமரசம் செய்யப்படுகின்றன.

**கேள்வி:-** இவ்வாறு பிரச்சினைகள் சமரசம் செய்யப்படுவதாகக் கூறுகின்றீர்கள். பிரச்சினைகளை சமரசம் செய்வதற்குரிய துறைசார் அறிவூட்டல்கள் காவல்பணிமனையில் கடமைபுரியும் குறிப்பிட்ட அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்றதா? அவர்களின் சமரசத்தை எந்தளவுதூரம் ஏற்று மக்கள் ஒத்துழைக்கின்றனர்?

**பதில்:-** ஆம். காவல்துறை அதிகாரிகள் சமூகம் சார்ந்த அறிவை தமது பரந்த அனுபவத்தின் ஊடாகப் பெற்றவர்களாகவே இருக்கின்றனர். அதேவேளை சில குறிப்பிட்ட துறைகளில் அவர்கள் அறிவூட்டப்பட்டுமிருக்கின்றனர். ஆனால் நீங்கள் கேட்டது உண்மையே. அனைத்து மக்களும் எல்லாவகையிலும் பிரச்சினைகளை சமரசமாகத் தீர்க்க முன்வருவதில்லை. சிலர், சமரசப்படுத்தும்போது திருப்தியடைவதுமில்லை. அவ்வாறான நிலையில் அவர்களது பிரச்சினைகள் நீதிமன்றிற்கு முற்படுத்தப்படுகின்றன. ஆனால் இயன்றளவு காவல்துறை சிறு சச்சரவுகளை சமரசப்படுத்தவே முயல்கின்றது. ஏனெனில் சிலவேளைகளில் சமரசமாக தீர்க்கக்கூடிய பிரச்சினைகள் சில நீதிமன்றம்வரை சென்று நிரந்தரமான பிரிவுகளுக்குக்கூட காரணமாகிவிடும். விவாகரத்து வழக்குகள், குடும்பப் பிணக்குகள், கொடுக்கல் வாங்கல் பிரச்சினைகள் என்பன இவற்றிற்கான சரியான உதாரணமாக அமையும். கடந்த அரையாண்டில் 3796 குற்றச்சாட்டுகள் தமிழீழ காவல்துறையில் பதியப்பட்ட போதிலும் 2299 குற்றச்சாட்டுகள் காவல்துறையினராலேயே சமரசம் செய்யப்பட்டுள்ளன.

**கேள்வி:-** எவ்வாறான பிரச்சினைகள் நீதிமன்றில் நேரடியாக முற்படுத்தப்படுகின்றன?

**பதில்:-** எல்லாவித குற்றவியல் குற்றங்களும், பாரதூரமான குற்றங்களும் நேரடியாகவே நீதிமன்றில் முற்படுத்தப்படுகின்றன. கொலை, கொலைமுயற்சி, களவு, பாலியல் வல்லுறவு, பாலியல் வல்லுறவு முயற்சி போன்ற பாரிய குற்றசெயல்களும், சமூகவிரோத குற்றங்களும் நீதிமன்றில் முன்நிறுத்தப்பட்டு தீர்ப்பளிக்கப்படுகின்றன.

**கேள்வி:-** உங்களால் நீதிமன்றில் முன்நிறுத்தப்படும் வழக்குகளில் எத்தனை வீதமானவை குற்றமாக இனங்காணப்பட்டு தண்டனை வழங்கப்படுகின்றன?

**பதில்:-** பெரும்பாலானவை சரியான ஆதாரங்களுடன் காவல்துறையினரால் நீதிமன்றில் முன்நிறுத்தப்படுவதால், குற்றவாளிகள் தண்டனைக்கு உட்படுத்தப்படுகின்றனர். உதாரணமாக கடந்த எட்டு மாதங்களாக காவல்துறையினரால் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்ட 1121 வழக்குகளில் 474 வழக்குகள் விசாரிக்கப்பட்டுத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளன. இதில் ஒரு வழக்குத் தவிர்ந்த ஏனைய 473 வழக்குகளிலும் சந்தேக நபர்கள் குற்றவாளிகளாகவே இனங்காணப்பட்டு தண்டனைக்குட்பட்டுள்ளனர். ஏனைய வழக்குகளின் விசாரணைகள் தொடர்கின்றன.

**கேள்வி:-** காவல்துறை பணிமனைகளில் மக்கள் சில குடியியல் பிரச்சினைகள் தொடர்பாக அணுகும்போது வேகமான முறையில் தீர்வு காணப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு நிலவிவருகின்றதே?

**பதில்:-** உண்மைதான். சில பிரச்சினைகள் தொடர்பாக முறைப்பாடுகள் செய்யப்படும்போது, அதுதொடர்பான விசாரணைகளுக்கான சாட்சிகள் எமது கட்டுப்பாட்டு பகுதியிலிருந்து வெளியேறி விடுவதாலும், சிலர் சாட்சிகளை வழங்க முன்வராததாலும் தீர்வுகளை எட்டுவதில் காலதாமதம் ஏற்பட்டுவிடுகின்றன. இன்றைய அரசியல் சூழலில் எமது கட்டுப்பாடு தவிர்ந்த பிரதேசத்தில் வேகமானமுறையில் செயற்பட்டு சில சாட்சியங்களையும் சந்தேக நபர்களையும் விசாரணைக்கு அழைப்பதில் சில தாமதங்கள் ஏற்படவே செய்கின்றன. மேலும், குடியியல் பிரச்சினைகளில் உதாரணமாக காணிப் பிரச்சினைகளில் கடந்த போர்க் காலங்களில் இடம்பெயர்ந்து சிலரது காணிகளில் வாழும் மக்களை உடனடியாகவே விலகவைக்குமாறு சிலர் கோருகின்றனர். அதை உடனடியாகச் செய்வதில் பல சிக்கல்கள் உள்ளன. யாரையுமே இருப்பிடத்தைவிட்டு எழுப்பி நடுவீதியில் விடமுடியாது. எனவே எல்லோருக்குமான மாற்று ஏற்பாடுகளைச் செய்யவேண்டி உள்ளது. இவை போன்ற காரணங்களால் குடியியல் முறைப்பாடுகளில் சில தாமதங்கள் ஏற்படவே செய்கின்றன. ஆனால் இவற்றை நிவர்த்தி செய்வதற்கான ஒழுங்குகளை நாங்கள் ஏற்படுத்த முயன்றுள்ளோம்.

**கேள்வி:-** இதேவேளை, எமது கட்டுப்பாட்டுப்பகுதியில் பெருமளவில் சம்பவிக்கும் வீதி விபத்துக்களை காவல்துறையினர் வெறுமனே பார்த்துக்கொண்டுள்ளனர் என மக்கள் பெருமளவில் குறைப்படுகின்றனரே. இவ்வகையான விபத்துக்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளீர்களா?

**பதில்:-** ஆம். உண்மையில் வீதி விபத்துக்களின் முடிவுகள் மிகவும் துன்பகரமானவையே. கடந்த எட்டு மாதங்களில் நிகழ்ந்த 220 வரையான விபத்துக்களில் இருபது வரையான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். வீதி நடைமுறைகளை எமது மக்கள் பூரணமாக அறிந்து வைத்திருக்காததனாலும், போர்க் காலங்களில் குண்டும் குழியுமான வீதிகளில் எல்லாப் பக்கமும், எல்லாத் திசைகளிலும் பயணப்பட்டுப் பழகிய எம்மக்கள் திருத்தப்பட்ட எமது வீதிகளில் வீதிச் சமிக்கைகளை உணர்ந்து பயணப்படுவதற்கு பழக்கப்படாமையும்கூட விபத்துக்களிற்குக் காரணமாய் அமைந்துவிடுகின்றன. எமது மாணவர் சமூகத்திற்கு வீதி நடைமுறைகள் பற்றிய விழிப்புணர்வை கருத்தரங்குகள் மூலம் எல்லாப் பாடசாலைகளிலும் மேற்கொள்ளவும், வீதி நடைமுறைக் கைநூல் ஒன்றை தமிழீழ மாணவர் அமைப்பு, தமிழீழ கல்விக்கழகம் என்பவற்றின் உதவியுடன் வெளியிட்டு, மாணவரிடையே நடைமுறைப்படுத்தவும் காவல்துறையின் சிறப்புப் பிரிவான போக்குவரத்துப்பிரிவு ஏற்பாடு செய்துள்ளது.

இதேவேளை ஒவ்வொரு பிரதேச ரீதியிலும் மோட்டார் வாகன, மோட்டார் சைக்கிள் ஓட்டுனர்களை தமது காவல்துறைப் பணிமனையில் பதிவு செய்வதன்மூலம் பகுதி பகுதியாக அவர்களுக்கான சில வீதிப்பயிற்சி வகுப்புக்களையும் நடாத்த தீர்மானித்துள்ளது. எவ்வளவுதான் எமது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினாலும் வெளி இடங்களில் இருந்து வரும் வாகனங்களின் வேகத்தையும் கட்டுப்படுத்த வேண்டியுள்ளதும் அவர்களும் சரியான முறையில் வாகனங்களை ஓடுமாறு கண்காணிக்க வேண்டியதும் கட்டாயமே. இதற்காக போக்குவரத்துக் காவல்துறையினர் நவீனமயப்படுத்தப்படுவதுடன், விதிகளை மீறும் சாரதிகள் மீது கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதன் ஊடாக சில கட்டுப்பாடுகளை மேற்கொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**கேள்வி:-** லஞ்ச ஊழல் விடயத்தில் காவல்துறையின் கை சுத்தமானது என்றுதான் பலரும் கதைக்கின்றார்கள். எழுதுகின்றார்கள். லஞ்சம், ஊழல் என்பன சாதாரண மனிதனின் இயல்பு என சொல்லுமளவுக்கு மலிந்து காணப்படும் இன்றைய உலகில் தமிழீழ காவல்துறை உறுப்பினர்களை எவ்வாறு ஒரு நேர்மையான செயற்பாட்டாளர்களாக உங்களால் கட்டி வளர்க்க முடிந்தது?

**பதில்:-** உண்மையில் இது ஒரு கடினமான விடயமே. ஆனால், எமது உறுப்பினர்கள் அன்றாடம் போர் நிலவிய காலங்களில் போராடும் எம் இன மக்களில் இருந்தே உருவாகியவர்கள். தேசத்தின் மீதான பற்றுறுதியும், விடுதலை உணர்வையும் பெற்று வளர்ந்தவர்கள். இங்கேயும்கூட காவல்துறையில் அதே உணர்வுடனேயே அவர்கள் செயற்படுகின்றனர். ஆரம்ப காலங்களில் சில பக்கச்சார்பாக செயற்படும் சம்பவங்கள் நடந்தபோதிலும், அவர்கள் உரியமுறையில தண்டிக்கப்பட்டு, திருத்தப்பட்ட பின்னர், நேர்மையாக நடத்தல் என்பது எமது உறுப்பினரிடையே காலப்போக்கில் ஒரு நாகரிகமாகவே வந்துவிட்டது. (சிரித்தவாறே) லஞ்சம் ஊழல் மாத்திரமல்ல இன்று பொதுமகன் ஒருவரை ஒரு காவல்துறை உறுப்பினர் தகாத வார்த்தையால் பேசுவதென்பதையே ஏனைய உறுப்பினர் ஏற்கத் தயாரில்லாத நிலை உருவாகிவிட்டது. இது இப்போது ஒரு நாகரிகமாகவே எம் உறுப்பினரிடையே மாறிவிட்டது.

**கேள்வி:-** தமிழீழ காவல்துறையினருக்குரிய நிதி எவ்வாறு கிடைக்கின்றது? குற்றப்பணம் மூலம் அறவீடு செய்யப்படும் நிதி எவ்வாறு செலவுசெய்யப்படுகின்றது?

**பதில்:-** எமது அனைத்துச் செயற்பாட்டிற்கான நிதியும் விடுதலைப்புலிகள் அமைப்

(மறுபக்கம் தொடர்ச்சி)



www.eelamview.com

# தமிழ் - முஸ்லிம் உறவு

## "அந்த நன்நாள் மலரவேண்டும்"

"இல்லை இல்லை... நாங்கள் நீண்ட காலமாக ஒற்றுமையோடு தான் வாழ்ந்தோம். ஒப்பீட்டளவில் குறுகியதொரு காலத்துள் தான் இத்தனை கசப்பான விடயங்களும் நடந்து முடிந்தன." என்று சற்றுச் சோகம் அப்பிய முகத்துடன் எங்களைநோக்கிய மூத்த தளபதி கேணல் கருணா அவர்கள் கூறினார். "தமிழ் முஸ்லிம் மக்களிடையே நீண்ட காலமாக நிலவிவரும் கசப்பான உறவு நிலையை மாற்றியமைக்க உங்களது மாவட்டத்தில் எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறீர்கள்.?" என்று நாம் வினவிய போது, அவர் முதலில் வெளிப்படுத்திய உணர்வு அதுதான்.

தமிழ் - முஸ்லிம் மக்களிடையே விரிசலை ஏற்படுத்தி தனது அரச பயங்கரவாதத்தை நிறைவேற்றும் சிங்களத்தின் இனவழிப்பு மூலோபாயத்தின் விளைவுகள் தற்போதும் எதிரொலித்தபடி இருப்பதை ஜீரணித்துக்கொள்ள முடியாதவராக இருந்த அவர், தற்போதும் சமாதானத்தைக் குழப்ப முயலும் சக்திகள் கையாளமுயலும் பிரதான விவகாரங்களில் ஒன்றாக இது இருந்து வருவதாகத் துயரத்தோடு கூறினார்.

உண்மையில் யுத்த காலத்தில் தமிழ் - முஸ்லிம் மக்களின் அவலத்தில் இலாபம் அடைந்தவர்கள் தற்போதைய சமாதானச் சூழ்நிலையிலும் அத்தகைய நிலையை பேணுவதன் ஊடாக இலாபம் அடைய முனைவதுதான் இப்பிரச்சினையின் மூலமாக இருந்து வருகிறது.

1990ஆம் ஆண்டின் பிற்பகுதியில் மூண்ட இரண்டாம் கட்ட ஈழப்போர் முதலில் தென்தமிழீழத்தில்தான் மூர்க்கம் கொண்டது. அக்காலப்பகுதியில் கணிசமான நிலப்பகுதிகளைச் சிங்களப்படை தனது ஆக்கிரமிப்புக்குள் கொண்டு வந்திருந்தது. புலிகள் இயக்கம் ஒரு மரபுப்படையாக இயங்கமுடியாத சூழலில் கெரில்லாத் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியபடி இருந்தது. இத்தகைய நிலையில் தான் கிழக்கை மையமாக வைத்து தான் உருவாக்கிவந்த முஸ்லிம் தனித்துவவாத உணர்வு நிலையை மேலும் வளர்த்தெடுத்து அதைத் தனக்குச் சார்பாகப் பயன்படுத்துவதற்கான சூழ்ச்சிகரமான திட்டத்தைச் சிங்களப் பேரினவாதம் தீட்டியது.

தம்மை முஸ்லிம்களாக உருவகித்துக்கொண்ட சிங்களப் புலனாய்வாளர்கள் முதலில் தாமே தலைமையேற்றுத் தமது நாசகாரத் திட்டத்தைத் தொடக்கிவைத்தனர். ஒரு வன்முறை நடவடிக்கையில் ஈடுபடும்போது, பெரும்பான்மை இனத்தின்மீது எழக்கூடிய இயல்பான பயஉணர்வைக் களைந்து, தம்மை முஸ்லிம்களின் காவலர்களாகக் காட்டிக்கொண்டு, தாம் நன்கு திட்டமிட்ட வன்முறைகளை சிறிலங்கா அரசின் இப்புலனாய்வாளர்கள் நெறிப்படுத்தினர். பின்னர், முஸ்லிம் மக்களுக்குள்ளேயே



தமிழ் விரோதத் தலைமைகளை உருவாக்கி, அவர்களின் தமிழ்விரோதச் செயற்பாடுகளுக்காக முஸ்லிம் மக்களின் பாதுகாப்புக்காக எனக்கூறி ஊர்காவல் படையை உருவாக்கி சிங்களத் தலைமை பகைமையை எண்ணெய் ஊற்றி வளர்த்தது.

ஒருபுறம் சிங்களப்படைகளும் மறுபுறம் அதனால் உருவாக்கப்பட்ட முஸ்லிம் ஆயுதக் குழுக்களும் என தமிழ் மக்கள் நட்டாற்றில் நின்றனர். இதனால் பேரினவாதத்தின் சூழ்ச்சிப்பொறிக்குள் இரு பகுதியினருமே பலியாகிப் போகும் துர்ப்பாக்கியம் நிகழ்ந்து போனது. "புலிகள் இயக்கம் போதிய பலமற்றிருந்த ஒரு சூழலே சிங்களத்திற்கு வாய்ப்பாக அமைந்துவிட்டது. இல்லையென்றால் இப்படியொரு சூழல் உருவாகியிருக்காது." என்கிறார் கருணா அவர்கள்.

மிகத்தீவிரமான யுத்தத்திற்கு முகம்கொடுத்த நிலையில் தமிழ் - முஸ்லிம் மக்களிடையேயான இத்தகைய விரிசலுக்கு முடிவுகட்டக்கூடிய போதிய செயல்முறைகளை புலிகள் இயக்கத்தால் எடுக்கமுடியவில்லை. துயரத்துடனேயே இரண்டு கட்ட ஈழப்போர்களை உள்ளடக்கிய இரண்டு தசாப்தங்களும் கழிந்து போயின.

ஆனால், தொடர் யுத்தத்தில், களத்தில் புலிகள் மேலாண்மைபெற்ற நிலையில், அவர்களை அங்கிகரித்து பேச்சு மேசைக்குவர சிங்களத் தரப்பு முன்வந்த சூழலில் தமிழ் - முஸ்லிம் மக்களிடையே கட்டிவளர்க்கப்பட்டு வந்த விரோத மனப்பாங்கிற்கும் முடிவு கட்டிவிடத் தமிழீழத் தேசியத்தலைவர் திரு.வே.பிரபாகரன் அவர்கள் முன் முயற்சிகளை மேற்கொண்டார்.

முஸ்லிம் மக்களின் கணிசமான செல்வாக்கைப் பெற்றிருந்த சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுடன் பேச்சுக்களை நடத்தி ஒரு ஆரோக்கியமான புரிந்துணர்வைக் கட்டிவளர்க்க புலிகள் இயக்கம் முயன்றது. அதன் பயனாக 2002 ஏப்ரல் 13இல் இருதரப்பிற்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றும் கையெழுத்தாகியது. சவால்கள் நிறைந்த பணிதான் என்றாலும்

**— அ.தீபன் —**

கடின உழைப்பில் ஐக்கியத்தைக் கட்டியெழுப்ப முடியுமென புலிகள் இயக்கம் நம்பிக்கை கொண்டிருந்தது.

ஆனால், குறுகிய காலத்திலேயே முஸ்லிம் காங்கிரசின் தலைவர்களிடையே ஏற்பட்ட தலைமைத்துவப் போட்டியால் நிகழ்ந்த பிளவுகள் எல்லாவற்றையுமே மோசமாகப் பாதித்தன. பிளவுபட்டு நின்ற தலைவர்கள் தமது அரசியல் ஆயுதமாக இனவாதத்தையே மீண்டும் போட்டி போட்டுக் கொண்டு கையாளத்தொடங்கினார்கள். இயல்பாகவே எழக்கூடிய சிறிய சிறிய பிரச்சினைகளும் பூதாகரமாக்கப்பட்டன. வேண்டுமென்று திட்டமிட்டே பிரச்சினைகள் உருவாக்கவும்பட்டன. "அண்மைக்காலங்களில் தென்தமிழீழத்தில் தமிழ் - முஸ்லிம் மக்களிடையே முறுகல் நிலைக்கு வித்திட்டு பெரும் பதற்றத்தை ஏற்படுத்திய விவகாரங்கள் அனைத்திலுமே எமது இயக்கம் வேண்டுமென்றே தொடர்புபடுத்தப்பட்டிருந்தது. ஆனால் பின்னர் நடந்த விசாரணைகளின்போது அவைகள் எல்லாம் பொய்ப்பிக்கப்பட்டன." என்று கருணா அவர்கள் கூறினார்.

இவ்வாறாக நல்லிணக்கத்தைக் கட்டியமைக்கும் புலிகளின் திடமான முன்முயல்வில் தடங்கல்கள் ஏற்பட்டன. இந்நிலையில்தான் முஸ்லிம் பிரதேசங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் முக்கியஸ்தர்கள் புலிகள் இயக்கத்தின் அழைப்பை ஏற்று அவர்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துத் தமது மக்களின் பிரச்சினைகளைப் பேசி புரிந்துணர்வுடன் செயற்பட முன்வந்தனர்.

சமயப்பெரியார்கள், வர்த்தகப் பிரமுகர்கள், கிராமத் தலைவர்களை உள்ளடக்கிய மக்களின் நலன்களில் விசுவாசம் கொண்ட பிரதிநிதிகளுடனான முக்கியத்துவமான முதலாவது சந்திப்பு 20.09.2003 அன்று மட்டக்களப்பு 'தேனகம்' விடுதியில் மூத்த தளபதி கருணா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. "மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் அரசியல்வாதிகளின் பந்தாடல்களுக்கு இலக்கானதால் நிலைமை மேலும் மேலும் சிக்கலாகிச் செல்லும் நிலையே உருவாகியது. மக்கள் எதையும் புரிந்துகொள்ள முடியாதவர்களாகக் குழம்பிப்போய் இருந்தார்கள். அதனால்தான் நாம் இப்படியொரு முடிவுக்கு வந்தோம். இது நாம் முஸ்லிம் அரசியல்வாதிகளைப் புறம்தள்ளிவிட்டோம் என்று அர்த்தமாகாது. மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை இப்படியான மக்கள் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் பேசித் தீர்த்துக்கொள்வது என்றும், முஸ்லிம் மக்களின் அரசியல்தீர்வு தொடர்பான சிக்கல்களை அரசியல்வாதிகளுடன் பேச்சுமேசைகளில் தீர்த்துக் கொள்ளலாம் என்றும் நாம் செய்த முடிவையிட்டு எம்மைச் சந்தித்த முஸ்லிம். பிரதிநிதிகள் மிகுந்த மகிழ்ச்சியோடு இருந்தார்கள்." என்று இச்சந்திப்புப் பற்றி தளபதி கேணல் கருணா அவர்கள் கூறினார்.

தற்போது இத்தகைய சந்திப்புக்கள் மிகுந்த உற்சாகத்துடன் பரவலாக நடைபெற்று வருகின்றன. அவ்வப்போது எழும் சிக்கல்களை சுமூகமாகவும் வேகமாகவும் தீர்த்துக்கொள்ளும் பொருட்டு விடுதலைப்புலிகள் - முஸ்லிம் பிரதிநிதிகளை உள்ளடக்கிய குழுக்கள் பிரதேச மட்டத்தில் உருவாக்கப்பட்டு வருகின்றன. அண்மையில் புலிகளைச் சந்தித்த காத்தான்குடி முஸ்லிம் பிரதிநிதிகள் தமது பிரதேசத்திற்கு நேரடியாக வந்து தமது மக்களுடன் கலந்துரையாடல்களை நடாத்தும்படி கேட்டிருந்தனர். அவர்களின் அழைப்பையேற்றுப் புலிகள் இயக்கத்தின் தளபதிகள் பொறுப்பாளர்களை உள்ளடக்கிய பத்துப்பேர்கொண்ட குழுவினர் முஸ்லிம் பிரதேசங்களுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளனர்.

இவ்வாறு தமிழ் - முஸ்லிம் மக்களிடையே நல்லுறவைக் கட்டி வளர்ப்பதற்காகப் புலிகள் இயக்கம் கண்டெடுத்த புதிய மார்க்கம் தற்போது நம்பிக்கை தருவதாக இருக்கிறது. தம்மாலான சகல ஒத்துழைப்புக்களையும் இதற்கு வழங்கிவருவதாகக் கூறிய கருணா அவர்கள் இதன் விளைவாகத் தான் அடைய எண்ணுவதை எமக்குக் கூறும்போது.. "அன்று முதலாவது சந்திப்பு நடந்த போது முஸ்லிம் முக்கியத்தர் ஒருவர் எனது கைகளைப்பிடித்து மிகவும் உணர்ச்சிபூர்வமாகக் கூறினார், சிங்கள பௌத்தர்களுடன் எமது சகோதரர்களான சிங்கள முஸ்லிம்கள் எவ்வாறு ஒற்றுமையாக வாழ்கிறார்களோ அப்படி நாங்களும் மகிழ்வுடன் நிம்மதியாக வாழும் நாள் விரைவில் மலரவேண்டும்' என்று. உண்மையில் காலம் காலமாக நாங்கள் ஒற்றுமையோடு வாழும் நாள் மலரவேண்டும்" என்று தெரிவித்தார். அந்த நன்நாளுக்காகத் தமிழ் - முஸ்லிம் மக்கள் காத்திருக்கிறார்கள்.

---

## யுத்தத்திற்குள்ளும் கட்டிவளர்க்கப்பட்ட

(04ம் பக்கத் தொடர்ச்சி)

பாட்டிற்கான நிதியும் விடுதலைப்புலிகள் அமைப்பின் நிதி அலகிலிருந்தே கிடைக்கப்பெறுகின்றது. காவல்துறை உறுப்பினர்களுக்கான சீருடை, தங்குமிடம் உள்ளிட்ட அனைத்து தேவைகளும் விடுதலைப்புலிகள் அமைப்பின் நிதி அலகினாலேயே வழங்கப்படுகின்றது. உண்மையில் காவல்துறையினரால் குற்றப்பணம்மூலம் கிடைக்கும் நிதி மிகக்குறைந்த தொகையுடையதே. அவை அமைப்பின் நிதி அலகிடம் கையளிக்கப்பட்டு மீளவும் காவல்துறைக்கான ஒதுக்கீட்டுடன் வழங்கப்பட்டு, காவல்துறையின் செயற்பாடுகளிற்கு பயன்படுத்தப்படுகின்றது.

**கேள்வி:-** தமிழீழக் காவல்துறையின் எதிர்கால் செயற்பாடுகள் பற்றி உங்கள் திட்டம் எவ்வாறு இருக்கின்றது?

**பதில்:-** இன்றைய சூழல் சாதகமானதொன்றாக அமைந்திருக்கின்றது. அதேவேளை காவல்துறையினரின் கட்டமைப்பானது இன்னும் பலவழிகளிலும் விரைந்து செல்லவேண்டியிருக்கின்றது. நாங்கள் எல்லாப் பிரிவுகளையும் படிப்படியாக கணனிமயப்படுத்தி வருகின்றோம். மற்றும் கைவிரலடையாளப் பரிசோதனை (FINGER PRIENT TEST) இரசாயன பகுப்பாய்வுப் பரிசோதனை, இரத்த மாதிரிப் பரிசோதனை போன்ற நவீன தொழில்நுட்ப ரீதியிலான ஆய்வுகளை மேற்கொள்வதற்கும், குற்றங்களை இலகுவில் இனங்காண ஏதுவாக இலத்திரனியல் வசதிகளை பயன்படுத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், சமூகத்தில் குற்றத்தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், குடும்பங்களின் பிரிவுகளை தடுத்து அவர்களிடையே இணக்கப்பாடுகளை ஏற்படுத்துவதற்காகவும் சிறப்பானதொரு பிரிவை உருவாக்கும் பொருட்டு பயிற்சியளித்து வருகின்றோம்.

மேலும், எமது கடந்த காலங்களில் உரியமுறையில் எமக்கு ஒத்துழைப்பு வழங்கி எமது சமூகத்திடையே சிறந்ததொரு கட்டுக்கோப்பான ஒழுங்கமைப்பைப் பேண உறுதுணையாக நின்ற எம்மக்கள் தொடர்ந்தும் எமக்கு ஆலோசனைகளை வழங்கி, ஒத்துழைத்து எமது தேசத்தைக் கட்டுக்கோப்பானதொரு தேசமாக மாற்றியமைத்து, ஒழுக்க விழுமியங்கள் நிறைந்த சமூகமாக எமது சமூகத்தை மாற்ற காவல்துறையினருடன் சேர்ந்து செயற்பட முன்வரும்போது தமிழீழ காவல்துறை அமைப்பை அதன் பணியில் முழுமையடைய வைக்கமுடியும் என்று நம்புகிறேன் ●



www.eelamview.com

# கொதிநிலையில் சிங்கள அரசியல்

எல்லாளன்

இலங்கைத்தீவின் அரசியல் வரலாற்றில் இது ஒரு முக்கியமான காலகட்டம். தமிழரின் தேசிய இனப்பிரச்சினையை அரசியல் வழியில் தீர்த்து வைக்க சிங்கள தேசத்திற்கு வரலாறு வழங்கியுள்ள பொன்னான வாய்ப்பு இது.

சுமார் 18மாதகால அமைதி முயற்சிகளின் பலன் எப்படி அமையப்போகின்றது என்பதைத் தீர்மானிக்கும் காலம் வந்துவிட்டது.

இதைச் சிங்கள அரசாங்கம் எப்படிப் பயன்படுத்தப் போகின்றது?

சிங்கள எதிர்க்கட்சிகள் தமது குறுகிய அரசியல் இலாபத்திற்காக எவ்வாறு குழப்பியடிக்க முயலப்போகின்றன?

இவற்றிற்கெல்லாம் சிங்களமக்கள் எங்ஙனம் தமது பிரதிபலிப்புக்களைக் காட்டப் போகின்றார்கள்?

சிங்களத்து அரசியல் அரங்கில் இன்று எழுப்பப்படும் உணர்வு பூர்வமான கேள்விகள் இவை.

முன்னெப்போதையும் விட இலங்கையின் சமாதான முயற்சிகள் உலகநாடுகளின் ஆதரவுடன் நடைபெறுவதால் சர்வதேச சமூகமும் இதை உன்னிப்பாக அவதானித்து வருகின்றது.

ஈழத் தமிழ்மக்களைப் பொறுத்தவரையில் மிகவும் எச்சரிக்கை உணர்வுடன் சிங்களத்து அரசியலின் செயற்பாடுகளை அவதானித்து வருகின்றனர்.

புலிகள் இயக்கம் சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாக வரைபுடன் சமாதான முயற்சிகள் நடைமுறைவடிவம் எடுக்கத் தொடங்கிவிட்டன என்றே கூறலாம்.

இனி சமாதான முயற்சிகளின் வெற்றியும் தோல்வியும், வழமைபோலவே, சிங்கள ஆட்சியாளர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது.

தேர்தல் காலத்தில் அளித்த வாக்குறுதிகளை நினைவிற்கொண்டு திரு.ரணில் விக்கிரமசிங்க ஒரு இடைக்கால நிருவாகத்தைப் புலிகளுக்கு வழங்கப்போகின்றாரா? அல்லது உறுதிமொழிகள் காற்றில் பறக்கவிடப்படப் போகின்றனவா! என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

இடைக்கால வரைபை புலிகள் இயக்கம் சமர்ப்பித்த பின்னர் எதிர்பார்க்கப்பட்டது போலவே சிங்களத்து அரசியல் அமர்க்களமாகிவிட்டது.

சமாதான முயற்சிகளைக் குழப்பியடிக்க சுதந்திரக் கட்சியும் - ஜே.வி.பியினரும் தயாராகிவருகின்றனர். சிங்களத்து பெருநகரங்களில் ஆர்ப்பாட்டங்களையும் - அரச எதிர்ப்புப் போராட்டங்களையும் நடாத்தத் திட்டமிட்டுள்ளனர். தமிழருக்கு எதிரான இனவாதப் பரப்புரைகளை பெருமெடுப்பில் தொடங்கியும் விட்டனர். ரணில் அரசு தமிழனுக்கு அளவுக்கதிகமாக அள்ளிக்கொடுத்து சிங்கள மக்களை ஒட்டாண்டிகளாக்க முயல்கின்றது என்று இப்போதே எதிர்க்கட்சிகள் கூக்குரலிடத் தொடங்கிவிட்டன.




கொழும்பு மாநகரில் பத்து லட்சம் சிங்களவரைத் திரட்டி சமாதானவிரோத அரசியல் யாத்திரைகளை நடாத்தி - ரணில் அரசாங்கத்தையே கவிழ்க்கப்போவதாக எதிர்க் கட்சிகள் சூழுரைத்துள்ளன.

சமாதான முயற்சிகளுக்கு எதிராக சுதந்திரக் கட்சியும் - ஜே.வி. பியும் மட்டும்தான் செயற்படுகின்றன என்றில்லை. சிங்களத்து அரசியலின் தலைவிதியை நீண்டகாலமாகவே நிர்ணயித்துவரும் பௌத்த பிக்குகளும் இதில் முக்கிய இடம் வகிக்கின்றனர். அத்துடன் சிங்களக் கருத்துலகை உருவாக்கும் சிங்கள தேசத்துப் பத்திரிகை உலகமும் சமாதான முயற்சிகளுக்கு எதிராகவே பிரச்சாரம் செய்கின்றன.

ஆளும் ஐ.தே.கட்சியினுள்ளும் இனவாதிகள் நிறைந்தே காணப்படுகின்றனர். இவர்களெல்லாம் சரியான தருணத்திற்காகக் காத்துக் கிடக்கின்றனர்.

புலிகளின் இடைக்கால வரைபிற்கு ரணில் அரசு அளிக்கப்போகும் பதிலையும் எதிர்பார்த்தபடி ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் உள்ளார். ரணில் அரசாங்கத்தைக் கலைத்து - சமாதான முயற்சிகளை ஒரேயடியாகக் குழப்பியடிக்க ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் சிங்களப் பொதுசனங்களின் மனோநிலை எப்படி இருக்கின்றன என்பதே முக்கியமான கேள்வியாகும்.

தமிழரின் விடுதலைக்கான ஆயுதப்போர் முனைப்படைய முன்னர் தமிழருக்கு அரசியல் உரிமைகள் வழங்கச் சிங்கள மக்கள் முன்வரவில்லை. அப்போது சிங்கள மக்களிடம் இருந்த இராணுவ பலமும் - அவர்களது எண்ணிக்கைப் பலமும் சிங்கள மக்களிடம் ஒருவித இராணுவத் திமிரை திணித்திருந்தது.

ஆனால், ஆயுதப்போர் தீவிரமடைந்து தமிழரின் படைபலம் பல்கிப்பெருகி - சிங்களப் படைகளுக்கு அழிவையும் - அவமானங்களையும் ஏற்படுத்தியபோது அவர்களின் இராணுவத்திமிரும் அடங்கிப்போனதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

போர்மூலம் தமிழர்களை வெல்லமுடியாது என்று சிங்களவர்கள் இப்போது உணர்ந்துள்ளனர். இந்த மாற்றமடைந்த மனோநிலையை கடந்த பத்தாண்டுகளில் சிங்கள மக்கள் இரண்டு தடவைகள் வெளிக்காட்டியுள்ளனர்.

1995ஆம் ஆண்டு நடந்த சிறிலங்காவின் ஜனாதிபதித் தேர்தலின்போது சமாதான கோசத்தை முன்வைத்த சந்திரிகா அம்மையாருக்கு ஆதரவாக வாக்களித்து அவரை, அதாவது சமாதானத்தை ஆட்சிக் கட்டிலேற்றினர்.

அதுபோல, 2000 ஆம் ஆண்டில் சிறிலங்கா பாராளுமன்றிற்கு நடந்த பொதுத் தேர்தலின்போது சமாதானத்தை வலியுறுத்திய ரணில் விக்கிரமசிங்கவை சிங்கள மக்கள் பிரதமராகத் தெரிவு செய்தனர். இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண்பதென்று இன்றுவரை ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான சிங்கள அரசாங்கம் உறுதிகாட்டி வருகின்றது.

இந்த நிலையில், சிங்களத்து அரசியல் முப்பெரும் அபிப்பிராயத்துடன் கொதிநிலையில் உள்ளது என்று கூறலாம்.

ஒருபுறம், சமாதானத்தை நிலைநாட்டுவது என்ற உறுதிப்பாட்டுடன் சிங்கள அரசாங்கமும் மறுபுறம், சமாதானத்தைக் குழப்பியே தீருவது என்ற நிலைப்பாட்டுடன் எதிர்க்கட்சிகள் - மற்றும் சிங்களப் பத்திரிகை உலகம் உட்பட்ட இனவாத நிறுவனங்களும் உள்ளன.

இன்னொருபுறத்தில் சமாதானத்திற்கு ஆதரவான மனோநிலையுடன் பெரும்பான்மையான சிங்களப் பொதுமக்களும் உள்ளனர்.

சிங்களத்தின் இந்த அரசியல் நிலைப்பாடானது ரணில் விக்கிரமசிங்கவின் அரசுக்கு வலுச் சேர்ப்பதாகவே உள்ளது. எனவே, புலிகளின் இடைக்கால வரைபுக்கு ஆதரவளித்து சமாதானச் சூழலை உறுதிப்படுத்தும் வாய்ப்பு ரணில் அரசாங்கத்திற்கு உண்டு என்றே பொதுவாக நம்பப்படுகின்றது.

இந்த நிலையில், ரணில் அரசாங்கம் எவ்வாறு செயற்படப்போகின்றது என்பதே தமிழ்மக்களினதும் - உலக சமூகத்தினதும் எதிர்பார்ப்பாக உள்ளது.

"கீழ்நோக்கி எண்ணுதல்" (Count Down) என்றொருமுறை உண்டு. ஏவுகணைகள் ஏவப்பட முன்னர் பத்தில் இருந்து ஒவ்வொரு இலக்கமாகக் கீழிறங்கி சைபர் என்ற இலக்கம் வரும்போது ஏவுகணைகள் ஏவப்படும். எங்களுர் உதாரணமென்றால் பரீட்சைகளுக்கு மாணவர்கள் தங்களை முழுமையாகத் தயார்படுத்தும் பொருட்டு பரீட்சை நாளுக்கு முன்னர் நூறுநாட்கள் இருக்கும்போது இந்த கீழ் நோக்கி எண்ணுதலைத் தொடங்குவார்கள். நூறிலிருந்து ஒவ்வொரு நாளாகக்குறைந்து பரீட்சை நாளை அதாவது மாணவர்களின் தலைவிதியை நினைவூட்டிக்கொண்டே இருக்கும்.

தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் அரசியல் தீர்வுகாணும் செயற்பாட்டு வடிவத்துக்கு புலிகள் இயக்கம் இடைக்கால வரைபை வெளியிட்டதன் மூலம் தனது உயரிய பங்களிப்பை வழங்கி விட்டது.

இதை ஏற்றுக்கொண்டு சமாதானத்தை ஒரு நடைமுறை வடிவமாக்க சிங்கள அரசு தயாரா! இல்லையா! என்ற முடிவை நோக்கி "கீழ்நோக்கி எண்ணுதல்" தொடங்கி விட்டதெனலாம்.

---

## உங்களுக்கும் வேண்டும் எங்கள் வல்லமைத் தலைவன்

சிறி... லங்கா... மாதா...

நாங்களே உன்அழகை
நாசமாக்கினோம்
நாங்களே உன்வாழ்வைப்
பாழ்படுத்தினோம்
நாங்களே உன்நிமிர்வில்
கூன்விழுத்தினோம்
என்று
கட்டுக்கடங்காது திரியும்
கட்டுக்கதைகளிற்கு
கட்டுப்போட விரும்புகிறேன்
புரிந்துகொள்வாயாக....

எவர் வந்து
அமர்ந்தாலும்
இனவாதம் ஏற்றியே
முடிசூடவைக்கிறதுன்
ஆட்சியிருக்கை....

எதிர்கட்சி என்றால்
எதிர்க்கின்ற கட்சியென்று
இலக்கணம் வகுத்தவர்
இருக்கின்ற கட்சியால்
சுடாடிக்கிடக்கிறதுன்
இறைமை

எதுவெனினும் குழப்புதல்
எங்கள் கொள்கை
என்ற கொள்கை மாறாத
இலட்சிய புருசர்களால்
குழப்பப்படுகிறதுன்
ஒருமை

சாமிக்கடங்காப் பூசாரிகளாய்
சன்னதமிட்டுக் கொண்டிருக்கும்
மூன்று படைக் காவலர்களால்
முறிந்து கொண்டிருக்கிறதுன்
நிமிர்வு

அரசை வெறுத்துத்
துறவு பூண்டவன்
பாதம் தொழுதிடும்
காவித் துறவிகள்
தூவும் இனவெறி
கலந்தே வருகிறதுன்
மூச்சு

முடவனைத் தோளினில்
ஏற்றிட வேண்டிய
குருடனின் பயணமாய்
பரிதவிக்கிறதுன்
அரசு

சிறி... லங்கா... மாதா...

இதுவரை நீ
ஒளிபெறாக் காரணம்
இதுவென்றறிக
உன்மடித் தலைவர்கள்
மனம் மாறும் வரையுன்
நலம் வாழா
என்பதைப் புரிக....

ஒரு கொடியில் இணைந்து
ஒரு திசையில் நடந்து
ஒருமுடிவை எடுக்கும்
திறன் உன் தலைவர்களிற்கு
எப்போது வருகிறதோ
அப்போதே நடக்கும்
உன் மீட்சி

ஆகவே...
எங்களிற்குக் கிடைத்ததுபோல்
ஒரு வல்லமைத் தலைவன்
உனக்கும் கிடைக்கும் வரை
நீ தவித்துக் கொண்டிருப்பது
தவிர்க்க முடியாதென்பதே
பெரும் சோகம்

சிறி... லங்கா... மாதா

இப்போது...
கொழும்பில் இருந்து
கோலோச்ச வேண்டுமென்று
நாங்கள்
கோரிக்கை போடவில்லை

இலங்கை முழுதும்
எங்களிற்கு வேண்டுமென்று
வேண்டுகோள் விடுக்கவில்லை
புழுதி படிந்த எங்கள்
பயணங்களிற்கு
முடிவைக் கொடுக்க....

நிலமிழந்தோர்
உறவிழந்தோர்
மனக்காயங்களிற்கு
மருந்து தடவுதற்கு ஒரு
மார்க்கம் கொடுக்க....

பாதையொன்றை மட்டுமே
கேட்கிறோம்.
அவ்வளவுதான்

இதற்கே இவ்வளவு
குத்துக்கரணங்களும்
முட்டுக்கட்டைகளும்
என்றால் வட்டுக்கோட்டை முடிவு
எட்டப்படுமானால்
என்ன நடக்குமோ???

சிறி... லங்கா... மாதா...

உனது
முதல்வர்களாலேயே
சரிக்கப்பட்டுக்கொண்டிருக்கும்
உன் எழுச்சிக்கு.
இறுதி உதாரணம்
இந்த இடைக்கால அரசுக்குப்
போடப்படும் தடைக்கற்கள்.

-செந்தோழன்-


www.eelamview.com

## “மக்களின் விடுதலை உணர்வை அடக்குமுறையால் அழித்துவிட முடியாது, உலக வரலாறு பகரும் உண்மை இது.”

- தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் -

# சிங்களப் படைகளும் தென்தமிழீழப் படுகொலைகளும்

— கலாநிதி க.சோமாஸ்கந்தன் —

முன்னெப்போதும் இல்லாதளவு மனிதப் படுகொலைகள் இருபதாம் நூற்றாண்டில் நடைபெற்றுள்ளன. இதனால் படுகொலை நூற்றாண்டு - THE CENTURY OF MASSACRES - என்று அது அழைக்கப்படுகின்றது. குண்டுவீச்சு விமானங்கள் தொடக்கம் மக்கள் இருப்பிடத்தைக் காட்டிக்கொடுக்கும் வேவுச் செய்மதிகள் வரையிலான பல்வேறு அழிப்புக்கருவிகள் படுகொலையில் ஈடுபடுகின்றன. தகவல் தொழில்நுட்பத்தின் (INFORMATION TECHNOLOGY) பிறப்பும் விரிவும் அதை உச்சக்கட்டத்திற்கு எடுத்துச் சென்றுள்ளது. படுகொலைகள் அரசுத் திட்டமிடலின் அங்கமாகவும், ஆயுத வர்த்தகத்தின் அவசியத் தேவையாகவும் இடம்பெறுகின்றன. இன்றைய உலகில் அது நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ளது.

நாடுகளுக்கிடையிலான போராயினும் சரி, இனங்களுக்கிடையிலான உள்நாட்டில் போராயினும் சரி கூடுதலான உயிரிழப்பு பொதுமக்கள் மத்தியில்தான் நடைபெறுகின்றது. ஆயுதம் தரித்த அணிகள் பொருகும்போது பொது மக்கள் பாதிக்கப்படுவதில்லை என்பது மிகவும் தவறான கற்பிதம்.



பொது மக்களின் உயிரிழப்பு ஒரு விபத்து என்று தள்ளிவிட முடியாது. பொதுமக்கள் மீதான தாக்குதல் நன்கு திட்டமிட்டு நடத்தப்படுகின்றன. பொதுமக்கள் குறிவைத்துத் தாக்கப்படுவதுதான் வழமை என்னுமளவுக்கு, அவர்களுடைய உயிரிழப்பு இருபதாம் நூற்றாண்டில் பல்கிப் பெருகிவிட்டது.

போரின்போது ஆயுதப் படைகள் எதிர்நாட்டின் மக்கள்மீது தாக்குதல் நடத்துவதற்குக் காரணம் பல உண்டு. பொதுமக்கள் உயிரிழப்பு உயரும்போது அந்த மக்களைச் சார்ந்த போர் வீரர்களின் மனவுறுதி உடைகின்றது, போரிடும் வலு பாதிக்கப்படுகின்றது. போர் வீரர்களுக்கு உதவும் போக்கை மக்கள் தமது பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு, குறைத்துக்கொள்வர். அடுத்ததாக மக்களைத் தாக்கி வெளியேற்றுவதன் மூலம் அவர்களுக்குச் சொந்தமான நிலப்பரப்பைக் கட்டுப்பாட்டில் கொண்டு வரமுடியும். எல்லாவற்றிற்கும் மேலாக எதிர்நாட்டு மக்களைத் தாக்கி அழிப்பதை உலக சமுதாயம் கண்டிப்பதில்லை. உலக சமுதாயம் என்று தம்மை அடையாளப்படுத்தும் நாடுகள் இதே குற்றத்தைப் புரிகின்றன.

பொதுமக்கள் உயிரிழப்பைத் தவிர்க்க முடியாது. அது போரின் நடைமுறைப் பிரச்சினைகளில் ஒன்று என்று கூறும் தத்துவாசிரியர்கள் இத்தொடர்பில் ஒரு கோட்பாட்டையும் உருவாக்கியுள்ளனர். COLLATERAL DAMAGE என்று பெயரிடப்பட்ட கோட்பாடு பின்வரும் அர்த்தங்களைக் கொண்டது. கடன் வாங்கும்போது திருப்பிக் கொடுப்பதற்கு உத்தரவாதமாக பொறுப்புக் கொடுக்கிறோம். பொறுப்பை 'கோலாற்றறல்' என்று அழைக்கப்படுகின்றது. 'டமேஜ்' என்றால் இழப்பு. போரின்போது பொது மக்களின் உயிரிழப்பு நடைபெறுவதை 'பொறுப்பின் இழப்பு' என்று வரையறை செய்யப்படுகின்றது.

இருபதாம் நூற்றாண்டிற்கு படுகொலை நூற்றாண்டு என்ற பெயர்வர போர்க்கால இழப்புக்கள் மாத்திரம் காரணமல்ல. அரசுகள் தமது மக்கள்மீது நடத்திய கொலைவெறித் தாக்குல்களின் காரணமாக உயிரிழந்தோர் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு 'படுகொலை நூற்றாண்டு' என்ற சொற்பிரயோகம் செய்யப்பட்டுள்ளது. ஆரம்பம் தொட்டு முடிவுவரை உலக நாடுகள் பெரும்பாலானவற்றில் இவ்வகைப் படுகொலைகள் நடைபெற்றன. இதனால் இருபதாம் நூற்றாண்டு கறுப்பு நூற்றாண்டு என்றும் வர்ணிக்கப்படுகின்றது.

இருபதாம் நூற்றாண்டின் முதற்படுகொலை 1915ல் நடைபெற்ற ஆர்மீனிய மக்களின் படுகொலையோடு ஆரம்பிக்கின்றது. அப்போதைய ஆர்மீனியாவை ஆட்சிசெய்த துருக்கியர்கள் ஆர்மீனியாவின் புராதனகாலத் தலைநகர் வான் (VAN) பிராந்தியத்தில் வாழ்ந்தோரைக் கொன்று குவித்தனர். இதில் உயிர் தப்பியோரை கால் நடையாக வெளியேறும்படி பணித்தனர். இப்பயணத்தில் மாத்திரம் ஒரு மில்லியன் வரையிலான ஆர்மீனியர்கள் உயிரிழந்தனர். மத வேறுபாடு மொழி மற்றும் இன வித்தியாசம் என்பன படுகொலைக்குத் தூண்டு கருவிகளாக அமைந்தன. ஆர்மீனியர்கள் இந்தோ-ஆரியன் இனக் குடும்பத்தைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள். பேசிய மொழி இந்தோ-ஆரியன் குடும்ப மொழி. துருக்கியர்கள் முஸ்லிம்கள், மத்திய ஆசியாவைச் சேர்ந்தவர்கள்.

ஐரோப்பிய பாராளுமன்றம் ஆர்மீனியப் படுகொலைகளை 1987இல் பரிசீலணைக்கு எடுத்தது. அவற்றை ஒரு திட்டமிட்ட இன அழிப்பு நடவடிக்கை என்று அது தீர்ப்பு வழங்கியது. துருக்கியர் தரப்பில் படுகொலை போன்ற பாரிய உயிரிழப்பு நடைபெறவில்லை என்று கூறப்படுகின்றது. ஆர்மீனியப் படுகொலைகளின் எதிரொலி ஐரோப்பிய வரலாற்றில் காணப்படுகின்றது. யூதப் படுகொலைகளை நடத்திய ஆடொல்ப் ஹிற்லர் தனது மேடைப் பேச்சுக்களில் 'ஆர்மீனியர்களுக்காக யார் குரல் கொடுத்தார்கள்?' என்று கேட்பது வழமை. தன்னை யாரும் தட்டிக்கேட்கப் போவதில்லை என்ற தீர்மானத்துடன் யூதப் படுகொலையைக் ஹிட்லர் நடத்தினான். சிறிலங்காப் படுகொலைகளும் தட்டிக்கேட்க யார் இருக்கிறார்கள் என்ற கருத்துடன் நடத்தப்படுகின்றன.

இரண்டாம் உலகப்போர் காலத்தில் ஹிற்லரின் நாட்சி (NAZI) அரசு நடத்திய படுகொலைகளின் பட்டியல் மிகவும் கொடூரமானது. ஜேர்மன் படைகளால் சோவியத் ஒன்றியத்தில் கொல்லப்பட்ட ருஷ்ய பொதுமக்கள் மற்றும் படையினர் எண்ணிக்கை 26மில்லியன். யூதர்கள் அல்லாத 3மில்லியன் போலந்து மக்களும் அவர்களால் கொல்லப்பட்டனர். புராதன காலத்தில் கிழக்கு ஐரோப்பாவில் குடியேறிய நாடோடி இந்திய மக்கள் உட்பட வேறு பல முகமறியா இனங்களின் எண்ணிக்கை 2மில்லியன். ஜேர்மனி மற்றும் ஜேர்மனி ஆக்கிரமித்த நாடுகளில் வாழ்ந்த யூதர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இவர்களுடைய எண்ணிக்கை 6மில்லியன். இதைவிட இரண்டாம் உலகப்போரில் (1939-1945) 6மில்லியன் ஜேர்மன் பொதுமக்களும் படையினரும் கொல்லப்பட்டனர்.

உலகம் எப்படுகொலையை மறந்தாலும் யூதர்களின் இழப்பை மறக்க இயலாது, அவர்கள் மறக்கவிடமாட்டார்கள். பெரும்பாலான பிரசார ஊடகங்கள் அவர்கள் கைகளில் இருக்கின்றன. அவை மூலம் தமது துன்ப வரலாற்றை இடித்துரைத்துக் கொண்டேயிருப்பார்கள். அடுத்ததாக தமது நாட்டில் அழிக்கப்பட்ட 6மில்லியன் யூதர்களுக்குக் காணிக்கையாக யாத் வாஷெம் (YAD VASHEM) என்ற பெயரில் ஒரு நினைவாலயத்தைக் கட்டியெழுப்பியுள்ளனர். 2000 மார்ச்சு 23ஆம் நாள் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் இஸ்ரேல் சென்றார். அச்சமயம் அவர் யாத் வாஷெம் சென்று அஞ்சலி செலுத்தினார். இழப்புக்களையும் அழிப்புக்களையும் பொருத்தமான நினைவாலயங்களை எழுப்பி எதிர்வரும் தலைமுறையினரும் உலகத்தோரும் மறவாதிருக்க வகை செய்யவேண்டும்.

சிறிலங்காவின் படுகொலைகள் தெற்காசியாவின் இருபதாம் நூற்றாண்டு வரலாற்றில் முக்கிய இடம் பிடித்துள்ளன. அரச பயங்கரவாதத்திற்கு முன்னுதாரணமாக இவை விளங்குகின்றன. சிறிலங்காவின் பொலிஸ்படையும் பிற ஆயுதப் படைகளும் ஒடுக்குமுறையின் சின்னங்களாகவும் தமிழர்களை உயிர்ப்பலி எடுப்பதற்கென்றெ உருவாக்கப்பட்டவையாகவும் அமைகின்றன. இனப்படுகொலைகள், இனஅழிப்பு நடவடிக்கைகள் என்பனவற்றிற்கு அவை பொறுப்பாக இருந்து வருகின்றன.

1948இல் சிறிலங்கா சுதந்திரம் பெற்றபின்பு 1956 வரையிலான எட்டு வருடங்கள் மாத்திரம் சிறிலங்கா பொலிஸ்படையின் சிறந்த காலமாக மதிப்பிடப்படுகின்றது. 1956 ஜுன் 05ல் காலி முகத்திடல் வன்முறைகளின்போது பிரதமர் பண்டாரநாயக்காவின் கட்டளைப்படி பொலிஸார் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டாது ஒதுங்கி நின்றனர். பொலிஸ்படையின் இன்றுவரையிலான வீழ்ச்சிக்கு அது ஆரம்பகட்டமாகக் காணப்படுகின்றது. இதேநாளில் அம்பாறை இங்கினியாகலையில் திட்டமிட்டுத் தொடங்கப்பட்ட தாக்குதல்கள் அங்கு குடியேற்றப்பட்டிருந்த தமிழர்களும் முஸ்லிம்களும் விரட்டியடிக்கப்படும் வரை தொடர்ந்தது. இதுதான் சிறிலங்கா அரச பயங்கரவாதத்தின் ஆரம்பம்.

சீருடை தரித்த படையினரையும் காடையர்களையும் பயன்படுத்தி தமிழர்களின் நிலம்பறிப்புக் கொள்கையை சிறிலங்கா அரசு மீண்டும் மீண்டும் அமுலாக்கி வருகின்றது. கிழக்கு மாகாணத்தில் கனேடிய அரசின் உதவியோடு நடைமுறைப்படுத்தப்பட்ட மாதுறுஓயாத்திட்டம் வடக்குக் கிழக்கைப் பிரிக்கும் நோக்கில் உருவாக்கப்பட்டது. உலகவங்கியின் நிதி உதவியுடன் வடகிழக்கில் செயற்படுத்தப்பட்ட துரித மகாவலி அபிவிருத்தித்திட்டமும் இதே இலக்கைக் கொண்டது.

1987இல் இலங்கை - இந்திய ஒப்பந்தம் வட-கிழக்கு இணைப்பை முன்வைத்தது. இதைச் செயலிழக்கச் செய்வதற்காக வடகிழக்குப் பிராந்தியத்தின் இணைப்புப் பாலமாக விளங்கிய மணலாறு 1988ல் துரித அபிவிருத்திக்குத் தெரிவு செய்யப்பட்டது. காணி அபிவிருத்தி அமைச்சரான காமினி திசாநாயக்கா ஏப்ரல் 14,1988ல் விடுத்த தனது அரசாங்க கசற் அறிவித்தலின்படி முல்லைத்தீவின் மணலாறை வெலிஓயா என்று பெயர்மாற்றம் செய்தார். வெலிஓயாவை முழுச் சிங்கள வாழ்விடமாகச் செய்வது அவருடைய திட்டம். இதற்கு இந்திய அரசின் மறைமுக ஒத்துழைப்பும் இருந்தது.

மணலாறின் தண்ணிமுறிப்புக் கிராமத்தில் வாழ்ந்த 3000தமிழ்க் குடும்பங்கள் ஜெனரல் ஜானக பெரேரா தலைமையிலான சிங்களப் படைகளால் 24மணிநேரத்தில் வெளியேற்றப்பட்டனர். வெளியேற மறுத்த 29தமிழ்க் குடும்பங்களைச் சேர்ந்தோர் ஜானக பெரேராவின் கட்டளைப்படி தண்ணிமுறிப்பு நூலகத்திற்கு அண்மையில் கொன்று எரியூட்டப்பட்டனர். ஜானக பெரேரா தனது பெயரை தண்ணி முறிப்புக்கு ஜானகபுர என்று வழங்கியுள்ளார்

'உலகின் எல்லா விடுதலைப் போராட்டங்களிலும் ஒடுக்குமுறையின் நெருப்பில் குளிப்பது பொது சனங்களே' என்று தேசியத் தலைவர் அவர்கள் கூறியது தென்தமிழீழத்தின் எமது உடன்பிறப்புக்களுக்கு மிகவும் பொருத்தமாக அமைகின்றது. தனது மகன் ரவி ஜெயவர்த்தனா தலைமையில் பிரித்தானியாவின் கீனிமீனி கூலிப்படை, இஸ்ரேலின் மொசாட், சின்பெத் போன்றவற்றின் பயிற்சியோடு விசேட அதிரடிப்படை (STF) என்ற பொலிஸ்படையின் இராணுவப் பிரிவை ஜெயவர்த்தனா உருவாக்கினார். காடையர்களுக்கும் ஆயுதப்பயிற்சி வழங்கி அவர்களுக்கு ஊர்காவற்படை என்ற பெயரும் அவர் வழங்கினார்.

தமிழர் படுகொலையில் கிழக்கில் முஸ்லிம் காடையர் கும்பல் சிலவற்றை பங்கெடுக்க வைப்பதில் சிங்கள அரசியல் இராஜதந்திரவாதிகள் வெற்றிகண்டனர் என்பது உலகறிந்த விடயம். இதை ஆதாரபூர்வமாகப் பிறிதோர் சந்தர்ப்பத்தில் நிருபிப்போம். கூட்டுத் தண்டனை (COLLECTIVE PUNISHMENT) வழங்கலை ஜெனிவா கொவென்சன் (GENEVA CONVENTION) ஊடாகச் சர்வதேசச்சட்டம் தடை செய்கின்றது. ஒட்டுமொத்தமாக ஒரு இனத்தவர்களைச் சுட்டுக் கொல்லுதல், அவர்களுக்குச் சொந்தமான வீடு, நிலம், சொத்துக்கள் போன்றவற்றை அழித்தல் என்பன கூட்டாகக் 'கூட்டுத் தண்டனை' என்று அழைக்கப்படுகின்றது. ஆயுததாரியான எதிரியுடன் போரிட வலுவின்றி ஆயுதம் தரியாத எதிரியின் இனத்தவரைத் தண்டிப்பதை இவ்வாறு அழைக்கிறார்கள்.

1992 அகஸ்து 8ஆம் நாள் யாழ் அராலித்துறையில் யாழ் இராணுவ கட்டளை அதிகாரியும் அவரையொத்த படை அதிகாரிகளும் புலிகளின் கண்ணிவெடித் தாக்குதலில் கொல்லப்பட்டனர். இதற்குப் பதிலடியாக 1992 ஆகஸ்து 9ஆம் நாள் மட்டக்களப்பின் மைலந்தனைக் கிராமத்தில் 14 சிறுவர்கள் உட்பட 35 தமிழர்கள் சிங்களப் படையினரால் படுகொலை செய்யப்பட்டனர். சர்வதேச அழுத்தம் காரணமாக காலம் கடந்தபின் 18 இராணுவத்தினர் கொலைக் குற்றத்திற்காக நீதிமன்றின் முன் நிறுத்தப்பட்டனர்.

2002 நவம்பர் மாதத்தில் விசாரணைகள் நடைபெற்றன. விசாரணை முடிவில் சிங்களவர்களை மாத்திரம் கொண்டிருந்த ஜுரிமார் சபை 18 இராணுவத்தினரும் நிரபராதிகள் என்று தீர்ப்பு வழங்கியது. தமிழரான மேல் நீதிமன்ற நீதியரசர் எஸ்.சிறிஸ்கந்தராசா தீர்ப்புச் சம்பந்தமாக மீண்டும் யோசிக்கும்படி சபையைக் கேட்டுக்கொண்டார். ஒரு மணிநேர யோசனையின்பின் அவர்கள் அதே தீர்ப்பை உறுதிபடக் கூறினர். 18 பேரையும் நீதியரசர் விடுதலை செய்தார்.

சிங்கள நீதி நிர்வாகத்தின் மீது தமிழர்கள் நம்பிக்கை இழந்து பல வருடங்களாகின்றன. புகழ்பூத்த கிருசாந்தி குமாரசுவாமி வழக்கில் என்ன நடந்தது? பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டவர்கள் விடுதலை ஆகாத நிலையில் 22 தமிழ் இளைஞர்களை கொழும்பு புல்லர்ஸ் வீதி அதிரடிப்படை முகாமில் கொலை செய்தபின் பொலகொடை வாவியில் சடலங்களை வீசியெறிந்த எஸ்ரிஎப் படையினர் சிலகாலம் இடைநிறுத்தப்பட்டபின் தென்தமிழீழத்தில் சேவையாற்றுகின்றனர்.

(தொடர்ச்சி 12ம் பக்கம்)





www.eelamview.com



# பொங்குதமிழ் எழுச்சியும் பொருத்தப்பாடான அதன் வரலாற்று நிமித்தங்களும்

பொங்குதமிழ் எழுச்சிவிழா 2001. 2002. 2003 ஆகிய மூன்று கால கட்டங்களிலும். தமிழ்பேசும் மக்கள் அவர்களின் தாயக நிலப்பரப்பின் பல்வேறு முக்கிய நகரங்களிலும். பல பிரதேசங்களிலும் உணர்வுபூர்வமாக முன்னெடுத்துள்ளனர். முன்னெடுக்கவும் உள்ளனர். அப்பொங்குதமிழ் எழுச்சி நடவடிக்கைகளை அவற்றின் போக்கிற்கேற்ப பார்க்கவேண்டிய அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளது. அத்துடன் அதன் வரலாற்று நிமித்தங்களையும் கண்டுகொள்ளவேண்டிய தேவையுமுள்ளது.

தடைகளை உடைத்து நிறைவேறும் பொங்குதமிழ் எழுச்சியானது வரலாற்றுத்தாய் தந்தெடுத்த இரவல் பிள்ளையல்ல. அது தமிழ் பேசும் மக்களின் போராட்ட வரலாறு பெற்றெடுத்த சொந்தப்பிள்ளை.

பொங்குதமிழ் எழுச்சி என்பது ஒரு வளர்ச்சி. அதுபற்றித் தெரிந்துகொள்ளத் தமிழ் பேசும் மக்களின் போராட்ட வரலாற்றினைச் சிறிது பார்க்கவேண்டும்.

தொன்மையும். இனிமையும். சிறப்பும். ஆளுமையும் மிக்க தமிழ் மொழியை. அரசியல் அரங்கினில் இருந்து தூக்கி வீசிய சிங்கள முதன்மைவாத அநியாயத்தை எதிர்த்துப் போராடத் தலைப்பட்ட இம்மக்கள். தமக்கு எதிராக அதன் பின்னும் அடுத்தடுத்து நடத்தப்பட்ட அநியாயங்களையும் எதிர்த்து 1961ஆம் ஆண்டு எல்லாத் தமிழ் மக்களும் ஒரே குரலில் தமது உரிமைக் குரலை எழுப்பினர். அகிம்சைப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அதன்பின் தொடர்ந்தும் சிங்கள இனவாத ஆட்சியாளர்களால் முன்னெடுத்த பல அநியாயங்களுக்கும் பதிலளிக்கு முகமாக 1977ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தமிழ்பேசும் வாக்காளர்கள் அத்தனைபேரும் ஒரே கரங்கொண்டு புள்ளடியிட்டு. தமது வரலாற்று விருப்பங்களை வெளிப்படுத்தினர். பலன் விபரீதந்தான்.

அம்மக்களின் சனநாயக ரீதியான முன்னெடுப்புகள் யாவும் இரும்புக் கரங்கள் கொண்டு நெரிக்கப்பட்டன. ஆயுத ஒடுக்குமுறை உண்டாக்கிய விளைவின் காரணமாக தமிழ் மக்களிடையே எழுந்த ஆயுதம் தாங்கிய போராட்டத்திற்குத் தமிழ்பேசும் மக்கள் காப்புக் கவசமாக இருந்து வளர்த்தனர். அவ் ஆயுதப் போராட்டம் பல்வேறு தடைகளைத் தாண்டி சிறிலங்கா இராணுவத்தின் சிறிய. பெரிய. மிகவும் பெரிய முகாம்களைத் தகர்த்து. அவ் இராணுவம் முன்னெடுத்த சிறிய. பெரிய. மிகவும் பெரிய. அதனிலும் பெரிய படையெடுப்புக்களையும் தோற்கடித்து. சிறிலங்காவின் படையினரால் வெல்லப்படமுடியாத மரபுவழிப் படையென உயர்ந்து நின்றது.

ஆயுதப் போராட்டத்தை தனை எழுச்சி நடவடிக்கைகளையும் சிறிலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்பு வளைப்புக்குள்ளே இருந்து கொண்டே சமாதானமும் இல்லாத நிலையிலே முன்னெடுத்தனர் என்பதையும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

2001ஆம் ஆண்டின் பொங்கு தமிழ் எழுச்சியின்மூலம் தமிழ் பேசும் மக்கள் முன்வைத்த உண்மைகள் அன்றைய அதன் வரலாற்றுத் தேவையை வெளிப்படுத்துகிறது. நீண்ட காலமாய் இராணுவத்தின் பிடிக்குள் அகப்பட்டுத் தமது சொந்த நிலத்திலேயே சிறுமைப்பட்டு அடங்கி வாழ்ந்து. மௌனம் சாதித்து இழப்புகள் இடர்களையும் சந்தித்துவந்த மக்கள் இனிமேலும் இவ்வாழ்க் கையை எம்மால் சீரணிக்கமுடியாது. எமது தாயகம் தேசியம் தன்னாட்சியுரிமையுடன் கூடிய வாழ்வுவேண்டும் என வலியுறுத்தி பொங்குதமிழ் எழுச்சியை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஒப்பந்தம் நிறைவேறிச் சமாதான முன்னெடுப்புக்கள் நடவடிக்கைக்குவந்த காலத்தின் பின்னான அண்மைக் காலத்தில் செயற்படுத்தப் பெற்றன. இதன் வரலாற்று நிமித்தம் என்ன என்பதைக் கூறுவதற்குமுன் வேடிக்கையான இன்னொரு உண்மையைக் கூறுவது இதமாக இருக்கும்.

ஐக்கிய தேசிய முன்னணியை ஆட்சியமைக்க வாய்ப்பளித்த இறுதியாக நடைபெற்ற இலங்கைப் பாராளுமன்றத்திற்கான பொதுத்தேர்தலின் பரப்புரை நடவடிக்கை மேற்கொண்ட காலத்திலும். அதற்குப் பின்னும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா அவர்கள். மக்களிடையே பரப்புரையின் போதும். ஊடகவியலாளர்களிடையே அவர்களுடனான சந்திப்பின்போதும் சொல்லியிருந்தார். 20 விழுக்காடான தமிழ்மக்கள்தான் அவர்கள் வைத்திருக்கும் ஆயுதங்களுக்குப் பயந்து தமிழீழ விடுதலைப்புலிகளை ஆதரிக்கிறார்கள். 80 விழுக்காடான தமிழ்மக்கள் எம்மையே அதாவது பொதுசன ஐக்கிய முன்னணியையே ஆதரிக்கிறார்கள் என்று.

இதற்குப் பதிலளிக்கவேண்டிய தேவை தமிழ் மக்களுக்குள் எழுந்தது. அதை 2002ஆம் ஆண்டு பொங்குதமிழ் எழுச்சி நடவடிக்கைகள் நிறைவேற்றின. முழுத் தமிழீழ மக்களும் தமிழீழ விடுதலைப்புலிகளையும் அவர்களின் தலைமையையும் ஆதரிக்கிறோம். எமது பிரதிநிதிகள் அவர்கள்தான். அவர்களே எமக்காக ஒப்பந்தம் செய்யவும். எமது உரிமைக்காகப் பேசவும் தகுதியானவர்கள் என்பதையும் பொங்குதமிழ் எழுச்சி மூலம் அறைகூவி வெளிப்படுத்தினர். அத்துடன் இராணுவ அழுத்தங்களையோ பயமூட்டும் நடவடிக்கைகளையோ இடையூறு விளைவிக்கும் தடைகளையோ ஒரு பொருட்டாக மதிக்காமல் பொங்குதமிழ் எழுச்சியை முன்னெடுக்கும் வலு. பாதிக்கப்பட்ட மக்களாகிய எமக்கு உண்டு என்பதையும் பொங்குதமிழ் வெளிப்படுத்தியது.

2003ஆம் ஆண்டின் பொங்குதமிழ் எழுச்சியானது பேச்சுவார்த்தைகள் பல இடங்களில் நடைபெற்று. பின்னர் பேச்சுவார்த்தை தடங்கல் ஏற்பட்டு. தமிழீழ விடுதலைப்புலிகள் இடைக்கால அரசை வடக்கு கிழக்குக் கோரி அதற்கான முனைப்பான நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலத்தில் கொண்டாடப்பெறுகிறது.

இதற்கான வரலாற்று நிமித்தமும் மிகச் சரியாகவே பொருந்தியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளால் கோரப்பட்டிருக்கும் இடைக்கால அரசு நியாயமானது; அவர்களால் முன்னெடுக்கப்படும் இடைக்கால அரசுசார்ந்த விடயங்கள் யாவும் நியாயமானவை. ஆகவே புலிகள் கேட்கும் இடைக்கால அரசை அவர்கள் கேட்பதுபோன்று கொடுக்கவேண்டும் என்ற பக்கங்களை இவ்வாண்டு முன்னெடுத்த தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சிறிலங்கா அரசாங்கம் ஒப்பந்தம் செய்யும் நிலைமை உருவானது. இந்த நிலைக்கு முன்னும் பின்னுமாய் பொங்குதமிழ் எழுச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பெற்றன.

பொங்குதமிழ் எழுச்சியின் முதற்கால நடவடிக்கைகளை மேற்கொள்ளும் உணர்வினை. தமிழ்பேசும் மக்களுக்கு. அதாவது இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வாழும் மக்களுக்கு. தமிழீழ விடுதலைப்புலிகளின் ஓயாத அலைகள் - 3 நடவடிக்கைகளின் தொடர்ச்சியான வெற்றிகளே ஊட்டின என்று அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். அவர்களின் கருத்தினை மெய்தான் என ஏற்றுக்கொள்ளும் அதேநேரத்தில். 2001 ஆம் ஆண்டு சனவரியின் நடுப்பகுதியில் இருந்து அவ்வாண்டில் முன்னெடுக்கப் பெற்ற அத முன்னெடுத்தனர். இந்த உண்மையோடு இன்னொரு உண்மையும் உண்டு.

2001.செப்.11இன் பின்னர் நடைபெற்ற உலகளாவிய வரலாற்றுத் திருப்புமுனை நடவடிக்கைகள் எல்லாவற்றையும் முந்திக்கொண்டு இவ் எழுச்சி முன்னெடுக்கப்பட்டது. இது எல்லாத் திருப்புமுனை நடவடிக்கைகளையும் முந்திக்கொண்டு தமிழீழ விடுதலைப்புலிகள் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தத்தை 2000ஆம் ஆண்டு டிசம்பரிலேயே முன்னெடுத்தமை. எப்படி ஆழமான தீர்க்கதரிசனம் மிக்கதோ அந்தளவிற்கு இல்லாவிட்டாலும் 2001 ஆம் ஆண்டு முன்னெடுத்த பொங்கு தமிழ் எழுச்சியும் தீர்க்கதரிசனம் மிக்கதுதான்.

அதனால்தான் பொங்குதமிழ் எழுச்சி மதிக்கப்படத்தக்க காத்திரங்களை நிரம்பப் பெற்றுள்ளது.

2002ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பெற்ற பொங்குதமிழ் எழுச்சி விழாக்களும் இதன் எழுச்சி வாரங்களும் ஓர் அலையெடுப்பாக எல்லா இடங்களிலும் முன்னெடுக்கப்பெற்றன.

இக்கால எழுச்சி நடவடிக்கைகள் சிறிலங்கா

னெடுக்கப்பெற்ற. முன்னெடுக்கப்பெற இருக்கின்ற பொங்குதமிழ் எழுச்சிகள் நிரப்பி உள்ளன.

இனி பொதுவாக பொங்குதமிழ் எழுச்சி நடவடிக்கைகள் பற்றிய சிறப்பம்சங்களையும் அவை ஏற்படுத்திய பேறுகளையும். அலையடிப்புக்களையும் கவனிப்போம்.

சிறப்பான ஒரு தேசிய இன மக்கள் கூட்டம். சொத்தை இழந்தது. சுகத்தை இழந்தது. இருப்பை இழந்தது. உறவுகளை இழந்தது என்னும் நிலையைக் கண்டும் தாங்கிக்கொள்கிற அளவிற்கு; அந்த மக்கள் கூட்டம் தன்மானத்தை இழந்துவிட்டது என்னும்போது தாங்கமுடியாது.

அந்த வகையில் தமிழர் தாயக நிலப்பரப்பில் சிறிலங்கா இராணுவத்தின் பிடிக்குள் வாழும் தமிழ்பேசும் மக்கள் தன்மானத்தை இழந்துவிட்டார்களா? என்னும் கேள்வி எழுகிற ஒரு வரலாற்றுச் சூழ்நிலையில் அப்படியில்லையென அம்மக்கள் பொங்குதமிழ் மூலம் நிரூபித்தனர். மிகவும் திருப்தி தரும் ஒன்றாக அது அமைந்தது.

தமிழ்பேசும் மக்களின் நகர்வுப் பாதையில். அம்மக்களின் நலன்களைச் சிறிதும் பேணாத. பண்பால். மொழியால். உணர்வால் பெரிதும் அந்நியப்பட்ட சிறிலங்கா இராணுவம் பின்னிப் பிணைந்துள்ளது. தமிழ் மக்களின் நலன்களுக்



காக ஒரு சிறிய விட்டுக்கொடுப்பைக் கூடச் செய்யவிரும்பாத அவ் இராணுவத்திற்கும் தமது உரிமைகளைக் கேட்க முனைந்துவிட்ட தமிழ்மக்களுக்கும் இடையில் தற்போது அடிக்கடி முறுகல் நிலைகள் ஏற்படுகின்றன.

இவ்வாறான ஒரு முறுகல் நிலை மட்டக்களப்பில் தமிழ் மக்களுக்கு இராணுவத்துடன் ஏற்பட்டபோது ஒரு பெண் இராணுவத்தினரைக் கேட்டுள்ளார். "நீங்கள் வாகனத்தில் ஏறிவந்த பாதையால் போங்கள். சமாதானம் தன்பாட்டில் வந்துசேரும" என்று.

இதேபோன்று அண்மையில் யாழ்ப்பாணத்தில் இராணுவ வாகனங்களினால் ஏற்பட்ட விபத்துக்களின் போது அக்காலங்களில் மேற்கொள்ள வேண்டிய சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறிய இராணுவத்திற்கும் அதைத் தட்டிக்கேட்ட தமிழ்மக்களுக்கும் இடையில் ஏற்பட்ட தர்க்க நிலையின்போது. கோண்டாவிலில் ஒரு பெண்மணி இராணுவத்திடம் கேட்டார்; "என் சொந்த நிலத்தில் நான் அகதியாக அலைகிறேன். எனது சொந்தவீட்டில் நீங்கள் குடியிருக்கிறீர்கள். அதனால் நான் நடுத்தெருவில் நிற்கிறேன். நீங்கள் உங்களுடைய வீட்டிற்குப் போங்கள் நான் எனது வீட்டிற்குப் போகவேண்டும்" என்று...

உண்மையில் தமிழ்மக்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மிகவும் வேதனையை அடைகிறார்கள். இதில் எந்தவித மறுப்புக்கும் இடமில்லை.

அவர்களின் மண்ணில் அவர்களில் ஆயிரக் கணக்கானோர் இன்னமும் அகதியாக அலையும் நிலையில் உள்ளனர். அவர்கள் பாதம் பதித்து நடந்த அவர்களின் குச்சொழுங்கைக்குப்போக முடியவில்லை. அவர்களின் வழிபாட்டில் அவர்கள் தமது இன்ப துன்பங்களை நயந்து கொண்ட, ஆறுதலைக் கேட்டுக் கொண்ட ஆலயங்களைத் தரிசிக்க முடியவில்லை. அவர்கள் ஆற அமர வீற்றிருந்து இளைப்பும் மனமும் ஆறிய அவர்களின் மரங்கள், மடங்கள் இருக்கும் இடங்களுக்குப் போகமுடியவில்லை. அவர்களின் கடலில் அவர்களின் தற்கால இயல்பில் அவர்கள் மீன் பிடிக்க முடியவில்லை. அவர்களின் பெருந்தெருக்களில் அவர்கள் உறுத்தலின்றிப் போய்வர முடியவில்லை. இளம்பெண்கள் தங்களின் தெருப்பக்கப் படலைக்கு வந்து சாவகாசமாக நிற்கமுடியவில்லை. எங்கும் இராணுவம் உயர்பாதுகாப்பு வலயம் என்னும் பேரால் தன் கோரப்பற்களை நீட்டியபடி அம்மக்களின் நலன்களின்மீது கோபுரம் கட்டிக் குடியிருக்கிறது.

இன்னல் அனுபவித்த மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப, இடங்களை விடுங்கள் என்றால் உயர்பாதுகாப்பு வலயத்தில் இடம்விட்டுத் தருவது அச்சுறுத்தல். ஆகவே துளி விடமும் விடமுடியாது என இராணுவம் உயர்வேதம் பேசுகிறது.

இன்னலில் அந்த மக்கள் கேட்கிறார்கள் ஒப்பந்தம் எழுதப் பெற்றது. தமிழ்பேசும் மக்களின் இயல்பு வாழ்க்கை திரும்புவதற்காகவா? அல்லது இராணுவத்தினர் உயர்பாதுகாப்பு வலயங்களை மேலும் நன்கு பேணுவதற்காகவா?

மக்களின் மனங்களில் தொடர்ந்தும் வெறுமை நெருப்பு எரிந்துகொண்டு இருக்கிறது. ஒப்பந்தத்தில், இன்னல்பட்ட மக்களின் இயல்பு வாழ்க்கை திரும்ப இருபகுதியினரும் ஒத்துழைப்பதும் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் நம்பிக்கைகளையூட்டும் கோபுரங்களைக் கட்டியெழுப்புவதும் என இருக்கிறது. எந்தக் கோபுரமும் அம்மக்களுக்காகக் கட்டி எழுப்பப்படவில்லை. மாறாக அவர்களை வருத்தும் துன்பக் கேணிகள்தான் நிறைய வெட்டப்பட்டுள்ளன.







அவர்களின்மேல் விழுந்த அநியாயப்பதும் இன்னமும் அவர்களுக்கு வேதனையையே கொடுத்துக் கொண்டிருக்கிறது. இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான செயற்பாடுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இத்தகைய நிலைப்பாடுகளும் அம்மக்களை பொங்குதமிழ் எழுச்சியை எடுக்க வைத்துள்ளன. அதனால்தான் திரும்பத் திரும்ப தமிழ்பேசும் மக்கள் அதனை முன்னெடுக்கிறார்கள்.

பொங்குதமிழ் எழுச்சிவிழா வடிவம் மிகவும் நாகரிகமானது. வேதனையின் பிடியில் நசியுண்டு வெளிப்படும் பாதிக்கபட்ட மக்களின் உணர்ச்சி மிகு உரிமைக்குரல் அரங்காற்றுகை என்னும் அழகியல் அம்சத்திற்குள்ளால் பொங்குதமிழ் எழுச்சியின் போது ஒலிக்கிறது.

நேருக்குநேர் இராணுவத்தை பிரச்சினையின் பேரால் சந்திக்கும்போது தமிழ்மகன் அல்லது தமிழ் மகள் விடுக்கும் குறுக்குவெட்டான கேள்விகளை பொங்கு தமிழ் எழுச்சி முன் வைப்பதில்லை. அது நயந்தரு நாகரிகத்துடன் தமிழ்மக்களின் பிரச்சினைகளை எடுத்தியம்புகிறது. உடைப்பதுபோன்ற வேகம் இருக்கும் எந்த எதிர்நிலையாளரையும் அது உடைக்காது; பிய்த்து எறிவது போன்ற உணர்ச்சிப் பாய்ச்சல் இருக்கும் எந்த எதிரியினுடைய சிறு குடிலையும் அது பிய்த்துப் போடாது. இதுதான் அரங்காற்றுகையின் உச்சம்.

பிரச்சினைகளை முன் வைப்பதற்கு பொங்கு தமிழ் வடிவம் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கைகொடுப்பதுபோல. அரங்காற்றுகைக்குள்ளால் பிரச்சினைகளின் நியாயங்களை முன்வைக்கும் திறன்வாய்ந்த அரங்காற்றாளர்களையும் அதை நெறிப்படுத்தவல்ல நிபுணத்துவ வல்லமையாளரையும் மக்கள் வளமாகப் பெற்றுள்ளனர். அத்துடன் பொங்குதமிழ் எழுச்சியினை முன்னெடுப்பதற்கான உயர்கல்விச் சமூக வளமும் நிறைவுடன் அமைந்துள்ளது.

சமாதான காலத்திலும் தமக்கான நன்மைகள் எதுவும் தமக்குக் கிடைக்கவில்லை என்பதை வெளிப்படுத்த நயந்தரு நாகரிக வடிவம் - முறைமையான பொங்குதமிழ் எழுச்சி விழாவையே பொல்லாதது எனச் சொல்லவும் அதற்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் அதி தீவிர சிங்கள மூர்க்கவாத கட்சியாளர்கள் முனைந்து நிற்கின்றனர். அவர்களைப்போல் சிறிலங்கா இராணுவத் தினரும் பலமுறை முயன்றுள்ளனர்.

எந்தத் தடையையும் மீறிச் சமாளித்து பொங்குதமிழ் முன்னெடுப்பாளர்கள் அதனைச் செயல்படுத்துவார்கள். பொங்குதமிழ் தனது இலக்கை எட்டவேண்டும்.

பொங்குதமிழ் தமிழ்மக்களுக்கு ஒன்றும் புதிது அல்ல. சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த மிகப்பெரிய கவிஞர்களில் ஒருவர் பொங்குதமிழுக்காகச் சங்கே முழங்கு என்ற கவிதை பாடியுள்ளார். சங்கிற்கும் முழக்கத்திற்கும் பொங்கு தமிழிற்கும் தமிழர்க்கும் நீண்ட பாரம்பரியத் தொடர்பு உண்டு.

தமிழ்பேசும் மக்களின் தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை என் பதனையும் பொங்குதமிழ் சமாதான காலத்தில் வெளிப்படுத்துகிறது. நியாயமான கோரிக்கைகளை நியாயமான முறையில் நியாயமான எதிர்பார்ப்புடன் பொங்குதமிழ் எழுச்சி வெளிப்படுத்துகிறது.

மன்னார் நகரில் 15.10.2003 அன்று முன்னெடுக்கப்பட்ட பொங்கு தமிழ் எழுச்சிவிழா தொடர்பாக கண்காணிப்புக் குழுவினர் அவ்விழாவின் ஏற்பாட்டுக் குழுவினருடன் கதைத்துள்ளனர். அக் கதைப்பின்போது தேசியக் கொடி ஏற்றுவது பற்றியும் கேள்வி எழுப்பியுள்ளனர். அதற்கு ஏற்பாட்டுக் குழுவினர் அதன் தேவையை, மக்கள் அதன்பால் வைத்துள்ள பற்றுதலை. அதனால் மக்கள் அடையும் ஆறுதலை எடுத்துவிளக்கி தேசியக்கொடியை ஏற்றவேண்டியதன் அவசியத்தை உணர்த்தியுள்ளனர்.



இந்த உண்மையை சரியாக விளங்கிக்கொள்ள ஓர் உண்மைச் சம்பவம் உண்டு.

வவுனியா நகரில் பெண்கள் தொடர்பான ஒரு விழா முன்னெடுப்பின்போது தேசியக்கொடி ஏற்றவேண்டாம் என இராணுவத்தின் தூண்டலினால் கண்காணிப்புக் குழுவினர் தடுத்தனர். அப்போது "தொப்புள்கொடியை இழந்தேன். தாலிக்கொடியை இழந்தேன். தேசியக் கொடியையுமா இழக்கச் சொல்கிறீர்கள்" என்று கண்காணிப்புக் குழுவிடம் உரத்துக்கேட்டுள்ளார் ஒரு பெண்மணி. அப்படியென்றால் அப்பெண் தொப்புள்கொடியை இழந்து துன்புற்றிருக்கிறார். தாலிக்கொடியையும் இழந்து வேதனையுற்றிருக்கிறார். இன்னல் அனுபவித்த அப்பெண்ணிற்கு ஆறுதலாகத் தேசியக்கொடி இருந்துவந்துள்ளது. தமிழீழத்தில் வாழும் அத்தனைபேருமே ஏதோ ஒரு விதத்தில் இன்னல் அனுபவித்துள்ளனர். இன்னல் அனுபவித்த மக்களுடன் தேசியக்கொடி நீக்கமறப் பிணைந்துள்ளது.

**சு.அரசண்ணா**

இறுதியாக, பொங்குதமிழ் எழுச்சி முன்வைப்பின் நட்டநடுவில் நின்ற அதன் உண்மையை நோக்கினோமானால் ஓர் அற்புதமான மனித நியாயம் வெளிப்படும்.

நாம்தாம் வாழவேண்டும் (வேறுயாரும் வாழக்கூடாது)

நாம் வாழவேண்டும் (மற்றவர்கள் வாழ்ந்தால் என்ன? வாழாவிட்டால் என்ன?)

நாமும் வாழவேண்டும் (மற்றவர்களும் வாழவேண்டும்) என்கிற இந்த மூன்று நிலைகளில் இறுதியானதையே பொங்குதமிழ் எழுச்சியும் தமிழீழ விடுதலைப்போராட்டமும் கொண்டுள்ளன......

பொங்குதமிழ் எழுச்சியில் இருந்து சில உதாரணங்கள்:-

"தமிழ் எங்கள் உயிர். அந்த உயிரே பிரபாகரன்". "எமது நிலம் எமக்கு வேண்டும். எமது நிலமே எமக்கு வேண்டும்". "நாங்கள் எங்கட வீட்ட போகவேணும். நீங்கள் உங்கட வீட்ட போங்கோ" (தமிழ்பேசும் மக்களின் தாயக நிலப்பரப்பில் உள்ள சிறிலங்கா இராணுவத்திற்கானது இது)

நீங்களும் வாழுங்கள் நாங்களும் வாழ்வோம் என்ற உயரிய மனிதாபிமானத்தை இவை வெளிப்படுத்துகின்றன. உறவின் அர்த்தங்களைப் புதுப்பித்துக்கொண்டே பொங்குதமிழ் எழுச்சிக் கோசங்கள் முன்வைக்கப் பெறுகின்றன. பகைமையின் வேர்களையும் கிளைகளையும் பரப்பிக்கொண்டே பொங்குதமிழ் எழுச்சிக்கும் இன்னும் உள்ள நியாயங்களுக்கும் எதிராக நடவடிக்கைகளில் இறங்குவோர் கோசங்களைச் சூழுரைக்கிறார்கள்.

பொங்குதமிழ் எழுச்சி அதை முன்னெடுக்கும் மக்களின் கழுத்தை இறுக்கியுள்ள கயிற்றினை அறுத்து விடும்படி கோரிக்கை விடுகிறது.

ஆகவே பொங்குதமிழ் எழுச்சியின் கழுத்திற்குக் கயிறு போடாமல் அதன் நயந்தரு நாகரிகத்தைப் புரிந்துகொண்டு. எதிர்த்தரப்பாளர்கள் அதன் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்க வேண்டிய வரலாற்று அவசியத்தில் உள்ளார்கள் என்பதுவும் இன்றைய உண்மையாகும்.

பொங்கு தமிழுக்கு பங்கம் வராமல் சங்கே முழங்கு!





www.eelamview.com

# களத்திலெங்கும் ஒலித்த குரல்

இடைவிடாத எதிரியின் எறிகணை வீச்சுக்கும், காதைப் பிளக்கும் போர் விமானங்களின் குண்டு வீச்சுக்கும் வடமுனைப் போர் அரங்கு முகம் கொடுத்த வண்ணமிருந்தது.

அது நீண்ட பல நாட்களாக சிறிலங்கா படையின் பிடியிலிருந்த பளைப் பிரதேசம். ஓயாத அலைகள் - 03 என்ற வரலாற்று சிறப்புமிக்க போர் நடவடிக்கை மூலம் ஆனையிறவுத்தளத்தை உடைத்தெறிந்தபோது அதனை நாம் வெற்றிகரமாக மீட்டுக்கொண்டோம்.

ஓயாத அலைகள் தனது தேவை கருதி ஓய்வுக்குத் திரும்பிய காலம், சிறிலங்காப் படைகள் பளை நகரை கைப்பற்ற துளியும் அனுமதிக்கக்கூடாது என்ற உத்வேகம் பிறக்க, மிக விரைவாகவே அப்பகுதி எம்மால் பலப்படுத்தப்பட்டு வந்தது. காப்பரண்கள் அமைக்கும் பணிகளில் போராளிகளுடன் சேர்ந்து எல்லைப் படையினரும், கிராமியப்படையினரும், வேகமெடுக்கத் தொடங்கினர்.

ஒவ்வொரு காப்பரணுக்குமாக எங்கள் தர்சன் ஏறி இறங்கினான். தனது குறிப்பேட்டில் ஏதேதோ எழுதி எடுத்துக் கொள்வான். அரண்களில் நின்றும், காய்த்துக் குலுங்கும் மாமரங்கள், நாவல்மரங்கள், ஆலமரங்கள் என கண்ணில் படுகின்ற மரங்களிலெல்லாம் ஏறுவான். ஓடிச்சென்று மணல்திட்டில் ஏறி நின்றுகொண்டு சுற்றியுள்ள பிரதேசங்களை அளவிடுவான்.

அவனது ஒவ்வொரு அசைவும், பெறுமதிமிக்க இலக்கு ஒன்றினை கருப்பொருளாகக் கொண்டிருந்ததை பின்னைய நாட்களில், அவன் முடித்த பணிகளிலிருந்து போராளிகளினால் அறியமுடிந்தது.

முன்னணி அரண்களுக்கும், மோட்டார் நிலைகளுக்குமான பொருத்தமான களச்சூழலை உருவாக்குவதில் மனமொன்றிப் பணியாற்றும் இவன், ஆண், பெண் போராளிகளின் அரண்கள் யாவற்றிற்கும் நேரில்சென்று நிலமைகளை ஆராய்வான். படையணிகளின் பொறுப்பாளர்கள், தளபதிகள் என நாளாந்தம் நடைபெறும் சந்திப்புக்களும், அடுத்தடுத்த நகர்வுகளை நோக்கிய நேர்த்தியான ஒழுங்கமைப்புக்களையும் சோராமல் செய்தவண்ணமே இருப்பான்.

கேணல் கிட்டுப் பீரங்கி படையணியின் பளை - நாகர்கோவில் பகுதித் தளபதியான லெப்.கேணல் தர்சன் தனது கடமைகளின் கனதியை உணர்ந்தவனாக, காற்றாக விரைந்து காணுமிடமெல்லாம் தர்சன், வேண்டிய போதெல்லாம் தர்சன், தேவைகள் உணரப்படுமிடத்தெல்லாம் தர்சன் என தன் போராளிகளின் மத்தியில் சுழன்றான்.

ரூ சிக்ஸ், ரூ சிக்ஸ் என்ற குறியீட்டு மொழியில் களமுனைப் போராளிகளாலும், தளபதிகள், மற்றும் கட்டளைத் தளபதிகளாலும் மாறிமாறி இடைவெளி இன்றி அழைக்கப்பட்ட மந்திரச் சொல்லாகவே அவனது நாமம் அமைந்தது.

கரகரத்த தர்சனின் குரல் ஆபத்தான களச்சூழலை தவிடு பொடியாக்கி வழி திறந்துவிடும் வல்லமை பெற்றதாகவே போராளிகளால் உணரப்பட்டது.

பாதுகாப்புத் தாக்குதலாகட்டும், வலிந்த தாக்குதலாகட்டும் எதுவாயினும் களமுனைப்போராளிகள், படையணித் தளபதிகள் தமக்கு ஆதரவாக தமது மனங்களில் தேர்வுசெய்யும் மோட்டார் பற்றறிக் பகுதிக் கொமாண்டராக எங்கள் தர்சன் இருந்தமையானது அவனது மோட்டார் ஆதரவுச் சூட்டின் வலிமையை எடுத்துக் காட்ட தகுந்த உதா ரணமாகும்.

***********

காற்றைக் கிழித்துக்கொண்டு படுவேகமாக மோட்டார் சைக்கிள் ஒன்று வருகிறது. 'யார்ரா அவன்? நிச்சயமாய் ரூ சிக்ஸ் ஆகத்தான் இருக்கும்.'


'எவண்டா அவன்! இந்தப் பத்தைக்குள்ளால ரக்டரை உறுமிக்கொண்டு வாறது? அட தர்சன். நம்மட ரூ சிக்ஸ்.'

இவ்வாறு எறிகணை புகை மூட்டங்களுக்கும் விமானக் குண்டுவீச்சுக்கு மத்தியிலும் சிரித்துக்கொண்டே அடிக்கடி பிரமிக்கத்தக்க வகையில் இவன் நடந்து கொள்வான்.

பூநகரிக் கூட்டுத்தளம் மீதான தவளை நடவடிக்கையின்போது கனரக இயந்திரத்துப்பாக்கியுடன் சமராடியவன் அங்கு எம்மால் கைப்பற்றப்பட்ட ராங்கினை அதன் பின்னான நாட்களில் பொறுப்பேற்ற அணியுடன் இணைந்து ராங்கினை இயக்குவதிலும் பயிற்றி பெற்றான். அதனை செலுத்தக்கூடிய ஓட்டுனராகவும் இருந்தான் என்பது இவனது இன்னொரு பக்கம்.

இவனது ஆரம்ப பயிற்சியின்போது இவன் காட்டிய திறமையின் நிமித்தம் இவனுக்கு கனமான பணிகளே ஒப்படைக்கப்பட்டது. அத்தனையையும் ஏற்றுக் கொண்டு குறும்புகாரனாகவும், குழப்படிகாரனாகவும், திறமை மிக்கவனாகவும் செயற்பட்டான்.

மோட்டார் சைக்கிளைக்கொண்டு மரத்தோடு மோதிவிட்டு பொறுப்பாளரின் முன்னால் தலையைச் சொறிந்துகொண்டு தன் தவறை ஒப்புக்கொண்டு நிற்பான். வாகனங்களை கேட்காமலே எடுத்துக்கொண்டு எங்கையாவது முட்டிவிட்டு கராச்சிற்குப் போய் திருத்தம் செய்துகொண்டு வந்து பொறுப்பாளரிடம் உண்மையைச் சொல்லி தனக்குரிய தண்டனையையும் வாங்கிக் கொள்வான். ஆரம்ப நாட்களில் இவன் செய்த அன்புத் தொல்லைகளாகவே இவை அமைந்தன.



கேணல் கிட்டு பீரங்கிப் படையணியின் பளை – நாகர்கோவில் ஒருங்கிணைப்புத் தளபதி

**லெப்.கேணல்.தர்சன்**

(யோகராசா யுகின் மனோ)
கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

வாகனத்தை இனிமேல் தொடக் கூடாது என்று இவனுக்கு கட் டளை இடும் பொறுப்பாளரே "மச்சான் தர்சன், வாகனத்தைக் கொண்டுபோய் சமான்கள் கொஞ்சம் வந்துகிடக்கு கவனமாக ஏற்றிக்கொண்டுவா. எல்லாம் உடையும் சமான்கள்" என்று கூறி பணியை ஒப்படைப்பார்கள். இவ்வாறான சந்தர்ப்பங்களில் பரஸ்பரம் நம்பிக்கைக்கு உயிர்கொடுக்கும் கள்ளம் கபடம் இல்லாப் போராளி எங்கள் தர்சன்.

பல்துறைசார் ஆற்றல் மிகுந்த இவன் கனரக ஆயுதங்களை இயக்குவதில் கைதேர்ந்தவனாகவும், ராங் ஓட்டுனராகவும் சிறந்த வேவு வீரனாகவும் அனுபவங்களைப் பெற்று கனரக மோட்டார் அணியுடன் இணைந்து செயற்படத் தொடங்கி பின்னர் கேணல் கிட்டு பீரங்கி படையணியின் முன்னணித் தளபதியாக வளர்ச்சியடைந்தான்.

இவனுடைய அசாத்தியமான வேகம் எங்கேயாவது கொண்டு போய் விழுத்திவிடுமா? அதுவும் இல்லை. வேகத்திலும் அப்படியொரு நிதானத்தை வளர்த்துக் கொண்டவன்.

"ரூ சிக்ஸ், ரூ சிக்ஸ்" என்ற அழைப்பு வரும்போது, "வேகமாய்ச் சொல்லுடா தம்பி, இந்தா இரண்டு அனுப்பியிருக்கிறன் கறைக்சன தா "(திருத்தத்தை தா) என்று தனது துரித செயல் திறனாலேயே பதில் அனுப்பிவிட்டு, ராங் ஓண்டில் எரியுது அல்லது இழுத்துக்கொண்டு ஓடுது என்ற முடிவு தெரிந்தவனாக தன்னை அழைத்த போராளியின் பதிலுக்காகக் காத்திருப்பான்.

இந்த முன்னணி காப்பரணில் நிற்கும் போராளி ஒருவன் தனது அரணுக்கு சற்று நெருக்கமாக எதிரியின் 'ராங்' ஒன்று வந்துநின்று அச்சுறுத்த முனையும்போது அதனை மோட்டார், ஆதரவுடன் விரட்டி அடிக்க நினைத்து அந்த நிலமையினை தர்சனுக்கு தெரிவிப்பதற்காகவே 'ரூ சிக்ஸ்' என அழைத்திருப்பான்.

ஆனால் தர்சனோ அந்த போராளியின் நிலமையினையும் ராங் உறுமல் சத்தத்தினையும் அனுமானித்து தான் எடுக்க வேண்டிய உடனடிப் பதில் நடவடிக்கையாக கணப்பொழுதில் மோட்டாரை இணைத்து களமாடுவான்.

ஏனைய அரண்களில் நிற்கும் போராளிகள் நிலமையினை உணர்ந்து தர்சனின் தொலைத்தொடர்பு அலை வரிசையின் எண்ணிற்கு சென்று தர்சனின் கட்டளை பிறப்பிக்கும் தன்மையை கேட்டுக் கொண்டு இருப்பர். உணர்ச்சி ததும்பும் நிலையில் தர்சன் வழங்கிக்கொண்டு இருக்கும் கட்டளை போராளிகளை பிரமிக்க வைக்கும்.

களமுனையில் அடிக்கடி வந்து சேட்டைபுரியும் படையினருக்கு இவனது எறிகணைகள்தான் பாடம் புகட்டும். தனது மோட்டார் தொகுதிகளைக் கொண்டு மிகத் துல்லியமான எறிகணை சூட்டினை வழங்கி எதிரிக்குப் பேரிடியாய் இடித்தவன் எங்கள் தர்சன்.

தனக்கெனக் கொடுக்கப்பட்ட பிரதேசங்களில் ஒவ்வொரு அங்குல நிலத்தையும் அளந்து பெயரிட்டு, குறியீடு இட்டு, எப்பொழுதும் தயார் நிலையில் இருப்பதுடன், ஒவ்வொரு மூலையிலும் எதிரி இப்படித்தான் நகர்வான், இதுதான் நடக்கும் என்ற தெளிவான பார்வையுடனும், அதனை முறியடிக்கும் திட்டத்துடனும் களங்களில் மோட்டார் பீரங்கிகளின் தளபதி என்ற பெயரிற்கு ஏற்ற வரைவிலக்கணமாக எங்கள் தர்சன் நின்றான்.

எமது போராளிகளோ அல்லது அணிகளோ தற்செயலாக இக்கட்டில் மாட்டிக் கொண்டுவிட்டால், அதில் இருந்து எவ்வாறு மீண்டுவர வேண்டும், அல்லது மீட்கவேண்டும் என்ற திட்டம் தர்சனின் உள்ளங்கையில் எப்போதும் இருக்கும்.

தன்னை நோக்கி அழைக்கும் குரலின் தன்மையைக் கொண்டு அந்தத் தேவை என்னவாக இருக்கும் தனக்குரிய பணி என்னவாக இருக்கும் தன்னிடம் எதிர்பார்ப்பது என்னவாக இருக்கும் என்ற பல விதமான கேள்விகளுக்கு மத்தியிலும் தேவையுணர்ந்தவனாக தேவையை ஊகித்துச் செயலாற்றுகின்ற அவனுக்குள் குடியிருந்து, இயக்கிய அவனது ஆற்றல்தான் என்ன!?

"மச்சான் தவசீலன் ஒன்றுக்கும் யோசிக்காத, கறைக்சன மட்டும் தா, பிள்ளைகள கவனமா உன்னோட வச்சுக் கொள், நான் உன்னை வெளியால எப்படியும் எடுப்பன்" என்று முற்றுகை ஒன்றினுள் சிக்கிக்கொண்ட எமது அணி ஒன்றை மீட்பதற்காகத் தனது மோட்டார்களை ஒன்றிணைத்து எதிரியின் முற்றுகை வேலியை உடைத்தெறிந்து அவ்வணியினை பத்திரமாக மீட்டவன் எங்கள் தர்சன்.

தனி ஒரு மோட்டாரைப் பயன்படுத்தியதிலிருந்து, பல தொகுதி மோட்டார்களை இணைத்து சமர்க்களங்களை வழிநடத்தியதுவரை பட்டறிவினால் பட்டை தீட்டப்பட்ட வைரமான தளபதி அவன்.

முல்லைத்தள தாக்குதலின்போது அம்முகாமினுள் சிக்கிக்கொண்ட படையினரை மீட்கவென கடல்வழி தரையிறக்கம் ஒன்றினை வலிந்து மேற்கொண்டு, மீட்புப் படை ஒன்றை படைத்தலைமை அனுப்பி வைத்தபோது, தரையிறங்கு கடற்கலத்தின் மீது குறிதவறாது விழ்த்தப்பட்ட எறிகணையினால், கடற்கலம் சேதமானதுடன் நாற்பதிற்கு மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர்.

அன்றைய நாளின் மோட்டார் அணிக்கதாநாயகர்கள் சிலருள் எங்கள் தர்சனும் ஒருவன். கனரக மோட்டார்களினது களப்பாவனையில் முன் அனுபவம் அற்ற நிலையில் களமிறங்கி எமது மோட்டார் அணி எடுத்துவைத்த முதல் அடியே பலமான அத்திவாரமாக எழுந்ததும், அதனை தொடர்ந்து நாம் சந்தித்த பெரும் சமர்களில் வெற்றிகரமாக நகர்த்தக்கூடிய தற்துணிவை எமக்கு ஏற்படுத்தியது. அத்தகைய துணிவும் விரைவும் ஒன்றுசேர நிகழ்த்திய சாதனை தான் *'இடைக்காடான்'* என்ற எங்கள் தர்சனை எமக்கு இனங்காட்டியது.

அதனை உடனடுத்து சிங்களப் படைதொடுத்த 'சத்ஜெய'வை எதிர்த்து களமிறங்கிய முன்னணிப் படையணிகளுக்கு ஆதரவுப் பலமாக மோட்டார் அணிகளும் இணைக்கப்பட்டன. அத்தகைய மோட்டார் அணிகளின் ஒரு தொகுதிக்கு பொறுப்பாளனாக தர்சன் நின்று செயற்பட்டான். தன்னிடம் இருந்த கணித அறிவினை இணைத்து துல்லியமாக மோட்டார்களை செயற்படுத்துவதில் வெற்றிகண்டான்.

புதியதோர் அறிவியல் போருக்குள் பிரவேசிக்கும் ஆரம்ப முயற்சிகளில் தர்சனிடம் இருந்த இனங்காணமுடியாத ஆர்வம், கடின உழைப்பு, துரிதவேகம் தேடற்பண்பு அவனது அணியைச் சார்ந்த ஏனைய போராளிகளுக்கும் ஊக்கமாத்திரையாகவே அமைந்திருந்தது.

சிறுரக மோட்டார்களைக் கொண்டு மரபு வழிச்சமரை எதிர்கொண்ட எமது படையணிகளுக்கு கனரக மோட்டார்கள், பீரங்கிகளை இணைத்துப் போரிடும் ஆற்றல் பல மடங்கு அதிகரித்தது. இன்று ஆற்றல்மிகு மோட்டார் பீரங்கி படையணிகளாக வளர்ந்து பாரிய வெற்றிகளைக் குவித்து நிற்கும் எமது இயக்கத்தின் போரிடும் ஆற்றலில் மோட்டார் பீரங்கிகளின் பயன்பாடு என்பது மூலவேராக இருக்கிறது.

இத்தகைய போராற்றல் பெறுவதில் இருந்த ஆரம்ப இடர்பாடுகளைத் தமது கடின உழைப்பால் தகர்த்து வழி சமைத்துத்தந்த அணிகளில் தர்சனின் பங்கு போற்றற்கரியது.

எதிரியின் 'சத்ஜெய' நடவடிக்கையின் பின்னான காலங்களில் மோட்டார்கள் அனைத்தும் ஒழுங்கமைக்கப்பட்டும், அதற்குரிய அணிகள் ஒழுங்குபடுத்தப்பட்டு புதிய படையணி ஒன்றும் உருவாக்கம் பெற்றது.

கனரக மோட்டார் பயிற்சியின் ஆரம்ப கட்டங்களில் ஏற்பட்ட அனுபவங்கள் வித்தியாசமானவை, கனரக போராயுதம் ஒன்றை கையாளும்போது போராளிகளுக்கு இருக்கக்கூடிய உடல்வலு, மோட்டாரின் தொழில்நுட்பம் சார்ந்து எழக்கூடிய சவால்கள், போரில் சிறுரக ஆயுதங்களுடன் இணைத்து அதனைப் பயன்படுத்தும் முறைகள், கணித வரைபட அறிவை உட்புகுத்தி போரில் உச்ச பயன்பாட்டைப் பெற

(மறுபக்கம் தொடர்ச்சி)



www.eelamview.com

வேண்டும் என்ற துடிப்பு மோட்டாருக்கான அதிநவீன துணைக்கருவிகளின் பயன்பாட்டு முறைகள் என அனைத்துமே புதுமையானதாகவும் புதினமானதாகவும் இருந்தன.

இச்சந்தர்ப்பங்களில் அனுபவ ஆசானாக நின்ற தர்சன் அனைத்து அணிகளைச் சார்ந்த போராளிகளையும் பயிற்சிக் களத்தின் மையத்தில் சந்தித்தான். அவர்களுக்கு புத்தூக்கியாகச் செயற்பட்டான். போராளிகள், பொறுப்பாளர்கள், தளபதிகள் ஆகியோருடன் இரண்டறக் கலந்து அணிகளுக்குப் புதுவேகம் ஊட்டினான்.

வியர்வையில் குளித்து, உடல் சோர்ந்து போகும்வேளை மோட்டார் அணியினது தனி ஒரு போராளியின் இயலாமையானது, அவ் அணியையும் பாதிக்கும். மோட்டாரையும் பாதிக்கும். எனவே ஒருமித்த போராளிகளது செயற்பாடு இங்கு மிக அவசியமானது.

கை நழுவினால் கால் சிதையும், கால் இடறினால் கை சுளுக்கும் கூடவே மோட்டாரின் 'லொக்' உடையும். இவ்வாறு மோட்டாரின் கனமான பகுதிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கதை சொல்லும் வாழ்வாகவே பயிற்சிக் காலம் தொடர்ந்தது.

இத்தகைய கதைகளை பொருத்தமான இடங்களில் சொல்லிச்சொல்லி அணிகளை ஆற்றுப்படுத்தி சவால்களை எதிர்கொள்ளும் இலகு வித்தைகளைக் கற்றுக் கொடுத்த தர்சனுக்கு அனைத்துப் போராளிகளிடமும் மரியாதைக்குரிய ஆசான் என்ற நிலையினையும் பெற்றுக்கொடுத்தது.

அக்காலப்பகுதியில் எதிரியால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட 'ஜெயசிக்குறு' என்ற வரலாற்றுப் படைநடவடிக்கை வன்னி மண்மீது கட்டவிழ்த்து விடப்பட்ட போது எமது தலைவர் அவர்களால் கேணல் கிட்டு பீரங்கிப்படையணி என்ற பெயர் சூட்டி புதிய வரலாறு படைக்க, புதிய மூச்சுடன் மோட்டார் படையணிகள் களமிறங்கின.

'ஜெயசிக்குறு' நகர்வை அதன் தொடக்க வாயிலில் இருந்து இடைநடுவில் கைவிட்டுச் செல்லும்வரை புலிகளின் எதிர்ச்சமர் போரியல் வரலாற்றில் புதிய பதிவொன்றை ஏற்படுத்தியதை காலம் எமக்கு நினைவூட்டும். அதை மோட்டாரினால் சாதித்தவர்களில் ஒருவன் தர்சன்.

வரலாற்றுச் சமரை எதிர்கொண்ட களங்களில் எமது படையணிகள் சந்தித்த சவால்கள் ஒவ்வொன்றும் இலகுவாக விளக்கமுடியாதவை. மோட்டார் அணிகளைப் பொறுத்தவரை மோட்டார் ஒன்றினை நகர்த்தி உரிய இடத்தில் நிலைப்படுத்திவிட்டு எந்நேரமும் தயாராக இருக்க வேண்டும்.

"வேகமாக நிலைப்படுத்திப் போட்டு 'ஒக்கே' பண்ணுங்கோ" என்ற கட்டளை கிடைக்கும். அடுத்தகணம் சூடு பறக்க வேலைகள் நடக்கும்போதே "உங்கட மோட்டாரை அப்பா பகுதிக்கு நகர்த்தி வேகமா நிலைப்படுத்திப்போட்டு ஒக்கே பண்ணுங்கோ" சண்டையின் போக்கிற்கு ஏற்ப பறந்துவரும் மாற்றுக்கட்டளை.

'முந்துபவன் வெல்வான்' என்பது போரில் கடைப்பிடிக்கவேண்டிய விதிகளில் ஒன்று. எங்கள் பிரியத்திற்குரிய தர்சனிடம் இருந்த சலியாத வேகம் எமது அணிகளை துரிதமாக நகர்த்திச் சென்றது.

தனித்து ஒரு போராளியால் கையாள முடியாத பாரிய சுமைகொண்ட உடற்பாகங்களைத் தாங்கிய ஒரு மோட்டாரினை கழற்றுவதும், மீண்டும் பொருத்துவதும் என்பது விரைந்துவரும் வெற்றிச் செய்தியைப் போலல்ல.

ஏற்று, இறக்கு, பொருத்து, நிலைப்படுத்து, மீண்டும் கழட்டு, தூக்கு, கொழுவு, பொருத்து என்ற சொற்களால் அடிக்கடி கட்டுண்டவர்களாக எமது பணிகள் தொடரும்போது, கூட நின்று வழிகாட்டி தோள்கொடுக்கும் சுமைதாங்கியாகவும் தர்சன் செயற்படுவான்.

'களைப்பாய் கிடக்கு, பிளேன்ரீத் தண்ணி ஒன்று குடிப்பம்' என்று ஆசை எழும்போது நின்ற இடத்திலேயே அது தயாராகும். "தர்சண்ண வழங்கல் சீனி முடிஞ்சி போச்சு", "சரி மச்சான் தண்ணிய அடுப்பில வை, சீனி கொண்டுவாறன்" இப்படிச் சொல்லும் தர்சன், சுழன்று அடித்துக்கொண்டு சீனி, லக்ஸ்பிறே என்று கொண்டுவந்து சேர்ப்பான்.

'மோட்டார் நிலைக்கு சைக்கிள் ஒண்டு வேணும் தர்சண்ணையை கேட்பம்.' 'வரைபட வேலைக்கு பென்சில், மாக்கர், திபெக்ஸ் வேணும் தர்சண்ணனை கேட்பம்.' 'ரக்டர் பெட்டி உடைஞ்சு போச்சு தர்சண்ணையிட்ட மாறிக்கேட்பம்.'

'லோக்கி சொக்கற் பழுது, குறொசும் அறுந்திட்டுது தர்சண்ணைக்கு அறிவியுங்கோ.' 'இன்னும் ஒரு கிலோமீற்றருக்கு 'லைன்' தகடுகள் போடவேணும், தகடும், பெயின்ரும் கொண்டுவாறன் எண்டு தர்சண்ணன் சொன்னவர்.'

'இது தர்சண்ணன் வாங்கித் தந்த சேர்ட். இந்த ஜீன்ஸ் தர்சண்ணன் தச்சுத் தந்தவர்.'

இப்படி, இப்படி எல்லோர் மனங்களிலும் நிலைத்து நிற்கக்கூடிய முத்திரையைப் பதித்துவிட்டவன் எப்படி எங்களைப் பிரிந்து போகமுடியும்.

"திறினைன், திறினைன்..."இது எங்கள் தளபதி சேகரை அழைக்கும் குறியீட்டுப் பெயர், "உங்கட பக்கத்தால ராங் ஒன்று அடிச்சுக்கொண்டு வருகுது நான் அத நிப்பாட்டுறன் நீங்க மற்றதுகள கவனியுங்கோ."

"ருசிக்ஸ் நானும் அத சொல்ல நினைச்சன் நீங்களும் அதை கவனிச்சு போட்டியள் என்ற தளபதி சேகரின் நம்பிக்கையும், நன்றியும் கலந்த உரையாடலுடன் களம் வெற்றியை நோக்கி நகரும்.

**- அ.அமுதன் -**

"ரு சிக்ஸ், ரு சிக்ஸ்... போர் சிக்ஸ்....", "சொல்லுங்கோ அண்ணை... உன்னட்ட இருக்கிற 'முடியரசன்' வரைபடத்தை ஒருக்கா பார்..", "சொல்லுங்கோ அண்ணை", "அதில விடிவெள்ளி என்ற சந்தி இருக்கு பார்..." "விளங்கிட்டுது சொல்லுங்க அண்ணை" "அதில கவனமா பார் அந்த முக்கோணத் துண்டில கொஞ்சப்பேர் வந்து ஒதுங்கிறாங்கள். பவள்ள கொண்டுவந்து இறக்கிறான் அத துடைச்சு அழிக்கோணும் உடன செற்பண்ணு" என கட்டளைத் தளபதி கேணல் பானு சொல்லி முடிக்கவும் தர்சன் ஓ.கே பண்ணவும் மின்னல் வெட்டி மறையும் இடைவெளிக்குள் துடைப்பு அழிப்பு அரங்கேறும்.

இவ்வாறே தனது வரைபட அறிவாலும் கணித அறிவாலும் பரந்த பகுதியில் திக்கொன்றாக நடந்துகொண்டிருக்கும் உக்கிர மோதல்களில், களநிலையை துல்லியமாகக் கணக்கிட்டு தளபதிகளின் கட்டளைகளை நிறைவேற்றவும் அணிகளுக்கு ஆதரவு வழங்கவும் தர்சன் முண்டியடிப்பான்.


சிறிய ஆளணியையும், மிக அரிதான வளங்களையும் பயன்படுத்தி குறுகிய காலத்தில் செய்துமுடிக்க வேண்டுமென்று திட்டமிட்டுக் கொடுக்கப்படும் பணிகளை மிகுந்த பொறுப்புணர்ச்சியுடனும், கவனத்துடனும் செய்து முடித்துவிட்டு கட்டளைத் தளபதியின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றவே காத்திருப்பான்.

"தர்சனிட்ட கொடுக்கிற எந்த வேலைத்திட்டங்களையும் திருப்பி ஒருக்கா பார்க்கவேண்டிய தேவையில்லை அந்தளவு அவன்ர வேலையில நம்பிக்கை இருக்குது" இப்படி மூத்த தளபதி கேணல் பானு தர்சனைப் பற்றிய கருத்தை பகிர்ந்து கொண்டார்.

"எமது தாக்குதல்களில் நாம் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக தன்னால் எவ்வளவு செய்ய முடியுமோ அத்தனையையும் செய்யவேண்டும் என்ற ஆர்வம் தர்சனிடம் இருந்தது. பல தாக்குதல்ல தர்சன் அதை செய்தும் காட்டியுள்ளான்" இவ்வாறு வடபோர் முனைக் கட்டளைத் தளபதியான கேணல் தீபன் தனது மனதிலுள்ளதைப் பகிர்ந்துள்ளார்.


"எங்களுக்கெண்டு சண்டையில ஒரு பகுதி தரப்பட்டா அதற்கு மோட்டார் சப்போட்டா தர்சண்ண வரமாட்டாரா? என்று எங்களுக்குள்ள கதைப்பம்"என்று இளநிலைத் தளபதிகள் பலரும் தர்சனை நினைவு கூர்கிறார்கள்.

போர்க்களங்களில் தனது துணிவு, அறிவு, ஆற்றல்களை ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் நிறைவாக பயன்படுத்திய இவன் 04.11.2000அன்று காவலரண் பகுதி ஒன்றின் ஊடாக களநிலைகளை அவதானித்துக்கொண்டு வரும்போது எதிரியினால் குறிபார்த்து சுடப்பட்ட குண்டை மார்பிலேந்திச் சரிந்த தர்சனை அறிந்த அத்தனை போராளிகளின் மனங்களிலும் இப்போதும் குமுறிக்கொண்டுதான் இருக்கிறது.




# சமரும் மருத்துவமும்

-ஒரு பார்வை




தூயவனுடைய இரண்டு புத்தகங்கள் ஒரே மாதத்தில் அடுத்தடுத்து வெளிவந்திருக்கின்றன. ஒன்று இன்னொரு போர்முகம், மற்றது சமரும் மருத்துவமும்.

இன்னொரு போர்முகம் 1996ஆண்டு சீனன்குடா விமானப் படைத்தளத்தின் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் தொடுத்ததைப்பற்றிய புதிய போர்க்கதை. ஒரு நாவலாக, வரலாற்றுப் பதிவாக, போர்க்கள அனுபவப் பகிர்தலாக, போராளிகளின் விடுதலை வேட்கையும் தோழமையுணர்வும் நிரம்பியதாக உண்மைக் கதையின் விபரிப்பாக வடிவமாகியிருக்கிறது.

'சமரும் மருத்துவமும்' கடந்த பத்தாண்டுகளின் - இரண்டாவது ஈழப்போரின் பின்னான - தமிழீழ விடுதலைப் போராட்டக் களத்தின் பல்வகை வெளிப்பாடாக வந்திருக்கிறது.

போர்க்களத்தின் யுத்த நடவடிக்கைகள், போராளிகளின் வாழ்க்கை, யுத்தத்தை அவர்கள் எதிர்கொள்ளும் பாங்கு, வெற்றியை நோக்கி நகரும் வேகம், சந்திக்கும் நெருக்கடிகள், பிரச்சினைகள், புதிய சிந்தனைகள், நெருக்கடிகளை வெற்றியாக எதிர்கொள்ளும் திறன் எனப் பலவற்றையும் வெவ்வேறான தனித்தனிப் படைப்புகளில் சொல்கிறார் தூயவன்.

தூயவன் சொல்லுகின்ற விடயங்கள் ஈழத்தமிழ்ச்சூழல் வெளிப்படுத்திவரும் புதிதளித்தல்களில் இணைந்திருப்பதால் அவற்றுக்குரிய ஈர்ப்பையும் கவர்ச்சியையும் அவை கொண்டிருக்கின்றன.

சமரும் மருத்துவமும் வெறுமனே சண்டைக்காலத்தின் அல்லது போர்க்காலத்தின் சமரைப்பற்றியதும் மருத்துவத்தைப் பற்றியதும் மட்டுமான நூலல்ல. போர்க் காலமொன்றின் மருத்துவமுறைகள் அல்லது மருத்துவத்தின் அவசியம் பற்றிய குறிப்பேடுமல்ல.

விடுதலைப் போரொன்றின்போது விடுதலை இயக்கம் ஒன்று எப்படி போரை எதிர்கொண்டு அதன் நெருக்கடிகளை ஈடுசெய்யும் என்பதற்கும் அதிலும் விடுதலைப்புலிகள் எதிர்கொண்ட போரின்போது எப்படியெல்லாம் தமக்கேற்பட்ட பிரச்சினைகளையும் தீவிர நெருக்கடிகளையும் தகர்த்தெறிந்து வெற்றி கொண்டார்கள் என்பதையும் சொல்கிறது சமரும் மருத்துவமும்.

போரின்போது மிகமிக அவசியமாக இருப்பது மருத்துவமே. பொதுவாகவே மனிதருக்கு மிக முக்கியமான தேவையாக இருப்பது மருத்துவம். போர்க்களத்தில் இதன்தேவை இன்னும் இன்னும் அதிகமானது. அதிலும் அது பல நெருக்கடிகளையுடையது. அதிலும் விடுதலைக்காகப் போராடும் தரப்பொன்றின் மருத்துவத் தேவையின் அவசியமோ இன்னுமின்னும் முக்கியமுடையது. அப்படியான தேவையை எந்தவகையான வழியும் வசதியுமற்ற சூழலில் எப்படி நிறைவேற்றப்பட்டது என்பது வியப்புக்குரிய ஒன்றல்லவா. அதை தனது களமருத்துவ அனுபவத்தின் மொழியில் சமரும் மருத்துவமும் என ஆக்கியுள்ளார்.

சமரும் மருத்துவமும் மருத்துவ அனுபவங்களுக்கப்பாலான வேறு விடயங்களையும் உள்ளடக்கியிருக்கிறது. விடுதலைப் போராட்டத்துக்கான ஆளணித்தேவையை, பொதுமக்களுக்கான மருத்துவத் தேவைகளை, போராளிகளின் இறதிக் கள உணர்வுகளை, எல்லா விதிகளையும் மிஞ்சி நிறைவேற்றவேண்டிய களமருத்துவப் பணிகளை மிக நுட்பமாக சிறப்பானதான ஒரு வெளிப்பாட்டுத்தியில் தருகிறார் தூயவன்.

தூயவனின் இந்த எழுத்துக்கள் பலவகைப்பட்டிருக்கின்றன. கட்டுரையாக இருக்கிறது ஒன்று. சிறுகதையாக இருக்கின்றது மற்றொன்று. உண்மைச் சம்பவமொன்றின் பதிவாக உள்ளது இன்னொன்று. புனைவாக இருக்கிறது வேறொன்று. இப்படி வெவ்வேறு வகைப்பட்ட எழுத்துகள் மெய்யாகவே அதனதன் அவசியம் கருதி இயல்பாக வந்திருப்பதன் அடையாளம்தான் இந்த எழுத்து வரையறைகளைக் கடந்த இயல்பான வெளிப்படுதல் இது. இப்படித்தான் இந்தக்களத்தின் எழுத்துகள் பலவும் இயல்புடன் வெளிப்படுகின்றன.

போருலா, சுதந்திரவேட்கை, இன்னொரு போர்முகம். அம்மானைக்கும்பிடுறானுவள், வில்லுக்குளத்துப் பறவைகள், மேஜர் கிண்ணி, மீண்டும் யாழ் மண்ணில் பதிந்த எம் தடங்கள், இனிவானம் வெளிச்சிடும், உலைக்களம் போன்றவை இந்தவகைப் புதிய போக்கிலானவை. இவற்றைவிட பலவற்றை இன்னும் பல போராளிகள் எழுதியிருக்கிறார்கள். இன்னும் தொடர்ந்து எழுதிக்கொண்டிருக்கிறார்கள். இன்னுமின்னும் தமிழுக்குப் புதிய விசயங்கள் புதிய முறையில் வரவுள்ளன.

போர் எப்படிப் பலவற்றைச் சிதைக்குமோ அப்படிப் படைப்பிலும் பல சிதைவுகள் போரின்போது நிகழ்ந்துவிடுகிறது. போராட்டத்தில் எப்படியொரு புதுவாழ்வு கிடைக்கிறதோ அவ்வாறு போராட்டப் படைப்புகளும் புதியனவாக, புதுமையானவையாக வந்துவிடுகின்றன. இந்த யதார்த்தம் வரலாற்றில் நிறையவுண்டு.

எங்களுடைய சூழலும் இன்று இத்தகைய அனுபவங்களைப் பெறுகிறது. சிதைவும் புதியன பெறுதலுமாகி நிகழும் போக்கில் தன்னை விரித்துச் செல்லுகிறது. இதில் ஒரு புள்ளியாக, தனது அடையாளத்தை நிறுவுகிறார் தூயவன்.

தூயவன் மூன்று நிலைகளில் இயங்குகிறார்.

1. போராளி
2. போராளி மருத்துவர் - மருத்துவர்
3. படைப்பாளி - போராளிப் படைப்பாளி - போராளி மருத்துவப் படைப்பாளி

விடுதலைப்புலிகள் பத்திரிகையிலும் வெளிச்சம் சஞ்சிகையிலும் வெளிவந்த படைப்புகள் ஒரு நூலாக தொகுக்கப்பட்டிருக்கின்றன. தனித்தனியாக வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வாசிப்பதற்கான வெளியீட்டில் வந்திருந்த இவை இப்பொழுது ஒன்றுசேர வாசிக்கும்போது முழுமொத்தமாக வேறொரு பிரத்தியேக அனுபவத்தைத் தருகின்றன.

போர் உக்கிரம் பெற்றிருந்த சூழலில் எழுதப்பட்டிருந்த இந்த எழுத்துக்களை இன்றைய அமைதிச் சூழலில் வாசிக்கும்போது ஏற்படும் மன உணர்வு இங்கே விபரிக்கமுடியாத நிலையில்தான் இருக்கிறது. இதை வாசிக்கும்போது நீங்களும் உணர்ந்து கொள்வீர்கள்.

வியப்பூட்டும் பல மெய்நிகழ்ச்சிகள், போராளிகளின் வாழ்க்கை முறைகள், களத்தின் யதார்த்தம் எல்லாம் அத்தகைய மனவுணர்வைத் தருகின்றன. என்னவென்று சொல்லமுடியாத ஒருநிலை. இந்த அனுபவங்களை நேரில் நிறையச் சந்தித்த தூயவனும் தூயவன் போன்ற போராளி - போராளி மருத்துவர்களும் எத்தகைய மனநிலையுடன் இருந்திருப்பார்கள் என்று எங்களிடம் கேள்வியும் ஆச்சரியமும் எழுகின்றது.

மெய்யாகவே நமது நிகழ்கால வரலாறு எல்லாவகையான அனுமானங்களையும் கடந்த ஒரு யதார்த்தம்தான். அந்த யதார்த்தத்தை - திகைப்பூட்டும் மெய் யதார்த்தத்தை வாழ்ந்துகொண்டிருக்கும் நமது காலம் ஒரு அதிசயமானதுதான் அபூர்வமானதுதான். அதை எழுத்தில் - படைப்பில் தரும் திறன் யதார்த்தம் இன்னும் அதிசயம் தருவது. அத்தகைய அதிசயத்தை தூயவனும் சமரும் மருத்துவத்தில் தருகிறார். ◆



www.eelamview.com

# ஓயாத அலையும் ஒருதுண்டு பொரியலும்

அ.ந.பொற்கோ

அந்த முகாம் வெறிச்சோடிக்கிடந்தது. அலை மூன்றில் பங்கெடுக்க அனேகர் போயிருந்தனர். அவனுக்கும் இன்னும் சிலருக்கும் மட்டும் அனுமதி கிடைக்கவில்லை.

சோகமே உருவாக அவனும் அவர்களும் குந்தியிருந்தனர். வெடியோசை கேட்க மனதுக்குள் வெதும்பினர். முகம் பார்த்துக் கதைக்க மனமின்றி மூலைக்கு ஒருவராய் முடங்கிப்போனார்கள். அவன் எழுந்து தொலைத்தொடர்பாளன் அறைக்கு வந்தான். சண்டை நன்றே சடுதியாய் நகர்வதை அறிந்து வெற்றிப்பாட்டுடன் வெளியே வந்தான்.



கட்டாக்காலி நாய்கள் முகாமுக்குள் நுழைந்து கத்தித் தொலைத்தன. அவனின் பார்வை அவைகளில் நிலைக்க எடுத்தன ஓட்டம். மூலைக்கு ஒருவராய் முடங்கிய நண்பர்கள் செய்தி அறிய அவனிடம் வந்தனர்.

செம்மணி கடந்து எம்மணிகள் நகர்ந்துகொண்டிருந்தன. அவர்களின் உணவுக்குச் சுவையூட்ட கடல்நீரேரி கடந்து மீன்பொரியல் போகவேண்டியிருந்தது.

அந்தப்பணி அவனிடம் வந்து சேர்ந்தது. சண்டையணிகளின் உணவுத்திருப்திக்கு முல்லைத்தீவிலிருந்து பூநகரி நோக்கி அவன் பயணம் தொடங்கியது.

காலையில் கடற்கரையில் காத்திருந்து மீன் எடுக்கவேண்டும். வேளைக்கு வெட்டி பொரிக்குமிடம் வரவேண்டும். நாலைந்து அம்மாக்கள் நடுச்சாமம் மட்டும் மீன் பொரிப்பார்கள். அவனும் கூடவே அகப்பை பிடிப்பான். பொரியலின் பதம் பார்த்து உறுதிப்படுத்தியவண்ணமிருப்பான். நடுச்சாமம் கழிந்த பொழுதில் ஊந்துருளிக் கரியலில் ஆளை மறைக்கும் அடுக்குப் பெட்டிகளில் பொரியலுடன் அவன் பயணம் தொடரும்.

அதிகாலை படகு அக்கரைக்குப் புறப்படமுன் பொரியல் போய்ச்சேரவேண்டும். குண்டும் குழியுமான வீதியில் குதிரை ஓட்டம் ஓட வேண்டும். கண்கள் சிவந்திருக்க கால்கள் உளைவெடுக்க அவன் பயணம் தொடரும். தூக்கம் கண்களுக்குள் ஊசலாடியபோதும் நிதானம் இருக்கும். பொரியல் போய்ச்சேருமட்டும் அவனின் மனத்தில் அந்தநாள் பணி கனக்கும். இரவுப்பறவை இடைவழியில் முகத்தில் அடித்து வித்தை காட்டும். சில நாட்களில் சிதைந்த வீதி ரயரைப் பதம் பார்க்க காற்றுப்போய்விடும். மேலதிக ரீப்பை மாற்றி வேகமெடுப்பான். கடல்நீரேரி நெருங்க வெடியோசை துல்லியமாய் கேட்கும். மாபெரும் மத்தாப்பாய் பராக்கள் வானில் விரியும். இரவை ஒளி விழுங்கும். எந்த இடர் எனினும் படகு புறப்படுமுன் பொரியல் வந்து சேர்ந்துவிடும். படகில் உள்ளவர்களோடு கதைக்க அவனுக்கு நேரமில்லை. புன்னகையே கதையாய் மாறும். அடுத்தநாள் பணி மனத்தில் விரிய உந்துருளி வந்தவழி வேகமெடுக்கும். நீண்டநாள் நித்திரையற்ற விழிகள் நிதானம் இழக்க உந்துருளி பற்றைக்குள் பூரும். உடலில் குருதி சொட்டுப்போடும். மீண்டும் நிதானித்து அவன் பயணம் தொடரும். அவன் வந்துசேர பொழுதுவிடிந்து சில மணிகள் கடந்திருக்கும். ஓய்வெடுக்க அவனுக்கு நேரமில்லை. நாளையும் பொரியல் போகவேண்டியிருந்தது.

பகிரப்படாத பக்கங்கள்

# சிங்களப் படைகளும்

(07ம் பக்கத் தொடர்ச்சி)

இதுபற்றி அமெரிக்க இராசாங்கச் செயலக வருடாந்த அறிக்கை குறிப்பிடுகின்றது.

1997மே மாதத்தில் நான்கு பிள்ளைகளின் தாயாரான கோணேஸ்வரி, வயது35 அம்பாறை பொலிசாரால் தொடர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டபின் அவருடைய உடலில் கிரனேற் பொருத்திக் கொல்லப்பட்டார். இற்றைவரை குற்றவாளிகளுக்கு எதிராக அர்த்தமுள்ள நீதி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. 60,000 உறுப்பினர்களைக் கொண்ட சிறிலங்கா பொலிஸ் படையில், 500பேர் மாத்திரம் தமிழர்களாக உள்ளனர். ஊழல் மலிந்த இனவாத அமைப்பான இப்படை தனது மத்தியிலுள்ள குற்றவாளிகளைப் பாதுகாப்பதையே முழுமுதற்கடமையாக கொண்டுள்ளது. போலி முறைப்பாட்டுப் புத்தகங்களைப் பேணுகிறார்கள் என்ற உண்மை மிக அண்மையில் வெளிவந்தது.

1990-2000 இடைப்பட்ட காலப்பகுதியில் 50,000 வரையிலான தென்தமிழீழ உடன் பிறப்புக்கள் சிங்களப்படைகளால் கொல்லப்பட்டுள்ளனர். மட்டு-அம்பாறை மண்ணில் 20,000த்திற்கும் கூடுதலான இளம் விதவைகள் வாழ்வதாக கணக்குகள் தெரிவிக்கின்றன. யாழ்ப்பாணம், கிளிநொச்சி என்பனவற்றிலும் பார்க்க கூடுதலான எண்ணிக்கையில் மனிதப் புதைகுழிகள் இங்கு காணப்படுகின்றன. காணாமற்போனோர் இங்குதான் வடதமிழீழத்திலும் பார்க்க அதிகம். 'வெள்ளைவான்' ஆட்கடத்தல் என்ற பயங்கர நடவடிக்கை முதன்முதலில் மட்டு-அம்பாறையில் தொடங்கப்பட்டது. படையதிகாரியாக மட்டக்களப்பில் பதவி வகித்த ஜானகபெரேரா தனது காலத்தில் வெள்ளைவான் கலாச்சாரத்தை உருவாக்கினார். யாழ் செம்மணி புதைகுழியில் 650 வரையிலான தமிழர்கள் புதைபடுவதற்கும் இவரே பொறுப்பாவார். எங்கு சென்றாலும் தனது முத்திரையைப் பதிப்பது அவருடைய பிரத்தியேக பாணி. மட்டு - அம்பாறை அனர்த்தங்கள் இன அழிப்புப்பரிமாணங்களைக் கொண்டது. கொலைப் பயமுறுத்தல் மூலம் இடம்பெயரச்செய்து பாரம்பரியத் தமிழ்க் கிராமங்களை அபகரிக்கும் நோக்கம் அடிப்படையாக இருக்கின்றது. ஒரு இனத்தை அழிக்கவேண்டுமானால் அதன் நிலத்தை பறிக்கவேண்டும், படுகொலைக்குப்பின் எஞ்சியோரை சொந்த மண்ணில் இருந்து விரட்டியடிக்கவேண்டும். புரிந்துணர்வு உடன்படிக்கை எட்டப்பட்ட பின்பும் தென்தமிழீழ மக்கள் நிம்மதியாக வாழ முடியவில்லை. தமிழர்களைத் தமது கொத்தடிமைகளாக எண்ணும் போக்கை எஸ்ரிஎப் போன்ற சிங்களப் படைகள் கைவிடாத வரை இயல்பு நிலை தோன்ற வாய்ப்பில்லை.

1987 ஜனவரி 28 ஆம் நாள், அமெரிக்காவின் நிதி உதவியோடும் கண்காணிப்போடும் இயங்கிய மகிழடித்தீவு இறால் பண்ணையில் பணியாற்றிய 135 தமிழ்மக்கள் எஸ்ரிஎப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர். சடலங்களை அவர்களே உழவு இயந்திரத்தில் ஏற்றிச்சென்றார்கள். இந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து வேறுபல படுகொலைகளை இராணுவத்தினரும், எஸ்ரிஎப் படையினரும் கூட்டாக நடத்திமுடித்தனர். இவர்கள் சிங்கள அரசின் பின்னணி ஆதரவுடன் நடத்திய படுகொலைகளின் பட்டியல் கொக்கட்டிச்சோலைப் படுகொலை, வந்தாறுமூலைப் படுகொலை, சத்துருக்கொண்டான் படுகொலை, புல்லுமலைப் படுகொலை, உடும்பன்குளப்படுகொலை, தோணிதாண்டான்மடுப் படுகொலை என்று நீண்டு செல்கின்றது.



கொக்கட்டிச்சோலை, மகிழடித்தீவில் படுகொலை செய்யப்பட்டோர் நினைவுத்தூபி

யாழ் மண்ணில் நடந்த படுகொலைகளை இராணுவத்தினரும் விமானப்படையினரும் தேசத்துரோகக் கும்பல்களின் உதவியுடன் நடத்தினர். மட்டக்களப்பு அம்பாறைவாழ் தமிழர்களின் படுகொலைகளை இராணுவத்தினருக்குப் பக்கபலமாக நின்ற சிங்கள மற்றும் முஸ்லிம் காடையர்களும், தமிழ் தேசத்துரோகக் கும்பல்களும் இணைந்து செயற்படுத்தினர். தென்தமிழீழ மக்கள் எதிர்கொண்ட அச்சுறுத்தல் பன்மடங்கு பெரியது. அவர்கள் சந்தித்த இழப்புக்கள் மிகவும் கூடுதலானவை. சிங்களப் புத்திஜீவி பேராசிரியர் காலிங்கருணாட்ணா தீட்டிய திட்டத்தின்படி தமிழ்இன அழிப்பும் சிங்கள குடியேற்றமும் தமிழர் மண்ணில் நடைபெறுகின்றன.

1990 ஆகஸ்து 9ல் நடந்த சத்துருக்கொண்டான் படுகொலையில் 184 தமிழர்கள் மாண்டனர். 1983, 1990, 1991ல் அம்பாறை மாவட்டத்தின் அட்டப்பள்ளக்கிராமப் படுகொலைகள் நடந்த போது விசேட அதிரடிப் படையினர் முஸ்லிம் காடையர்களை இணைத்து செயற்பட்டனர். அம்பாறையில் பறிபோன தமிழ்க் கிராமங்கள் இன்று சிங்கள, முஸ்லிம் கிராமங்களாகப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

1990ஆகஸ்து 02ல பொத்துவில் அகதி முகாமில் வாழ்ந்த 150 ஆண், பெண், சிறுவர்கள் இராணுவத்தினராலும் அவர்களுக்கு உதவும் முஸ்லிம் காடையர் சிலராலும் கொல்லப்பட்டனர். ஒரு மாதத்தின்பின் 1990 செப்ரம்பர் 05ல் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வந்தாறுமூலை கிழக்கு மாகாணப் பல்கலைக்கழக அகதிமுகாமிலிருந்து 168 தமிழ் அகதிகள் கடத்திச் செல்லப்பட்டனர். இவர்களுடைய சடலங்கள் இன்றுவரை மீட்கப்படவில்லை. அகதி முகாமிலிருந்து கடத்திச் சென்று படுகொலை செய்வதற்கு செங்கலடி இராணுவ முகாமின் பொறுப்பதிகாரி கப்டன் களுஆராய்ச்சி, வாளைச்சேனை இராணுவமுகாமின் கட்டளை அதிகாரி மேஜர் மஜீத், மட்டக்களப்பு இராணுவமுகாமைச் சேர்ந்த மேஜர் மொகான் சில்வா, அதே இராணுவ முகாமைச் சேர்ந்த கப்டன் மூனாஸ் ஆகியோர் பொறுப்பாக இருந்தனர்.

1990ல் இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமானதைத் தொடர்ந்து மட்டக்களப்பு சிறிலங்கா படைகள் வசம் வீழ்ந்தது. இதன்பின் படுகொலைகள் சுற்றிவளைப்புக்கள், காணாமற்போதல்கள், பாலியல் வன்முறைகள் என்பன மீண்டும் நடைமுறைக்கு வந்தன. இக்காலப்பகுதியில் தமிழ்மக்களால் பரவலாகப் பேசப்பட்ட பெயர் கப்டன் மூனாஸ் (CAPT. MUNAS) நீர்கொழும்பைச் சேர்ந்த கத்தோலிக்க மதத்தினரான இந்த மனிதரின் உண்மைப்பெயர் பீரிஸ் மாட்டின். இஸ்லாமியத் தீவிரவாதியாகவும் முஸ்லிம்களின் தோழனாகவும் நடித்த இவர் 1990இல் புதிதாக உருவாக்கப்பட்ட இராணுவப் புலனாய்வுத் துறையைச் (MILITARY INTELLIGENCE CORPS) சேர்ந்தவர். சுற்றிவளைப்புக்களில் தவறாது பிரசன்னமாக இருப்பது இவருடைய இயல்பு.

இவர்முன் நிறுத்தப்படும் தமிழர்களை மிரட்டும் தொனியல் "நான் ஒரு நல்ல முஸ்லிம், அல்லாவைத் தவிர வேறு எவருக்கும் பயப்பிடமாட்டேன்"என்று கூறுவார். தற்பொழுது மூனாஸ் என்று கூறுமவர் இராணுவப் புலனாய்வுப் பணியகத்தின் (MILITARY INTELLIGENCE DIRECTORATE) உயர்பதவி வகிக்கிறார். 1994ல் இவர் கொழும்பு புல்லாஸ் வீதி எஸ்ரிஎப் அலுவலகத்தில் பணியாற்றினார். தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டு பொல்கொடை வாவியில் வீசப்படுவதற்கு பொறுப்பாகவிருந்தார்.

தென்தமிழீழ மக்களின் அவலங்கள் வெளியுலகிற்கு வெளிவராமல் இருப்பதற்கு சிங்களவர்களுக்குச் சொந்தமான கொழும்பின் ஆங்கில, சிங்கள பத்திரிகைகள் தொடர்ச்சியாகச் செய்யும் மூடிமறைப்பும், இருட்டடிப்பும் முக்கிய காரணங்களாக அமைகின்றன. இனவாதத்தைக்கக்கும் ஊடகங்கள் படுகொலைகளை எல்லாமட்டத்திலும் ஊக்குவிக்கின்றன. எமது துன்ப வரலாற்றை நாமே பதிய வேண்டும். நீத்தார் நினைவுச் சின்னங்களை உரிய முறையில் கட்டியெழுப்பும் பொறுப்பு எம்முடையது மாத்திரமே.





www.eelamview.com

தமிழில் அறிவியல் வளரவில்லை அல்லது அறிவியல் தமிழ் வளரவில்லை என்றொரு குறை பரவலாக உண்டு. தமிழில் அறிஞர்கள் பெருமெடுப்பில் வரும்போதே அறிவியல் தமிழும் வரமுடியும். இதன் அர்த்தம் தமிழில் அறிஞர்கள் தோன்றவில்லை என்பதல்ல மாறாக, தமிழில் தோன்றிய அறிஞர் பலர் தமிழைத் தமது தொடர்பு மொழியாகவோ அல்லது வெளிப்பாட்டு மொழியாகவோ. கொண்டிருக்கவில்லை

# புதிரான புலிவீரமும் தமிழின் முதலாவது படையணிமலரும்

என்பதே சரி.

பெரும்பாலான தமிழ் அறிஞர்கள் பிறப்பால் தமிழர்களே தவிர தொழிலால் ஆங்கிலேயர்கள்தான். மேற்கத்தைய அறிவியல் மரபில்தான் அறிஞர்களுக்கு கவர்ச்சியும் மதிப்பும் அதிகமாக இருப்பதும் இதற்கொரு காரணம்.

இத்தகைய ஒரு பின்னணியில் தமிழில் தோன்றிய அறிஞர்கள் பலர் ஆங்கிலத்திலேயே சிந்திப்பவர்களாகக் காணப்படுகிறார்கள். கணித மேதை ராமானுஜம், விண்ணியல் விஞ்ஞானி சந்திரசேகர், தற்சமயம் இந்தியாவின் ஜனாதிபதியாயுள்ள அப்துல் கலாம்... என்றொரு பட்டியலை இங்கே காட்டமுடியும்.

இவ்விதம் அறிவியல் தமிழ் அதிகம் வளரவில்லை என்பதான விமர்சனங்களின் மத்தியில் தமிழ் அறிவியலின் ஒரு கூறாகவுள்ள போரியல் தமிழில் ஒரு புதுப் பிரவேசம் அண்மையில் நிகழ்ந்துள்ளது.

விடுதலைப்புலிகளின் முதலாவது மரபுப்படையணி என்று அழைக்கப்படும் சாள்ஸ் அன்ரனி படையணியின் பத்தாவது ஆண்டு நிறைவையொட்டி வெளியிடப்பட்ட தமிழின் முதலாவது போரியல் தொகுப்புமலர். அது வெளியிடப்பட்டு இரண்டு வருடங்களின்பின் பொதுசனங்களின் கைக்குக் கிடைத்திருக்கிறது.

தமிழுக்கு இது ஒரு புது அனுபவம்.

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தில் முன்னெப்பொழுதும் இதுபோல ஒரு மலர் வெளிவந்ததில்லை. வெளிவந்திருக்கவும் வாய்ப்பில்லை. ஏனெனில் தமிழுக்காகப் போர் எனப்படுவது இங்கேதான் நடந்துவருகிறது. தமிழில் முதலாவது மரபுப் படையணி எனப்படுவது அதன் நவீன அர்த்தத்தில் இங்கேதான் உருவாகியிருக்கிறது. எனவே அந்தப் படையணியின் தொகுப்பு மலரே தமிழில் முதலாவது படையணி மலராக வெளிவருவதே சாத்தியம்.

ஆயின், தமிழில் இதற்கு முன்பு போர் நடக்கவில்லையா? படையணிகள் தோன்றவில்லையா?

இந்தக் கேள்விகளுக்கான பதில்களைப்பெற நாம் சற்றுப் பின்னோக்கிப்போக வேண்டியிருக்கும்.

தமிழில் இதற்கு முன்பு நடந்த எல்லாப் போர்களும் தமிழுக்காக நடத்தப்பட்டவை என்பதை விடவும் அவை தமிழர்கள் சம்பந்தப்பட்ட போர்கள் என்று சொல்வதே அதிகம் பொருத்தமாயிருக்கும்.

சங்க காலத்தில் போர் சிற்றரசர்கள் அல்லது யுத்த பிரபுக்களுக்கிடையில் நடந்தது. அது மன்னர் காலம். அந்நாட்களில் மன்னர்களின் அல்லது யுத்தப் பிரபுக்களின் அதிகாரமும் ஆட்சி எல்லைகளும்தான் முக்கியமே தவிர இனமான உணர்வுகள் அல்ல. அல்லது இனத்துவ எல்லைகளும் அல்ல.

பிந்நாளில் பேரரசுகள் உருவாகியபோது குறிப்பாக சோழப் பேரரசில்கூட யுத்தம் பேரரசு விரிவாக்கத்திற்கானதே தவிர மொழிக்கோ இனத்துக்கோ ஆனது அல்ல. பேரரசன் தமிழனாக இருந்தான் என்பதற்காகவும் அவனது சேனைகளில் தமிழர்கள் அதிகம் இருந்தார்கள்

என்பதற்காகவும் அந்நாட்களில் நடந்த போர்களை இனப்போர் என்ற வகைக்குள் அடக்குவது கடினம். அவை பேரரசு விரிவாக்கத்திற்கான போர்கள். இனமான உணர்வுக்கூடாக அவற்றைப் பார்க்கவேண்டும் என்பதில்லை.

மன்னர் காலத்துப் போர்கள் இனமான உணர்வுகளை விடவும் மன்னர்களையே அதிகம் முதன்மைப்படுத்தின என்பதற்கு கூர்மையான சில உதாரணங்களைக் காட்டமுடியும்.

முதலாவது, கண்டியில் தலதா மாளிகையில் இருந்த புத்தரின் புனித தந்த தாதுவை இந்தியாவில் இருந்து வந்த படையெடுப்புக்களிலிருந்து பாதுகாப்பதற்காக தென்னிலங்கை மன்னர்கள் ஒருகாலம் வன்னியரிடம் உதவி பெற்றிருக்கிறார்கள். காட்டுச் சண்டைகளில் தேர்ச்சிபெற்ற வன்னி வீரர்கள் தலதா மாளிகையைச் சூழநின்று



காவல்செய்த காலங்களும் உண்டு. பின்னாளில் தமிழர்கள் தலதா மாளிகையைத் தாக்கியதாக சிங்களவர்கள் குற்றம் சாட்டிய ஒரு காலமும் உண்டு.

இரண்டாவது உதாரணம் ஆனையிறவு. ஆனையிறவை வெள்ளைக்காரர்களிடமிருந்து மீட்பதற்காக வன்னிச் சிற்றரசர்கள் போர்செய்தபோது, கண்டியரசன் இவர்களுக்கு உதவியாக தளபதி தென்னக்கோன் தலைமையில் ஒரு படையணியை அனுப்பிவைத்தான். வன்னியர்கள் தென்னக்கோனோடு சேர்ந்து ஆனையிறவை வீழ்த்தப் போராடியது ஒரு காலம். தமிழர்கள் ஆனையிறவிலிருந்த "தென்னக்கோன்களை" முற்றுகையிட்டு வெற்றிகொண்டது பிறகொரு காலம்.

எனவே மன்னர் காலத்தில் இனமான உணர்வுகளை விடவும் மன்னர்களின் சிம்மாசனக் கனவுகளே முதன்மை பெற்றிருந்தன. என்பதால், அந்நாட்களில் காணப்பட்ட தமிழ்ப் படையணிகளை தமிழுக்கானவை என்ற நவீன அர்த்தத்தில் பார்ப்பது கடினம்.

பின்நாளில் ஆங்கிலேயர் இந்தியாவை ஆண்டபோது அவர்களால் உருவாக்கப்பட்ட மெட்ராஸ் ரெஜிமென்ற் போர்த்திறன் மிக்கது என்று பிரிட்டிஷ் அதிகாரிகளால் போற்றப்பட்டது. தமிழர்களின் வீரம் பற்றியும் போர்க்குணம் பற்றியும் கூறவந்த பிரிட்டிஷ உயரதிகாரிகள் மெசபடோமியாவில் மெட்ராஸ் ரெஜிமென்ற் பெற்ற வெற்றிகளைப்பற்றி பிரமிப்போடு புகழ்ந்துரைக்கிறார்கள்.

இதுபோலவே, பின்நாளில் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் நேத்தாஜியின் இந்தியத் தேசிய இராணுவத்தில் சிறந்த தமிழ்த் தளபதிகள் இருந்திருக்கிறார்கள். குறிப்பாக நேத்தாஜியின் மிக நெருங்கிய தளபதி என்று வர்ணிக்கப்பட்டவர் செண்பகப்பெருமாள்.

இவர் தவிர தமிழில் மிகச் சிறந்த நாவல்களை எழுதிய பசிங்காரமும் நேத்தாஜியின் படையில் இருந்தவர்தான். ஆனால், நேத்தாஜியின் இராணுவம் தமிழுக்கானது அல்ல. அது இந்திய விடுதலைக்கானது.

இப்படிப் பார்த்தால் தமிழ்வீரம் எனப்படுவது பல நூற்றாண்டுகளாக அரசர்கள், யுத்தப் பிரபுக்களின் சிம்மாசனங்களைப் பாதுகாப்பதற்காகவோ அல்லது பேரரசுகளின் பேராசைகளைப் பாதுகாப்பதற்காகவோ அல்லது தமிழல்லாத வேறு ஏதோ ஒன்றுக்காகவோதான் பாவிக்கப்பட்டு வந்திருக்கிறது. அது தமிழுக்காக என்று ஒன்றுதிரட்டப்பட்டது என்பது முறையான அர்த்தத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தோடுதான் தொடங்குகிறது. இலங்கைத்தீவில் தமிழர்கள் என்பதற்காகவே நசுக்கப்படவும் வேட்டையாடப்படவும் கூடிய நிலைமைகள் உருவாகியபோது, தமிழ்ப்பெண் என்பதற்காகவே கவர்ந்துசெல்லப்படலாம் சிதைக்கப்படலாம் எனும் ஒருநிலை தோன்றியபோது தமிழுக்காக ஒரு போராட்டம் வெடித்தது. தமிழுக்கென்று ஒரு படை உருவாகியது. இந்தப் போராட்டத்தின் சுமார் இருபது ஆண்டுகால வளர்ச்சியின் பேறாக 1991இல் முதலாவது தமிழ் மரபுப் படையணி அதன் நவீன அர்த்தத்தில் அதற்குரிய நவீன கட்டமைப்புக்களுடன் தோன்றியது. அதுதான் சாள்ஸ் அன்ரனி படையணி.

இப்படித் தமிழில் தோன்றிய முதலாவது மரபுப் படையணியே தமிழில் முதலாவது படையணி மலரையும் வெளியிட்டிருக்கிறது.

தமிழுக்கு இது ஒரு புது அனுபவம் என்பதே இந்நூலுக்கிருக்கும் முக்கியத்துவமும் கவர்ச்சியுமாகும். அதேசமயம் ஒரு முதல் முயற்சியிலிருக்கக்கூடிய பற்றாக்குறைகள் பல இதிலுமுண்டு.

முதலாவதாக இதுவொரு போரியல் ஆவணம். இரண்டாவதாக இதுவொரு போரிலக்கியம்.

நூலின் முன்பாதி ஆவணமாய் வருகிறது. பின்பாதி பெருமளவுக்கு இலக்கியமாக்கப்பட்ட ஆவணமாக வருகிறது. எனவே இந்நூலை ஆராயப்புகும் எவரும் இதனை இரண்டு விதமாகவும் ஆராயவேண்டியிருக்கும்.

முதலாவதாக ஒரு ஆவணம் என்ற வகையில் இது எவ்வளவு தூரம் விஞ்ஞானபூர்வமானதாக நவீனமானதாகக் காணப்படுகிறது என்பது. மற்றது இலக்கியமாக வரும் பகுதியின் இலக்கியத்தரம் பற்றியது.

பொதுவாகக் கூறின் பாதி ஆவணமாகவும் பாதி இலக்கியமாகவும் கலந்து வந்திருப்பது இந்நூலின் தனித்துவமும் நூதனமும் எனலாம். ஆனால் இது நவீன படைத்துறை நிபுணர்கள் மற்றும் விமர்சகர்களால் எப்படிப் பார்க்கப்படுகிறது என்பது இங்கு முக்கியம்.

வீரத்தின் உணர்ச்சிகரமான பின்புலம் நவீன போரியல் நிபுணர்களின் அளவுகோல்களுக்குள் சிக்கமறுக்கும் ஒரு விவகாரம். அதே சமயம், வீரத்தின் விஞ்ஞானபூர்வமான விளக்கம்தான் அவர்களை அதிகம் கவர்கிறது.

புலிகளின் வீரம் எனப்படுவது சிந்துச் சமவெளி எழுத்துக்களைப்போலவே யாராலும் இதுவரை சரியாகப் புரிந்துகொள்ளப்படாத ஒன்று. இதுவரை எந்தவொரு போரியல் பாடப்புத்தகத்திலும் கூறப்பட்டிராத இந்த வீரத்தை நாராயணசுவாமி போன்றோர் எளிதில் பிடிபடாதது (Elusive) என்று கூறுகிறார்கள். இந்துப் பத்திரிகை ஆசிரியர் ராம் போன்றோர் இதை ஏக சிந்தனை (Single Minded) என்று கூறுகிறார்கள்.

யார் எப்படி அழைத்தாலும் புலிகளின் வீரம் அல்லது புலி மனோபாவம் அல்லது புலிகளிசம் எனப்படுவது ஒரு புதிராகவே தொடர்ந்துமிருந்து வருகிறது. இந்தப் புதிரை விடுவிக்க புலிகளின் முதலாவது மரபுப் படையணி பற்றிய தகவல்களைத் தொகுத்துத்தரும் இந்நூல் எவ்வளவு தூரத்துக்கு உதவுகிறது?

பொதுவாக, தமிழ்வீரம் எனப்படுவது தமிழிலக்கியத்தைப் பொறுத்தவரை அதிகம் உணர்ச்சிகரமான ஒரு தளத்தில் வைத்தே கூறப்பட்டு வந்துள்ளது.

தமிழை அதிகபட்சம் உணர்ச்சியின் வாகனமாக அல்லது புனைவுகளின் வாகனமாகக் கையாண்டுவரும் ஒரு மிகநீண்ட ஜனரஞ்சக மரபினூடியாகவே இது நிகழ்கிறது.

தமிழின் முதலாவது படையணி மலராகிய இந்நூல் இந்த ஜனரஞ்சக மரபிலிருந்து பெருமளவு விலகிவருகிறது. ஆனாலும் வீரத்தின் உணர்ச்சிகரமான பகுதிகளைக் கூறுமிடங்களில் சிலசமயம் முன்னைய மரபின் சில சாயல்கள் வரப்பார்க்கிறது.

பொதுவாக, தமிழ்ப் போரிலக்கியம் எனப்படுவது தமிழ் ஜனரஞ்சக மரபிலிருந்து மிகக் கூர்மையாக விலகிவரும் ஓரிடம் அதன் மெய்விவரச் சித்திரிப்பே. தமிழ் ஜனரஞ்சக மரபின் பொதுப் போக்கான புனைவுகளிலிருந்து (Fiction) விலகி பெருமளவுக்கு மெய்த் தரவுகளை (Faction) நோக்கிப் போவதே தமிழ்ப் - போரிலக்கியத்தின் பிரதான பண்பாயுள்ளது.

இந்நூல் இந்தப் புதுமரபின் தொடர்ச்சியாகத்தான் காணப்படுகிறது.

ஆனாலும் தமிழ்வீரத்தை அறிவுபூர்வமாக வியாக்கியானம் செய்யுமிடங்களில் அதாவது நவீன போரியல் நிபுணர்களை அதிகம் கவரும் விதத்தில் தமிழ் வீரத்தை ஒரு விஞ்ஞானமாக்குவதில் இந்நூல் அதிகம் கவனம் செலுத்தவில்லை.

உதாரணமாக IPKF வரமுன்பு ஒரு வளர்ச்சியடைந்த கெரில்லாப்போராக அதாவது குறை அடர்த்தி யுத்தமாக (Low Intensity) இருந்த ஈழப்போர் எப்படி IPKF வெளியேறிய கையோடு ஒரு மரபுப் படையணியை உருவாக்கும் விதத்தில் அரை நிறையடர்த்தி யுத்தமாக (Semi High Intensity) விருத்தியடைந்தது என்பது சாள்ஸ் அன்ரனி படையணியின் உருவாக்கத்தைப்பற்றிக் கூறுமிடத்தில் ஆராயப்படவில்லை.

இதுபோன்று இந்நூலில் வரலாற்றை வியாக்கியானம் செய்யுமிடங்களிலும் புலிவீரத்தின் மர்மமான பகுதிகளை விளக்கிக் கூறுமிடங்களிலும் ஒருவித கடும் மௌனம் நிலவுகிறது.

புலிவீரம் தொடர்ந்தும் புதிராயிருப்பது ஒரு பெருமைக்குரிய விசயமாயிருக்கலாம். ஆனால் சர்வதேச அளவில் பலம்வாய்ந்த அரசுகளும் புலனாய்வு நிறுவனங்களும் அரசியல் வல்லுனர்களும் புலிகளைப்பற்றி பிழையான முற்கற்பிதங்களை புனைந்து வைத்திருப்பதற்கும் சிறிலங்கா அரசின் பொய்ப்பிரச்சாரங்கள் எடுபடுவதற்கும் இதுவே காரணமாகிறது.

நிலவும் சமாதான முயற்சிகளின்போது புலிகள், இந்த முற்கற்பிதங்களைக் களைவதிலும் தங்களைப்பற்றி ஒரு சரியான படிமத்தை சர்வதேச அளவில் கட்டியெழுப்புவதிலும் ஓரளவுக்கு வெற்றிபெற்று வருகிறார்கள் என்றாலும் கூட புலிவீரம் தொடர்ந்தும் ஒரு புதிராகத்தான் காணப்படுகிறது. என்பதால்தான் அண்மையில் வெளியிடப்பட்ட நாராயணசுவாமியின் நூலுக்கு அத்துணை பிரசித்தம் கிடைத்தது.

இத்தகைய ஒரு பின்னணியில் வைத்துப் பார்க்கும்போது புலிவீரத்தின் புதிர்களை விடுவிப்பதற்கு புலிகளின் உத்தியோகபூர்வ வெளியீடுகளிலிருந்து போதிய தகவல்களைப் பெறுவது கடினமாயிருக்கிறது என்பதே மெய்நிலை.


இந்நூலும்கூட, புலிவீரத்தை இயன்றளவு ஆவணமாக்கியுள்ளது. இலக்கியமாக்கியுள்ளது. ஆனால் அதற்குமப்பால் சென்று அதை ஒரு விஞ்ஞானமாக்கிக் கூறுவதை விடவும் அதை தொடர்ந்தும் ஒரு புதிராகப் பேணவே அதிகம் உதவுகிறது.

- நிலாந்தன் -



www.eelamview.com

# போர் சிதைத்த வாழ்வு



தமிழர் தாயகப்பகுதியில் கடந்த இரு தசாப்தமாக நடைபெற்றுவந்த போரினால் தமிழ் மக்களின் சமூக, பொருளாதார கட்டமைப்புகள் மிகவும் மோசமாக சீர்குலைக்கப்பட்டன. சேதமடைந்தன. சமூகத்தில் மிகவும் இலகுவாக பாதிக்கப்படக் கூடியவர்களான பெண்களும் சிறுவர்களும் போர் காரணமாகவும் பொருளாதாரத் தடைகள், கல்விகற்க முடியாமை, குடும்ப வறுமை போன்றவற்றால் மிகமோசமாக பாதிக்கப்பட்டனர்.

1970களில் இருந்து சிறிலங்கா அரசின் திட்டமிட்ட அரசியல் பொருளாதார புறக்கணிப்புக்களும் அதனைத் தொடர்ந்து கல்வி ரீதியான தரப்படுத்தல் மூலமான புறக்கணிப்புக்களும் பாடசாலை மாணவர்களை அரசிற்கு எதிரான கிளர்ச்சியில் ஈடுபடத் தூண்டியது. அக் காலப்பகுதியில் கிளர்ச்சியில் ஈடுபட்டவர்களிற்கு எதிரான அரசின் இராணுவ அடக்குமுறை மிருத்தனமான அணுகுமுறை சிறுவர்களையும்கூட போராடத் தூண்டியது. அது மட்டுமன்றி சிறுவர்களை காப்பாற்றுவதற்கு எந்தவிதமான சக்திகளும் முன்வராதவிடத்து அவர்கள் தம்மைப் பாதுகாத்துக்கொள்ள முயன்றுள்ளனர்.

திட்டமிட்ட இனப்படுகொலைகள், நேரடி இராணுவ நடவடிக்கைகள் மூலம் பெற்றோர்களை இழந்த சிறார்கள் நிர்க்கதியற்று வீதிகளில் அலைந்தனர். பாடசாலைக் கல்வி சீருகுலையத் தொடங்கியதும் அவர்கள் எதிர்காலம் கேள்விக் குறியாகியது. இதன் விளைவாக அக்காலப் பகுதியில் 16, 17, 18 வயதினைக்கொண்ட ஆண்கள் (சிறுவர்கள்) அதிகமானோர் அரச அடக்குமுறையினை எதிர்த்துப்போராட விடுதலை இயக்கங்களில் சேர்ந்தனர். இதை அவர்கள் தம்மை பாதுகாத்துக் கொள்வதற்கான வழியாகவும் தெரிந்துகொண்டனர்.

1987 காலப்பகுதியில் இருந்து இலங்கை, இந்திய இராணுவ நடவடிக்கைகள் மிகத் தீவிரமடைந்த நிலையில் தமிழ்மக்கள் நேரடியாகப் படுகொலை செய்யப்பட்டனர். பெற்றோர், உறவினர், பாதுகாவலர் சிறுவர்களின் முன்னாலேயே தாக்கப்பட்டு கொடூரமான முறையில் கொல்லப்பட்டனர். பெண் சிறார்கள் பாலியல் வல்லுறவிற்கு உள்ளாக்கப்பட்டனர். ஆண் சிறார்கள் தேடி சிறைப்பிடிக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டனர். இவ்வாறாக சிறுவர் மீதும் சிறுவர்களின் பாதுகாவலர்களான பெற்றோர் உறவினர்கள் மீதும் மிகமோசமான தாக்குதல்கள் தொடர்ந்தன. இவ்வாறான தொடர் நடவடிக்கையின் விளைவு இன்று முந்நூறு ஆயிரம் சிறார்கள் எமது தாயகத்தில் புனர்வாழ்வு அளிக்கப்பட வேண்டியவர்களாக உள்ளனர்.

**தமிழீழத்தில் சிறுவர்களின் வாழ்வு எவ்வாறு பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.**

அரசின் திட்டமிட்ட இன ஒடுக்குமுறையால் சிறுவர்களின் பெற்றோர்கள் அவர்கள் கண் முன்னாலேயே கொல்லப்பட்டுள்ளனர். இதன் விளைவாக 50,000 மேற்பட்ட சிறார்கள் தமது எதிர்காலம் கேள்விக்குரியதாகி அலைந்து திரிந்தனர். சிறுவர்கள் நேரடியாக சிறிலங்கா அரசின் படைநடவடிக்கை மூலம் கொல்லப்பட்டனர். நவாலிப் படுகொலையில் 22 சிறார்கள், நாகர்கோவிலில் பாடசாலை மீதான குண்டுவீச்சுத் தாக்குதலில் 28 சிறார்கள், குருநகர், வலைனிக்குளம், மந்துவில், சுதந்திரபுரம், மட்டக்களப்பில் கொக்கட்டிச்சோலை இவ்வாறாக 01 வயது தொடக்கம் 18 வயதிற்குட்பட்ட சிறார்கள் 300 பேருக்குமேல் இதைப்போன்ற சம்பவங்களில் மட்டும் கொல்லப்பட்டனர். இதனால் சிறுவர்கள் மனவிரக்தியடைந்ததுடன் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக புகலிடங்களைத் தேடிக்கொண்டனர்.

மேலும் மேற்குறிப்பிட்ட காரணங்களால் உயிரிழப்புக்களுடன் உள, உடல் பாதிக்கப்பட்ட நிலையில் 1000ற்கும் மேற்பட்ட சிறார்கள் துன்பப் படுகின்றனர். அவர்களை ஏனைய சிறார்கள் பார்த்து திகில் அடைவதும் வழமையாக நடைபெற்று வருகின்றன.

இது ஒருபுறம் இருக்க.

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக சிறார்களது கல்விச்சாலைகள் அழிக்கப்பட்டதும் அவர்கள் தமது ஊர்களைவிட்டு பலதடவைகள் துரத்தப்பட்டதும் அவர்களை மிகுந்த உளத் தாக்கத்திற்கு உள்ளாக்கியது. எமது தாயகப் பகுதியில் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட பிள்ளைகள் தமது கல்வியினைத் தொடரமுடியாது இருந்தனர்.

மேலும் பொருளாதாரத்தடை, வறுமை காரணமாக உரிய போசாக்குணவின்றி தொற்று நோய்களிற்கு உள்ளாகினர். இவர்களிற்கு போதிய மருத்துவ வசதியின்மையால் உயிரிழப்பும், ஊனமுறுதலும் ஏற்பட்டது.

அதாவது, உயிர்வாழ்தலுக்கான உத்தரவாதமும், கல்வி, போசாக்கு, சிறந்த மருத்துவ வசதி ஆகியன இல்லாத நிலையில் தமிழீழச் சிறார்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகிக் கொண்டிருக்கும்போது சிறுவர் உரிமைகள், சிறுவர் நடத்தைகள் கண்காணிக்கும் அமைப்புக்கள், மனித உரிமை அமைப்புக்கள், மனிதாபிமான பணிபுரியும் அமைப்புக்கள் ஆகியன எத்தகைய அக்கறையினை பாதிக்கப்பட்ட சிறுவர்கள்மீது கொண்டிருந்தார்கள் என்பதனை நாங்கள் கவனத்தில் எடுக்கவேண்டும்.

காரணம் என்னவெனில், இன்று மேற்கூறிய அமைப்புக்கள் சிறுவர் உரிமைகளில் காட்டும் அதிக ஈடுபாடு கடந்த காலங்களில் பாதிப்பு ஏற்படும்வேளை அவர்களிற்கான நிவாரணப் பணிகளை செய்வதிலும் அவர்களிற்காகக் குரல் கொடுப்பதிலும் காட்டவில்லை என்பதே ஆகும்.

மேலும், கடந்த காலங்களிலும் சரி தற்போதும் சரி அனைத்து அமைப்புக்களும் வயது குறைந்தோரை படையில் சேர்த்தல் (Under Age recruitmant) என்ற விடயத்தில் மட்டுமே குறியாக நிற்பதனை நாம் அவதானிக்க முடிகிறது.

வடக்கு கிழக்கில் பாதிக்கப்பட்ட சிறார்கள் முந்நூறு (3 லட்சம்) ஆயிரம்பேர்வரை இருக்கின்றனர். இதில் ஆகக்கூடியது 1% - $1^1/_2$% சிறார்களே விடுதலைப்புலிகள் அமைப்பில் இருப்பதாக Unicef நிறுவனம் ஆருடம் சொல்கின்றது. உண்மையில் அதனைவிடக் குறைவானவர்களே இயக்கத்தில் இணைந்து விடுவிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

ஏனைய 99 வீதமான பாதிக்கப்பட்ட சிறார்களிற்கு, சிறுவர்கள் படையில் இணைக்கப்படுவதனை பூதக்கண்ணாடியில் வைத்து பரிசீலிப்பவர்கள் அனைவரிடமும் உருப்படியான திட்டங்கள் செயற்பாட்டில் உள்ளனவா?

தனித்து பாதிக்கப்பட்ட 1% ஆன சிறார்களிற்காக பத்திற்கும் மேற்பட்ட அமைப்புக்கள் முண்டியடித்துக்கொண்டு புனர்வாழ்வு செய்ய முற்படுவதும், அவர்கள் "Disarm ament;Demobilization" என்று கூறிக் கொள்வதுமான உள்நோக்கம் என்ன? இங்கு நாம் Under Age Recuritemt இற்கு எதிராகக் குரல் கொடுப்பது தவறு என்று கூற முற்படவில்லை. ஆனால் அது தான் வடக்கு கிழக்கில் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான தீர்வாக அமையக்கூடாது. அதற்காக பல வழிமுறைகள் உண்டு. அவை தீர்க்கப்படும் வரை அனைவரும் பக்கச்சார்பின்றி சிறுவர் நலனில் உண்மையான அக்கறை காட்ட வேண்டும். அத்துடன், உடன் செயற்பாட்டிலும் இறங்க வேண்டும் என்பதே நோக்கமாகும்.

**தமிழீழ விடுதலைப்புலிகளின் சிறுவர் நலன் தொடர்பான நிலைப்பாடு.**

விடுதலைப்புலிகளும் அதன் தலைவர் அவர்களும் உண்மையிலேயே சிறுவர்களின் எதிர்காலம் தொடர்பாக பல்வேறு திட்டங்களையும் முன்னெடுப்புக்களையும் செய்துவருகின்றனர். சிறுவர்களைப் படையில் சேர்த்து அவர்களைப் போரில் பயன்படுத்துவது அவர்களது திட்டமல்ல. அவை தற்செயலாக நடக்கின்ற சம்பவங்களாக இருந்துள்ளன.

1990களில் இந்திய இராணுவ அடக்குமுறையாலும் அவர்களின் மூலம் சமூகவிரோதக் குழுக்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட கட்டாய ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளும் சிறார்களிற்கு பாதுகாப்பு உத்தரவாதத்தினை கேள்விக்குறியாக்கியது. இதனால் பாதுகாப்புத்தேடி விடுதலைப்புலிகள் முகாம்களிற்கு வந்துசேர்ந்தனர். அக்காலப் பகுதியில் மரபுரீதியான இராணுவப்படை முனைவிடத் தொடங்கிய காலத்தில் சில வயது குறைந்த சிறார்கள் யுத்தத்தில் ஈடுபட்டனர்.

அதன் பின்பும் விடுதலைப்புலிகள் முகாம்களிற்கு சிறார்கள் வருவது அதிகரித்ததன் விளைவாக அதனைத் தடுப்பதற்கே விடுதலைப் புலிகள் பல செயற்திட்டங்களை உருவாக்கினர்.

பெற்றோர்களை இழந்த சிறார்களுக்காக காந்தரூபன் அறிவுச்சோலை, செஞ்சோலை சிறுவர் இல்லங்கள் செயற்படுத்தப்படுகின்றன. இவர்கள் முற்றிலும் சிறந்த நோக்கத்துடன் வளர்க்கப்படுகின்றனர். இவ் இல்லங்கள் அரச சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. சமூகத்தில் இருக்கும் ஆசிரியர்களே கற்பிக்கின்றனர். அரச பாடசாலைகளில் கல்வி பயில்கின்றனர். ஒவ்வொரு நாளும் அவர்களது செயற்பாட்டினை பலர் வெளியிலிருந்து கண்காணிக்கின்றனர். இங்கு 700இற்கு மேற்பட்ட சிறார்கள் வாழ்கின்றனர்.

இதனைத் தொடர்ந்து சமூகத்தில் அரச பாடசாலைகளில் ஆசிரிய பற்றாக்குறை நிலவுகின்ற இடங்களில் கல்விக்கழகம், மாணவர் அமைப்பு ஊடாக 500இற்கு மேற்பட்ட ஆசிரியர்களுக்கு மாதாந்த உதவுதொகை கொடுத்து அதனை ஈடு செய்து வருகின்றது.

அடுத்ததாக, கல்வியில் பின்தங்கிய மாணவர்களுக்கு உள்ளூரில் ஆசிரியர்களை பணிக்கு அமர்த்தி மாலைநேரக் கல்வி, பிரத்தியேகக் கல்வி ஆகியவற்றை நடைமுறைப்படுத்தி வருகின்றனர். வறுமை ம்ற்றும் பெற்றோர் கவனிப்பு இன்மையால் உயர்கல்வி கற்கமுடியாத மாணவர்களுக்கு மாதாந்த உதவிப்பணம் கொடுத்து அவர்கள் தமது குடும்பத்தவருடன் இருந்து கல்வி பெற வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

இராணுவ நடவடிக்கையினால் சேதமுற்ற பாடசாலைகளை இயங்க வைப்பதற்காக தற்காலிக கொட்டகைகள் அமைத்துக் கொடுத்துள்ளனர்.

வறுமை காரணமாக போசாக்குக் குறைந்த சிறார்களுக்கான மானியக் கொடுப்பனவு, விசேட மருத்துவக் கொடுப்பனவுகள் செய்யப்படுகின்றன.

பாடசாலைகளில் தளபாடப் பற்றாக் குறைகளை நிவர்த்தி செய்வதற்காக தளபாடங்கள் விநியோகிக்கப்படுகின்றன. இதனைவிட ஒவ்வொரு பாடசாலைகளிலும் மாணவர்கள் சார்பாக பல்வேறு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அடுத்தாக, கிராமப்புறங்களில் போதிய மருத்துவ வசதிகள் இன்மையால் பெண்களும் குழந்தைகளும் கூடுதலாகப் பாதிக்கப்பட்ட நிலையில் ஆங்காங்கே திலீபன் வைத்தியசாலைகள் அமைக்கப்பட்டு இலவச சிகிச்சைகள், சிறப்பு மருத்துவ முகாம்கள் நடாத்தப்படுகின்றன. மாதாந்தம் 10,000 சிறார்கள் இதனால் நன்மையடைகின்றனர்.

போர்க் காலங்களில் சிறுவர்களின் உள, உடல் செயற்பாட்டினை கருத்திற்கொண்டு பல்வேறு இசை பயிலரங்குகள், இசைக் கல்லூரிகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அது மட்டுமன்றி இலவச போக்குவரத்து, இலவச அவசரகால மருத்துவ போக்குவரத்து (Ambulance), இலவச நடமாடும் மருத்துவமுகாம் என்பன பாடசாலைகள், கிராமங்கள் தோறும் நடைபெற்று வருகின்றன.

அதாவது, சிறுவர்கள் போரில் இணையாது, அதேநேரம் தெருவில் பிச்சை எடுக்காது, அவர்களின் எதிர்காலம் சிறப்பாக அமையவேண்டும் என்பதற்கான முற்கூட்டிய திட்டமிடலே இவையாகும். இதன்மூலம் 1990இல் இருந்து இன்றுவரை படிப்படியாக சிறுவர் போரில் இணையும் வீதம் குறைவதனைக் காணக்கூடியதாக உள்ளது.

இவற்றைவிட, தமிழ்மக்களினால் உருவாக்கப்பட்டு செயற்படும் ஓர் அரச சார்பற்ற மனிதாபிமான அமைப்பு என்ற வகையில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் விடுதலைப்புலிகள் அமைப்பினைப் போன்று சிறுவர் தொடர்பான திட்டங்களை நீண்டகாலமாக செயற்படுத்தி வருகின்றது. வெறும் வார்த்தைகளில் இன்றி செயற்பாட்டு ரீதியாக யுத்தகாலங்களில் இருந்து இன்றுவரை பல திட்டங்கள் தொடர் நடவடிக்கையாக செயற்படுத்தப்படுகின்றன.

விடுதலைப்புலிகள், சிறுவர்களுக்கான மனிதாபிமான செயற்பாடுகளைச் செய்வதன் மூலம் சிறார்கள் படையில் சேர்வதனை நியாயப்படுத்த முனையவில்லை. மாறாக, அதற்கும் அவர்கள் பல்வேறு நிறுவனங்களுடன் தீர்வுகாண சமாதானப் பேச்சுவார்த்தையின்போது ஒத்துக்கொண்டுள்ளனர்.

1998இல் ஐ.நா விசேட தூதுவரிடம் கூறியதற்கு அமைய அவர்கள் போரில் சிறுவரை ஈடுபடுத்துவதனை தவிர்த்து வருகின்றனர்.

**யுனிசெவ் திட்ட செயற்பாடு (Acton Plan).**

விடுதலைப்புலிகள் இயக்கம், அரசாங்கம் ஆகியோர் இணைந்து யுனிசெவ் நிறுவனத்துடன் இணைந்து சிறுவர் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக முடிவெடுக்கப்பட்டு, சகல தரப்பினரையும் அழைத்து (UN அமைப்புக்கள், அரசாங்கம், விடுதலைப்புலிகள், உள்ளூர் நிறுவனங்கள்) ஓர் செயற்படுதிட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. 22-04-2003 அன்று தயாரிக்கப்பட்ட திட்டத்தின்படி, 10 வரையான திட்டங்கள் உள்ளடங்குகின்றன.

அதில்:

01. சிறுவர் உரிமைகள் பற்றிய பயிற்சி.
02. சிறுவர் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு.
03. வயது குறைந்த சிறார்களை விடுவித்தல்.
04. வறுமை ஒழிப்பு நடவடிக்கைகள்.
05. தொழிற்பயிற்சி.
06. கல்வி.
07. சுகாதாரம், போசாக்கு.
08. உளவியல் கல்வியும் பயிற்சியும்.
09. சமூகவேலை செய்தல் (சிறுவர்களுக்கானது)
10. பெற்றோர், உறவினர் இல்லாத சிறார்களை மாற்று நிலையங்களில் வைத்துப் பராமரித்தல்.

இதில் குறிப்பிட்ட விடயம் என்னவெனில் சிறுவர் உரிமை தொடர்பான பயிற்சிகளை தமது பொறுப்பாளர்கள் போராளிகளுக்கு வழங்கு

**– அறிவன் –**

வதற்கும், தம்மிடம் உள்ள வயதுகுறைந்த சிறார்களை விடுவிப்பதற்கும் எதிர்காலத்தில் சிறார்களை போருக்குப் பயன்படுத்தாது விடுவதற்கும் ஒப்புக்கொண்டதுடன் அவர்கள் வலிந்து சிறார்களை சேர்த்துக்கொள்வதில்லை எனவும் விடுதலைப்புலிகள் கூறியுள்ளனர். அதுமட்டுமன்றி செயற்பாட்டு ரீதியாகவும் கடந்த 03-10-2003 அன்று 49 சிறார்களை விடுவித்துள்ளனர். இவர்கள் தற்போது இடைத்தங்கல் முகாமில், TRO-Unicef இனரால் பராமரிக்கப்படுகின்றனர்.

மேற்கூறப்பட்ட திட்டங்களில், விடுதலைப் புலிகளுடன் சம்பந்தப்பட்ட திட்டமே முதலாவதாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. ஏனைய திட்டங்கள் பல நிறுவனங்களுடன் தொடர்புடையவை. இன்னமும் அவை ஆரம்பிக்கப்படவில்லை. இது இவ்வாறு இருக்க, சிறார்கள் மீண்டும் போருக்கு இணைக்கப்படுகிறார்கள் என்ற குற்றச்சாட்டு எழுந்தவண்ணமே உள்ளது.

விடுதலைப்புலிகளின் முகாமிற்கு சிறார்கள் போவதென்பதனை, அவர்களின் பிரச்சினைகளை(பாதிக்கப்பட்ட சிறார்களின்) தீர்ப்பதன்மூலம் தடுக்க முடியுமே தவிர இடைத்தங்கல் முகாம் மூலமாகவோ அல்லது எல்லோரும் சேர்ந்து அதனைப்பற்றி கதைப்பதன் மூலமோ தீரப்போவதில்லை. உண்மையில் போரினால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கான செயற்படுதிட்டம் (Acton Plan) முற்றுமுழுதாக நடைமுறைப்படுத்தப்படும்போது, அவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படும்போது மட்டும்தான் நீண்ட போரில் சிதைக்கப்பட்ட எம் சிறார்களின் வாழ்வு உண்மையான வசந்தத்தைக் காணும். ◆



www.eelamview.com

# இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைக்கான தமிழீழ விடுதலைப்புலிகளது பிரேரணை

(03ம் பக்கத் தொடர்ச்சி)
திக்கத்தைக் கொண்டிருக்கும்.

## 11.நிதி

ISGA, ஓர் வருடாந்த வரவு-செலவு அறிக்கையைத் தயாரிக்கும்.

ISGAஆல் நியமிக்கப்படும் அங்கத்தவர்களைக்கொண்ட ஒரு நிதி ஆணைக்குழு அமைக்கப்படும். இந்த அங்கத்தவர்கள் நிதி, நிர்வாகம், அல்லது வாணிபம் போன்ற துறைகளில் உயர்பதவி வகித்தவர்களாகவோ அல்லது இத்துறைகளில் சிறப்புத்தேர்ச்சி பெற்றவர்கள் என இனம் காணப்பட்டவர்களாகவோ இருக்கவேண்டும். இலங்கை அரசாங்கத்தின் ஒன்றுதிரட்டிய நிதியத்திலிருந்து (consolidated fund) வடக்குக் கிழக்கிற்கு ஒதுக்கப்படவேண்டிய நிதியின் அளவை இந்த ஆணைக்குழு பரிந்துரைக்கும். இப்பரிந்துரைகளைச் செயற்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் தனது நல்லெண்ண முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

சமவிகிதத்தில் பகிர்ந்தளிப்பதற்கு உரிய கவனம் செலுத்தி, ISGA தன்வசமுள்ள நிதிகளை எப்படிப் பயன்படுத்துவதெனத் தீர்மானிக்கும். ISGA வசமுள்ள நிதிகளுள் வடக்குக் கிழக்குப் பொதுநிதியம், வடக்குக் கிழக்கு மீள்கட்டுமான நிதியம், விசேட நிதியம் ஆகியன உள்ளடங்கியிருக்கும்.

வடக்குக் கிழக்கில் அல்லது வடக்குக் கிழக்கிற்காக இலங்கை அரசு செய்யும் அனைத்துச் செலவுகளும் ISGAஇன் கட்டுப்பாட்டின்கீழ் வருகிறது என்பதை இலங்கை அரசு ஏற்றுக்கொள்கிறது.

11.1. வடக்குக்கிழக்குப் பொதுநிதியம் வடக்குகிழக்கு பொதுநிதியம் ISGAஇன் கட்டுப்பாட்டின்கீழ் இருப்பதோடு பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கும்:

11.1.a. இலங்கை அரசாங்கம் ஏதேனும் குறித்த நோக்கங்களுக்காக வழங்கும் அனைத்து உதவிகளிலிருந்தும் கடன்களிலிருந்தும் கிடைக்கும் பணம் மற்றும் ISGA இற்கு வழங்கப்படும் ஏனைய பிற கடன்கள் மூலம் பெறப்படும் பணம்,

11.1.b. அரசுகளுடனோ, நிறுவனங்களுடனோ ஏனைய அமைப்புக்களுடனோ ஏற்படுத்திக்கொள்ளும் ஒப்பந்தங்களின் அடிப்படையில் வடக்குக்கிழக்கிற்கென சிறிலங்கா அரசாங்கத்தினால் குறித்தொதுக்கப்படும் நிதிகள்

11.1.c. கீழே குறிப்பிடப்படும் நிதியங்கள் தவிர்ந்த, ISGAக்கு கிடைக்கும் ஏனைய வரவுகள்.

11.2. வடக்குக்கிழக்கு மீள்கட்டுமான நிதியம் NERF அமைப்பு, கட்டுப்பாடு ISGA இற்கு மாற்றப்படுவது தவிர, ஏனைய அம்சங்களில் அதன் தற்போதைய வடிவத்திலேயே தொடர்ந்தும் இருக்கும்.

வடக்குக் கிழக்கு மீள்கட்டுமானத்திற்காகக் கொடுக்கப்படும் அனைத்து கொடுப்பனவுகளும் NERFஇற்கூடாகப் பெறப்படும். NERF நிதியத்திலிருந்து பெறப்படும் வளங்களை பயன்படுத்துவது தொடர்பாக ISGA நேரடியாக முடிவுகளை எடுத்துக் கண்காணிக்கும்.

11.3. விசேட நிதியம

மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, மீள்கட்டுமாணம் மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றிற்கென்றே வரும் கடன்களும் கொடுப்பனவுகளும், NERF நிதியத்ினூடாக உள்வர முடியாதவிடத்து, இந்த விசேட நிதியத்திற்குள் உள்வாங்கப்படும். ஏனைய நிதியங்களைப் போலவே இந்த விசேட நிதியமும் ISGAஇன் கட்டுப்பாட்டில் இருக்கும்.

## 12.கடன் பெறுவதற்கும் உதவி பெறுவதற்கும் வர்த்தகத்திற்குமான அதிகாரங்கள்

உள்ளூரிலும் வெளியூரிலும் கடன் பெறுதல், உத்தரவாதங்களையும் இழப்பீடுகளையும் வழங்குதல், நேரடியாக உதவிகளைப் பெறுதல், உள்ளூர் மற்றும் வெளியூர் வர்த்தகத்தில் ஈடுபடுதல் அல்லது அதனை ஒழுங்கமைத்தல் போன்றனவற்றிற்கான அதிகாரங்களை ISGA கொண்டிருக்கும்.

## 13.நிதிக் கணக்கீடும் கணக்காய்வும்

13.1. ISGA ஓர் கணக்காய்வாளர் நாயகத்தை நியமிக்கும்.

13.2. இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிதியங்களும் சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்களுக்கு அமைவாகச்செயற்படுத்தப்பட்டு, பேணப்பட்டு, கணக்கீடு செய்யப்படும். இந்தக் கணக்குகள் கணக்காய்வாளர் நாயகத்தால் ஆய்வு செய்யப்படும். சர்வதேச மூலங்களிலிருந்து பெறப்படும் அனைத்து நிதிகளது கணக்காய்வும், ISGAஆல் நியமிக்கப்படும் சர்வதேசப் புகழ்பெற்ற நிறுவனத்தின் ஒப்புதலைப் பெறவேண்டும்.

## 14.மாவட்டக் குழுக்கள்

14.1. தனது சட்டவாக்க மற்றும் நிறைவேற்று அதிகாரங்களைக் காத்திரமாகச் செயற்படுத்துகையில், மாவட்டங்களில் நிர்வாகத்தினை மேற்கொள்வதற்காக ISGA, மாவட்டக்குழுக்களை உருவாக்கி, இந்தக் குழுக்களுக்கு தான் தீர்மானிக்கின்ற அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கலாம். ISGAஇற்கும் குழுக்களுக்கும் இடையிலான ஒரு இணைப்பாளராகச் சேவையாற்றக்கூடியவாறு, ISGAஇன் உறுப்பினர்கள் மத்தியிலிருந்து ISGAஆல் இந்தக் குழுக்களது தலைவர்கள் நியமிக்கப்படுவார்கள்.

14.2. குழுவின் ஏனைய உறுப்பினர்களும் ISGAஆல் நியமிக்கப்படுவதோடு இந்த நியமனங்கள் எதனையும் இடைநிறுத்துவதற்கு அல்லது முடிவுக்குக் கொண்டு வருவதற்கான அதிகாரங்களையும் ISGA கொண்டிருக்கும். இந்த உறுப்பினர்களை நியமிக்கையில், அனைத்து சமூகங்களதும் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வதற்கு உரிய கவனம் செலுத்தப்படும.

14.3. இந்தக் குழுக்கள் ISGAஇன் கீழ் நேரடியாகச் செயற்படும்.

14.4. ISGAஇன் பிரதான செயலாட்சியாளர் மாவட்டங்களில் பிரதான நிறைவேற்று அதிகாரிகளை நியமிப்பதோடு இந்தப் பிரதான நிறைவேற்று அதிகாரிகள், குழுக்களுக்குச் செயலாளர்களாகவும் செயற்படுவார்கள். இந்த நியமனங்கள் எதனையும் இடைநிறுத்துவதற்கு அல்லது முடிவுக்குக் கொண்டுவருவதற்கான அதிகாரங்களை பிரதான செயலாட்சியாளர் கொண்டிருப்பார்.

14.5. குழுக்களது அனைத்து நடவடிக்கைகளும் செயற்பாடுகளும் அந்தந்தக் குழுக்களது செயலாளர்கள் ஊடாக ஒருங்கிணைக்கப்படும்.

14.6. நிர்வாகத்திற்கு உதவியாக இருப்பதற்காக உபகுழுக்களும் நியமிக்கப்படலாம்.

## 15.நிர்வாகம்

தனது நிறைவேற்று அதிகாரங்களைச் செயற்படுத்துவதன் ஒரு பகுதியாக, இந்த ஒப்பந்தத்தின் சரத்து 9இல் குறிப்பிடப்பட்ட அதிகாரங்களுடன் தொடர்புபட்ட வடக்குக் கிழக்கிலுள்ள அனைத்து நிர்வாக அமைப்புக்களும் ஆளணியும் ISGAஇன் கட்டுப்பாட்டிலும் நெறிப்படுத்தலின் கீழும் அமையும்.

ISGA தற்றுணிவுடன், தேவையான துறைகளில் நிபுணர்களது ஆலோசனைக் குழுக்களை உருவாக்கலாம். இந்த ஆலோசனைக் குழுக்கள் பொருளாதார விவகாரங்கள், நிதி விவகாரங்கள், நீதி விவகாரங்கள், மீள் குடியமர்வு மற்றும் புனர்வாழ்வு விவகாரங்கள், அடிப்படைக் கட்டுமாணங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் அத்தியாவசிய சேவைகள் ஆகியனவற்றிற்கும் இவற்றிற்கென மட்டுப்படுத்தப்படாமல் இன்னும் தேவையான துறைகளுக்கும் அமைக்கப்படலாம்.

## 16.காணி நிர்வாகம்

சரத்து 9இல் (ISGAஇன் நியாயாதிக்கம்) குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களைச் செயற்படுத்துவதற்குக் காணி முக்கியம் என்பதால், வடக்குக் கிழக்கிலுள்ள தனியாருக்குச் சொந்தமானவை தவிர்ந்த எல்லாக் காணிகளையும் பகிர்ந்தளிப்பதற்கும் மற்றும் பொருத்தமான தேவைகளுக்குப் பயன்படுத்துவதைத் தீர்மானிப்பதற்குமான அதிகாரத்தை ISGA கொண்டிருக்கும்.

காணிகளிலிருந்து விரட்டப்பட்ட மக்களது காணிகளின் உரிமை, அத்துமீறிக் குடியேறியோர் வசிக்கும் காணிகளின் உரிமை போன்றவற்றை, காலம் எவ்வளவு கடந்திருந்தாலும் கூட, விசாரித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கென காணி நிர்வாகம் தொடர்பான ஒரு விசேட ஆணைக்குழுவை ISGA நியமிக்கும்.

விசேட ஆணைக்குழு செயற்படுகின்ற காலவரையறையை ISGA தீர்மானிக்கும்.

## 17.ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களில் மீள்குடியமர்வு

இலங்கை அரசாங்கத்தின் ஆயுதப் படைகளால் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமையும் இத்தகைய காணிகளுக்கு உரித்துடைய பொதுமக்கள் தங்குதடையின்றிச் செல்வதற்கான உரிமையை மறுப்பதும் சர்வதேசச் சட்ட நியமங்களை மீறும் செயலாகும். இந்த காணிகள் உடனடியாக விடுவிக்கப்பட்டு, அவற்றின் உரிமை முன்னைய உரித்தாளர்களுக்கு மீளளிக்கப்படவேண்டும். சொந்தக்காரர்களிடமிருந்து அவர்களது காணிகளைக் கடந்த காலங்களில் பறித்துவைத்திருந்தமைக்காக, இலங்கை அரசாங்கம் அவர்களுக்குக் கட்டாயம் நட்டஈடு செலுத்தவேண்டும்.

இந்த காணிகளில் இடம்பெயர்ந்த மக்களையும் அகதிகளையும் மீளக்குடியமர்த்திப் புனர்வாழ்வு அளிப்பதற்கு ISGA பொறுப்பாக இருக்கும்.

## 18.கடல் மற்றும் கரையோர வளங்கள

வடக்குக்கிழக்கு நிலப்பிரதேசத்தை அண்டிய கடல் மற்றும் கரையோர வளங்கள் மீது ISGA கட்டுப்பாட்டைக் கொண்[illegible]ப தோடு இந்த வளங்களைப் பய[illegible] [illegible]து தொடர்பாகத் தேவைப்படும் கட்டுப்பாடுகளை ஒழுங்கமைப்பதற்கான அதிகாரங்களையும் கொண்டிருக்கும்.

## 19.இயற்கை வளங்கள்

வடக்குக் கிழக்கிலுள்ள இயற்கை வளங்கள்மீது ISGA கட்[illegible] [illegible]டைக் கொண்டிருக்கும். அத்தகைய [illegible] வளங்கள் தொடர்பாக ஏற்கனவே செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்ந்தும் நடைமுறையிலிருக்கும். அத்தகைய ஒப்பந்தங்களின் கீழ் வரவேண்டிய பணம் அனைத்தும் ISGAஇற்கு செலுத்தப்படுவதை இலங்கை அரசு உறுதிசெய்யும். நடைமுறையிலிருக்கும் அத்தகைய ஒப்பந்தங்களில் எதிர்காலத்தில் ஏற்படுத்தக்கூடிய மாற்றங்கள் யாவும் ISGAஇன் சம்மதத்துடனேயே செய்யப்படவேண்டும். எதிர்காலத்தில் இவற்றிற்கான ஒப்பந்தகள் ISGA உடன் செய்யப்படவேண்டும்.

## 20.நீர்ப் பயன்பாடு

ஆறுகளின் கீழ்ப்பகுதியில் நீர் பெறுவோருக்கு நீதியாகவும் நியாயமாகவும் சம அளவிலும் நீர் கிடைப்பதை உறுதிசெய்ய வேண்டிய கடப்பாடு ஆறுகளின் தோற்றுவாய்ப் பகுதிகளில் நீர் பெறுவோருக்கு உண்டு. இலங்கை அரசாங்கமும் ISGAஉம் நீர்வளப் பாவனையில் சர்வதேசரீதியில் அங்கீகரிக்கப்பட்ட இந்தக் கோட்பாடு பின்பற்றப்படுவதை உறுதிசெய்யவேண்டும்.

## 21.ஒப்பந்தங்களும் குத்தகைகளும்

ISGAஇன் நியாயாதிக்கத்தின் கீழ் வரும் விடயங்கள் தொடர்பாக எதிர்காலத்தில் எய்தப்படும் ஒப்பந்தங்கள் அனைத்தும் ISGA உடன் மேற்கொள்ளப்படவேண்டும். நடைமுறையிலிருக்கும் ஒப்பந்தங்கள் அப்படியே தொடரும். ஆனால், இந்த ஒப்பந்தங்களின் கீழ் கிடைக்கும் அனைத்து வருமானங்களும் ISGAஇற்கு கொடுக்கப்படுவதை இலங்கை அரசு உறுதி செய்யவேண்டும். அத்தகைய ஒப்பந்தங்களில் ஏதேனும் மாற்றம் செய்வதாயின் ISGAஇன் சம்மதத்துடனேயே மேற்கொள்ளப்படவேண்டும்.

## 22.பிணக்குத் தீர்த்தல்

இந்த ஒப்பந்தச் சரத்துக்களுக்கு அர்த்தம் கற்பிப்பதிலோ நடைமுறைப்படுத்துவதிலோ இரு தரப்பினரிடையேயும் பிணக்கு ஏதேனும் ஏற்பட்டு, அப்பிணக்கு நோர்வே அரசின் நல்லிணக்கம் உட்பட இரு தரப்பினருக்கும் ஏற்புடைத்தான வேறு ஏதாவது வழியில் தீர்க்கப்படமுடியாவிட்டால் மூன்று அங்கத்தவர்கள் - இதில் இருவர், தரப்பிற்கு ஒருவர் என்ற ரீதியில் இரு தரப்பினராலும் நியமிக்கப்படுவர் - கொண்ட ஓர் இணக்கமன்றின் முன் விசாரிக்கப்படும். இரு தரப்பினராலும் கூட்டாக நியமிக்கப்படும் மூன்றாவது அங்கத்தவர் மன்றின் தலைவராகச் செயற்படுவார். தலைவர் நியமனத்தில் ஏதேனும் கருத்துவேறுபாடு ஏற்படுமிடத்து, மன்றின் தலைவரை நியமிக்குமாறு சர்வதேச நீதிமன்றின் தலைவரை (President of the International Court of Justice) இரு தரப்பினரும் கோருவர்.

எந்தவொரு தகராறு பற்றியும் தீர்மானமெடுக்கையில், பிணக்குத் தீர்ப்பவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளதும் இலங்கை அரசாங்கத்தினதும் சமத்துவமான நிலையை உறுதிசெய்வதோடு, இந்த உடன்படிக்கையின் ஏற்பாடுகளை மாத்திரமே உசாத்துணையாகக் கொண்டு பிணக்குகளைத் தீர்ப்பர்.

பிணக்குத்தீர்ப்பவர்களது தீர்மானம் இறுதியானதாகவும் முடிவானதாகவும் இருப்பதோடு, பிணக்கில் சம்பந்தப்பட்ட தரப்புக்களையும் கட்டுப்படுத்தும்.

## 23.செயற்படும் காலம்

பேச்சுவார்த்தை மூலமான நிரந்தரத் தீர்வொன்றின் விளைவாக வடக்குக் கிழக்கிற்கென ஓர் புதிய அரசாங்கம் நிறுவப்படும்வரை, இந்த ஒப்பந்தம் தொடர்ந்து நடைமுறையிலிருக்கும் அத்தகைய ஒரு தீர்வை எவ்வளவு விரைவாக அடைய முடியுமோ அவ்வளவு விரைவாக அடைவதற்கு இரு தரப்பும் நல்லெண்ணத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடும்.

இருப்பினும்கூட, இந்த ஒப்பந்தத்தில் சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்கிடையே நான்கு வருடங்களின் முடிவில் இறுதி உடன்படிக்கை எதுவும் எட்டப்படாவிட்டால், ஒப்பந்தத்தின் விதிகளை மேலும் அதிகரித்து, தெளிவுபடுத்தி, வலுப்படுத்தும் நோக்கத்தில் இரு தரப்பும் நல்லெண்ணத்தோடு பேச்சுக்களில் ஈடுபடும். ●


www.eelamview.com

# உழவுக்குக் காத்திருக்கும் வயல்

ஏனோ தெரியவில்லை
எம் தாயின் வடிவை
இன்னும் எழுத வேண்டும் போலிருந்தது.
கூறிய கூறல் மிகைக் கூறல் குற்றம்தான்.
தண்டனை எதுவாயினும் தயார்
எவரளிப்பார் சிறை.
தாய் மடியே!
தமிழீழப் பொற்சிலையே!
வாய் கொண்டு உரைக்கவொண்ணா வடிவே!
வசியப் பெண்ணே!
பிள்ளையாய் உன் அழகிற்கிறங்கி உலவிய போதுதான்
என்னே அழகு நீயென அறிந்தேன்.
இரவும், பகலும் உன் தெருவிலும்
வயலிலும், வரம்பிலும் கடலிலும், காட்டிலுமாக
ஒன்றிக்கலந்திளகி உருகிய போதுதான்
நீ பேரழகுப் பெட்டகமெனப் புரிந்தேன்.
நிலவு நாளொன்றில் நின் கூந்தல் விரித்து
கைகளைப்பரத்தி வளைந்து படுத்திருந்தாய்.
அளகபாரம் சமுத்திரமாய் அலையெற்றிக் கிடந்தது.
உன்தலையை யாழ்ப்பாணத்தில் தடவி
கையொன்றை முல்லைத்தீவிலும்
மற்றொன்றை மன்னாரிலும் தொட்டேன்.
வயிற்றை வவுனியாவிற் பார்த்து
இடுப்பைத் திருமலையிற் கண்டேன்.
மூதூர் கதிரவெளியென தாயேயுன் கால்கள் நீண்டிருந்தன.
மட்டக்களப்பில் முழங்காலைத் தொட்டு
உகந்தையில் உன் பாதங்களைச் சேவித்தேன்.
கண்களில் நீர் பனித்தது தாயே
புண்ணியம் செய்தான் உன்பிள்ளை.
ஓவிய அழகே!
உன் அடிமுடி அறிந்ததில் எத்தனை ஆனந்தம்.
உண்ணாமுலை அம்மனல்ல நீ
எத்தனை பேருக்கு மார்பமிர்தம் வழங்கிய தாயாள்.
அவர்களிலொருவன் நானென்பதில்
சிரசில் அடிக்கிறது செருக்கு.
இத்தனை எழிலூற்றிருக்கும் உன்னை
எப்படி இழப்பது?
இவளுன் தாயில்லை என்கிறான் ஒருவன்,
இடுப்போடு வெட்டி இரண்டாக்குவேன் என்கிறாள்
இன்னொருத்தி,
வந்தேறுகுடி என்கிறான் மற்றொருவன்.
எல்லோருக்கும் எம்தாயைச் சிதைப்பதில் அவசரம்.
முலையருந்திய பிள்ளைகளுக்கு மட்டும்
பேச்சடங்கிய பெருந்தூக்கம்.
இங்கு பிறப்பெடுத்த எல்லோரும் வாருங்கடா.
எத்தனை அழகு விதைத்து இலங்கிறாள் எம்தாய்.
விழிகளால் ஒருமுறை தரிசித்தால் போதும்
பேதங்கள் அழியும்
பிரதேச வாதங்கள் தொலையும்.
யாழ்ப்பாணப் பனங்கொட்டைசூப்பி,
வன்னிக்காட்டான்,
மட்டக்களப்பு சூனியக்காரன்,
மன்னார்ச் சூடைமீன்சப்பி,
திருமலைச் செம்படைத்தலையன் எவனடா
இந்த அகராதி எழுதியவன்?
கொண்டுவா: அவனைக் கொன்றாலும் தகும்.
சாதியென்றாய்,
சாத்திரமென்றாய்,
குலப்பெருமையுடன் கூடிய கோத்திரமென்றாய்
இன்னும் இடிந்துவிழவில்லையே இந்தக் கனவுக் கோட்டை.
தாயின் எழில்குலைத்தோர் முகத்திலறைந்து,
எம் வாழ்வைப் பறித்தோரின் உயிரைப் பறித்து,
எமக்கென்றோர் வரலாறெழுதி வைத்துவிட்டு
துயிலுமில்லத்தில் தூங்குகின்றனரே பிள்ளைகள்.
அவர் அருகருகாய் நின்றுதானே போராடினர்.
ஒருவர் மடியில் ஒருவர் உறங்கியபடி,
ஒருவர் உணவை ஒருவருக்குத் தீத்தியபடி
பேதமற்றல்லவா அந்தப்புனிதர் போர்க்களம் நின்றனர்.
இன்றும் அருகருகாய்த்தானே
அவர்களை வளர்த்தியுள்ளோம்
எந்த ஏற்றத்தாழ்வும் எழவில்லையே.
வந்தபகையைச் சங்கரித்துவிட்டு வெளியே வந்தால்
எந்த அசைவுமற்றிருக்கின்றன எல்லாமும்.
கட்டிப்போட்ட கல்லாய்,
பதனப்பெட்டி நீராய்
உறைந்து கிடக்கின்றன ஊத்தைகள்.
புலம்பெயர்ந்த நாடுகளிற்கூட
சாதியின் நாமம்சொல்லிக் கோயில்கள்
பிரதேசப் பெயர்களில் சங்கங்கள்.
என்ன இழிவடா எம் இனத்துக்கு?
முளாசியெரிந்த இந்த நெருப்பிடையும்
மீதமாய் உள்ளதா குப்பை?
வெளியே சிரித்தபடி பொய்புசித்திரிகிறதா
போரிடும் பூமி?
முதுகைக் கழுவாமல் முகத்துக்கேன் ஒப்பனை?
விடியும் வைகறையில்
அழகு கொண்டிருக்கவேண்டாமா எம்வாசல்?
வாரடித்தோடிய வெள்ளத்தில்
அசிங்கங்கள் அள்ளுப்பட்டிருக்க வேண்டுமே
இல்லையெனில் எத்தனை சோகம்.
இன்று நடப்பதென்ன பாதிக்கிணறு கடந்து
நடுக்கிணற்றில் நின்று அல்லாடுகின்றோம்.
அந்தரத்திலல்லவா இன்றைய நாட்கள்?
அவதானம் வேணடும்.
எல்லோரும் ஒன்றாகி நின்றாகவேண்டும்.
மெல்ல நகரவேண்டிய முள்வழி.
பழியை எம்தலையில் இறக்கி
உலகையேமாற்ற நடக்குதோர் நாடகம்.
ஒப்பனை வெகுநேர்த்தி.
கதை வசனம் கச்சிதம்.
நாடகத்தில் மெய்மறந்தால் நமக்குத்தான் அழிவு.
அறுவடை முடித்த வயற்காடு
மறுவுழவுக்காகக் கிடக்கிறது.
மழைக்காகக் காத்திருக்கிறான் வயற்காரன்.
உழவும் விதைப்பும் அறுவடைக்கானது.
விதைநெல்லு பழுதாகாது காத்தல்
நமக்கான கடன்.
காத்திருப்பதில் களங்கமில்லை
அறுவடை நமக்காகும் என்றால்.

வியாசன்

உலைக்களம்

புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்